தமிழக விழிப்பின் முன்னோடி

# ஜி.சுப்பிரமணிய ஐயர்



பூங்கொடி பதிப்பகம்

பெ.சு.மணி

# தமிழக விழிப்பின் முன்னோடி

## ஜி.சுப்பிரமணிய ஐயர்

பெ.சு.மணி

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை–600 004.
தொலைபேசி:24643074

## நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழக விழிப்பின் முன்னோடி ஜி.சுப்பிரமணிய ஐயர் |
| நூலாசிரியர் | : | பெ.சு.மணி |
| மொழி | : | தமிழ் |
| நூலின் பொருள் | : | வரலாறு |
| வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம் மேற்கு வீதி<br>மயிலாப்பூர்,<br>சென்னை-600 004<br>தொ.பே.2464 3074 |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியிட்ட ஆண்டு | : | பூங்கொடியின் முதற்பதிப்பு<br>நவம்பர் 2014 |
| பக்கங்கள் | : | 184 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| தாள் | : | 11.6 கி.கி.வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| ஒளி அச்சுக் கோர்வை | : | எலிசா லேசர்ஸ், சென்னை-4 |
| அச்சிட்டோர் | : | பத்மாவதி ஆப்செட்,<br>சென்னை-600 002 |

**விலை ரூ.80.00**

# முதற்பதிப்பின் என்னுரை

இந்திய வரலாறு பல நீள்துயில்களையும், புதிய விழிப்புகளையும் கண்டுள்ளது. இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த புதிய விழிப்பிற்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஒருவர். இந்த நூற்றாண்டில் மலர்ந்த உலக விழிப்போடு, தமிழக விழிப்பு இணைந்தது. இந்தப் புதிய விழிப்பில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் பங்களிப்பு என்ன? என்பதை விளக்குவதே இந்த நூல்.

ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல், பொருளாதார சமூகச் சிந்தனைகள் இந்த நூலில் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன.

மகாகவி பாரதியார், புதிய விழிப்பின் ஆதிகர்த்தாக்களுள் ஒருவராக ஜி.சுப்பிரமணய ஐயரைக் குறிப்பிட்டது, என்னைச் சிந்திக்க வைத்தது. இதன் விளைவே இந்த நூல்.

ஜி.சுப்பிரமணிய ஐயரின் தமிழ் எழுத்துக்களைத் தேடிக் கண்டு பிடித்து தமது 'குமரி மலர்' என்னும் மாத இதழில் வெளியிட்டு வந்தார் அமரர் ஏ.கே.செட்டியார். ஏ.கருப்பன் செட்டியார் (1911 - 1983) அவருடைய இந்தப் பணி கலங்கரை விளக்கொளியாகத் திகழ்கின்றது.

ஜி.சுப்பிரமணிய ஐயரின் பேரன், திரு.வி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அரும்பாடுபட்டு 'ஜி.சு.'வின் ஆங்கிலக் கட்டுரைகள், ஜி.சு.வைப் பற்றிய ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை எனக்கு வழங்கியதோடு, பல ஐயங்களையும் தீர்த்து வைத்தார்.

நெஞ்சார்ந்த நன்றியறிதலுக்குரிய இத்தகைய உதவிகள் எனக்கு அமைந்தன. இவையனைத்தின் பயனாக உருக்கொண்ட என்னுடைய ஆய்வு, திட்டவட்டமான வடிவம் கொள்ள வாய்ப்பளித்தவர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் " Department of Public Administration" என்னும் துறையின் தலைவர் பேராசிரியர் டாக்டர்

சி.ஏ.பெருமாள் என்பதைத் தனியாகச் சிறப்பித்துச் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை எனக்குண்டு. "லாலா லஜ்பத்ராய் நூற்றாண்டு நினைவு அறக் கட்டளைச் சொற்பொழிவை (1981-82)" நிகழ்த்த பேராசிரியர் வழி வகுத்துத் தந்த பொழுது நான் பெருமகிழ்ச்சியுற்றேன். என் தனி நன்றி பேராசிரியருக்கு என்றும் உரியது. அறக்கட்டளைச் சொற்பொழிவை தனி நூலாக வெளியிட அனுமதி வழங்கிய சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'பூரம் பப்ளிகேஷன்ஸ்' உரிமையாளர் தேசியத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதை ஒரு தேசியத் தொண்டாகக் கருதுபவர். அவரிடம் இந்த நூல் வெளியீடு சம்பந்தமாக பேசியபொழுது, அடுத்த நாளிலேயே அச்சிட ஏற்பாடு செய்து விட்டார். இத்தகைய செயல் வீரருக்கு என் நன்றியைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த நூலில் ஆங்கிலத்திலேயே பல மேற்கோள்களைத் தந்துள்ளேன். இதற்குக் காரணம் அசல் வடிவங்களின் முக்கியத்துவத்தைக் கருதியதே ஆகும். இதை ஒரு குறையாக எண்ண வேண்டாம் என தமிழன்பர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

11 இராமகிருஷ்ணாபுரம் 2-ஆவது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை 600 033

**பெ.சு.மணி**

# வாழ்த்துரை

நான் ஆர்வமுடன் எதிர்பார்த்த நூல் வெளி வந்துவிட்டது; 'தமிழக விழிப்பின் முன்னோடி' என்னும் பொருட் செறிவுள்ள தலைப்பில் வெளி வந்துள்ளது மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த நூலிற்கு நன்றி கூறி வரவேற்கத் தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளதோடு, எங்கள் குடும்பத்தினர் தனிப்பட்ட முறையில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். என்னுடைய தகப்பனார் விசுவநாதய்யர், ஜி.சுப்பிரமணிய ஐயரின் ஒரே புதல்வர். ஆகவே, பேரன் என்ற வகையில், தனிப்பட்ட முறையில், நன்றி கூறுகின்றேன்.

நானறிந்த வரையில் என்னுடைய தாத்தாவின் நினைவு நாளை முதன் முதலில் கொண்டாடத் தொடங்கியவர் இந்நூலாசிரியர் பெ.சு.மணி அவர்களே ஆவார்.

1977–ல் சென்னை ராயப்பேட்டை, இந்திய ஊழியர் சங்கத்தில், தமிழ் எழுத்தாளர்கள் பங்கேற்க, ஜி.சுப்பிரமணிய ஐயரின் 61–ஆம் நினைவு நாளைக் கொண்டாடினார் அன்பர் பெ.சு.மணி. 1979–ல் "ஜி.சுப்பிரமணிய ஐயர் நினைவுக்குழு"வை அமைத்து பெரிய அளவில் மிக்க சிறப்போடு 63–ஆம் நினைவு நாள் கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் அன்னாளைய தமிழ் நாட்டு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, ஜி.சுப்பிரமணிய ஐயரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நூலில் நான் காணும் முதல் சிறப்பு, 'ஜி.சு.'வின் தமிழ் எழுத்துகள் பெருமளவில் திரட்டப் பெற்று ஆய்வு செய்யப்பட்டுள்ளதாகும். இதற்கு முன் ஜி.சு.வின் ஆங்கில எழுத்துகள் தாம் அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளன.

இந்த நூலைப் படைப்பதற்கு முன்பே, ஜி.சு.வின் கருத்துகளை தன்னுடைய பிற நூல்களில் விளக்கியிருக்கிறார் பெ.சு.மணி என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றி ஆய்வாளர் பெ.சு.மணி நிகழ்த்திய மூன்று நாள் அறக் கட்டளைச் சொற்பொழிவுகளையும் கேட்டேன். இறுதி நாளில் தலைமை வகித்த பேராசிரியர் சி.ஏ.பெருமாள் அவர்கள் குறிப்பிட்ட பாராட்டுரையை நினைவு படுத்திக் கொள்கிறேன். "பெ.சு.மணியின் சொற் பொழிவுகள், டாக்டர் பட்டம் பெற விரும்பும் ஆய்வுலக மாணவர்களுக்கு கருத்துச் சுரங்கங்களாக விளங்குகின்றன" என பேராசிரியர் பாராட்டினார்..

ஜி.சுப்பிரமணிய ஐயரின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தி யுள்ளது இந்நூல்; நூலாசிரியரை வாழ்த்துகின்றேன்; தமிழ் மக்களும் இந்நூலை வரவேற்று வாழ்த்துவார்கள் என நம்புகின்றேன்.

திருவல்லிக்கேணி,
சென்னை-5

வி.சுப்பிரமணிய ஐயர்

# பதிப்புரை

பாரதியார், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. ஐயர், காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா, கே.எஸ்.வேங்கடரமணி, சுவாமி விபுலானந்தர், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., வெ.சாமிநாத சர்மா, டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலானோர் வாழ்க்கை வரலாறுகளை எழுதிப் புகழ்பெற்ற எங்கள் ஆசிரியர் பெ.சு.மணி தமிழக விழிப்பின் முன்னோடி ஜி.சுப்பிரமணிய ஐயரின் வாழ்க்கை வரலாற்றையும் ஆய்வு நெறி விளங்க எழுதியுள்ளார்.

வழக்கம்போல நூல்தோறும், துறைதோறும் புதிய செய்திகளை எப்பாடு பட்டாவது அகழ்ந்தெடுத்து தரும் அவருடைய எழுத்துப் பணியின் தனிச் சிறப்பை இந்நூலிலும் காண்கின்றோம்.

குறிப்பாக ஜி.சுப்பிரமணிய ஐயரின் "ஆசார திருத்த வியாசங்கள்" குறித்து அவர் அளித்துள்ள செய்திகள் தமிழ் நாட்டின் சமூக சீர்திருத்த வரலாற்றாய்விற்கு மிக முக்கியமானது.

வே.சுப்பையா

'பூங்கொடி' பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர்,
சென்னை 600 004
தொ.பே: 2464 3074

பணிவார்ந்த காணிக்கை



அமரர் வி.சுப்பிரமணிய அய்யர் (18.4.1916 - 13.9.2005)
அமரர் திருமதி எஸ்.ஜெயலட்சுமி அம்மையார்
(19.4.1926 - 30.7.2011)

-பெ.சு.மணி

# முன்னுரை

தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுவரும் புதிய விழிப்பின் முன்னோடி ஜி.சுப்பிரமணிய ஐயர் (1855–1916) பற்றிய என் ஆய்வில் நான் கண்டறிந்த பேருண்மை இதுதான்.

“நாட்டுப்பற்று, சமூக சீர்திருத்தப் பற்று, மொழிப் பற்று மூன்றும் நிறைந்த முதல் தேச பக்தர் ஜி.சுப்பிரமணிய ஐயர்தான்.”

‘ஜி.சு,’வின் 63–வது நினைவு நாளை முன்னிட்டு 18.4.1979இல் வெளியிட்ட சிறு வெளியீட்டின் தலைப்புப் பெயராக முற்கூறியதை வைத்தேன்.

அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரைச் சென்றடைய வேண்டிய நியாயமான புகழ் சென்றடையவில்லை.

இதற்குரிய ஒரு காரணத்தை சுதேசமித்திரனில் துணையாசிரியராகப் பணியாற்றிய தமிழ்ப் பேரறிஞர் குருமலை சுந்தரம் பிள்ளை, அவருடைய “ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரம் – 1807” எனும் நூலில் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

“இராஜாங்க விஷயங்களில் மட்டும் உழைத்த ஸ்ரீ திலகரையும், ஆசார சீர்திருத்தங்களில் மட்டும் உழைத்த ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலுவைப் பார்க்கிலும் ஆசார சீர்திருத்தம், இராஜாங்க சீர்திருத்தம் இரண்டிலுமுழைத்த நமது ஐயர் அதிகப் பெயரையும், அதிகப் பொதுஜன மதிப்பையும் பெற்றிருக்க வேண்டியது நியாயமாயிருந்தும், அவருக்கு இராஜாங்க சம்பந்தமாய்க் கிடைத்த நற்பெயரும் கூட அவருடைய ஆசார சீர்திருத்தச் செயல்களால் மழுக்க மடைந்த விட்டது. இதுவே சென்னைப் பெரிய மனிதர்கள் நமது ஐயர் மீது காட்டி வந்திருக்கும் வெறுப்பிற்கும் காரணமாயிருக்கலாம். ஆதலால் இராஜாங்க விஷயத்தில் உழைத்ததற்காகக் கிடைத்த மதிப்பிலிருந்து ஆசார சீர்திருத்த செயல்களால் உண்டான வெறுப்பைக் கழித்து

மிச்சமிருக்கும் மதிப்பையே ஜி.சுப்பிரமணிய ஐயர் இப்போது பெற்றிருக்கிறார்'' (பக் 84 – முற்குறிப்பிட்ட நூல்)

அவர் காலத்தில் விடுதலைப் போரின் மாவீரர்களாக விளங்கிய பாரதியார், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் 'ஜி.சு.'வின் வரலாற்றுப் பாத்திரத்தை விண்டு வைத்துள்ளார்கள். (இந்நூலில் விவரமாகக் கூறப் பெற்றுள்ளது.)

மதிப்புரைகளை சூத்திரமாக எழுதுவது மகாகவி பாரதியாருக்கு கைவந்த கலை. 'தமிழ் நாட்டின் விழிப்பு' எனும் சுதேசமித்திரன் (1918 மே 3, ப–3) கட்டுரையில் 'ஜி.சு.'வைப் பற்றிய துல்லியமான மதிப்புரையை பின்வருமாறு எழுதினார்.

"இராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன் சுப்பிரமணிய ஐயரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்பிற்கு ஆதி கர்த்தாக்களாக விளங்கினர்.''

தமிழகத்தின் புதிய விழிப்பிற்கு எவ்வாறெல்லாம் 'ஜி.சு.' பாடுபட்டார் என்பது பொதுவாக அவரைப்பற்றிய ஆய்வில் ஆங்கில நூல்களின் மூலங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன. இந்நூலில் அவருடைய தமிழ் நூல்களிலிருந்தும் அவரைப் பற்றிய தமிழ் நூல்களில் இருந்தும் சான்றுகள் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

மேலே குருமலை சுந்தரம் பிள்ளை மிகச் சரியாகச் சுட்டிக்காட்டியதில் 'ஜி.சு.'வின் சமூக சீர்திருத்தச் செயல்கள் அவரைப்பற்றிய அக்கால மதிப்பீட்டில் எதிர்விளைவை ஏற்படுத்தின.

தமிழக சமூகசீர்திருத்த வரலாற்றை எழுதும் தமிழக ஆய்வாளர்கள் பலர் சமூக சீர்திருத்த வரலாற்றின் ஊற்றுக் கண்களைக் கண்டு கொள்வதில்லை. இந்த நோக்கில் நான் 'ஜி.சு.'வின் பங்களிப்பை எடுத்து ஒரு கூட்டத்தில் வைத்துப் பேசினேன்.

கூட்டத்திற்கு பிராமணரல்லாதார் இயக்கச் சிந்தனையாளர்களில் ஒருவரான ஓர் அறிஞர் வந்திருந்தார். 'ஜி.சு.'வின் உரையொன்றில், "சாதி அமைப்பு இமயமலை போன்றது; ஒன்று நாம் அதை வீழ்த்த வேண்டும், இல்லையேல் நாம் வீழவேண்டும்'' என்று கூறியதை

எடுத்துக் காட்டினேன். இந்தக் கருத்து அந்த பிராமணரல்லாதார் இயக்கச் சிந்தனையாளரை நெகிழ வைத்துவிட்டது. 'ஐயர்' எனும் சாதிப் பெயர்ச் சொல்லை மட்டும் கருத்தில் கொண்டு ஜி.சு.'வின் சாதி எதிர்ப்பு - ஒழிப்பு செயல்களை கண்டுகொள்ளாமல் புறம் தள்ளுகிறார்கள்.. 'ஐயர்' எனும் சொல்லிற்கு 'தலைவர்' எனும் சீரிய பொருள் உண்டு என்பதையும் 'அவர்கள்' அறிய வேண்டும் என்று குறிப்பிட்டார். "தாங்கள் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்த வரலாற்றை எழுத வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். இந்நூலில் சமூகசீர்திருத்தச் செயல்களில்'ஜி.சு.'வின் பங்களிப்பு கூறப் பெற்றுள்ளது.

மேடையில் சமூகசீர்திருத்தம் பற்றி முழங்குபவர்களில் எவ்வளவு பேர் சொந்த வாழ்க்கையில் சமூக சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்பதும் ஆய்விற்குரியது.

*'சொல் வேறு, 'செயல் வேறு' என்றில்லாமல்* 'ஜி.சு.'பத்து வயதில் விதவையாகிவிட்ட தன் அருமை மூத்த மகள் சிவப் பிரியைக்கு நடத்திய விதவைத் திருமணத்தைக் குறித்த விபரம் இந்நூலில் முக்கியப் பகுதிகளில் ஒன்றாகும்.

இது குறித்து 'ஜி.சு.'வின் ஒரே மகன் வயிற்றுப் பேரனான வி.சுப்பிரமணிய ஐயர் என்னிடம் சில செய்திகளைப் பகிர்ந்து கொண்டார். இந்நூலிலும் அவற்றைப் பதிவு செய்துள்ளேன். நூலினுள் கூறப்படாதனவற்றை இங்கு முன்னுரையில் வி.சுப்பிரமணிய ஐயரின் நேர்காணலில் (2.4.1991இல்) கூறப்பட்ட செய்திகளை கூறுகின்றேன்.

"10 வயதில் மே, 1866-இல் மாயவரத்தில் திருமணம். அடுத்த ஆண்டில் சிவப்பிரியை கணவனை இழந்தார்.

ஜி.சு'வின் இரண்டாவது அண்ணன் பிரணதார்த்திஹர அய்யரின் மகள் திரிபுரசுந்தரியும் கணவனை இழந்தார். எனவே இவ்விருவர் மறுமணங்களையும் சேர்த்து நடத்தலாம் என்று 'ஜி.சு.' அண்ணாவிடம் கூறினார். ஆனால் அதற்கு பிரணதார்த்திஹர அய்யர் இணங்கவில்லை. சிவப்பிரியை மறுமணம் செய்துகொண்டவர் பெயர் இராமசுவாமி, மன்னார்குடியைச் சார்ந்தவர். வழக்கறிஞர் 'ஜி.சு.'வின் திருவல்லிக்கேணி பெரிய தெரு வீட்டிலேயே தங்கினார்.

துரதிர்ஷ்டவசமாக இவருக்கு வாயில் புற்றுநோய். சிவப்பிரியைக்கு மறுமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையவில்லை. சில ஆண்டுகளில் காலமாகிவிட்டார். மகளின் 'தகனக்கிரியை' முடித்துக் கொண்டு வீடு திரும்பிய சமயத்தில் இராமசுவாமி 'ஜி.சு.'விற்கு பிரச்னை ஏற்படுத்தினார். 'ஜி.சு.'வின் பெயரில் உள்ள வீட்டைத் தன் பெயருக்கு மாற்றித் தரவேண்டும் என வற்புறுத்தினார். இதனால் சீற்றமடைந்த 'ஜி.சு.'வின் உறவினர்கள் ராமசுவாமியை வீட்டை விட்டு வெளியேற்றினர்."

வி.சுப்பிரமணிய ஐயர் 'ஜி.சு'வைக் குறித்து ஓர் ஆவணக் களஞ்சியத்தை உருவாக்க எடுத்த முயற்சிகள் பலப்பல. குடும்பத்தின் உற்றார் – உறவினர்களுக் கெல்லாம் கடிதங்கள் எழுதினார். 'ஜி.சு.'வைப் பற்றிய செய்திகளைத் திரட்டினார். அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தினார். இவற்றுள் ஒன்றை 2.4.2001-ல் என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

இலண்டனில் வெல்பி கமிஷன் முன்பு சாட்சி சொல்ல ஜி.சு. சென்றிருந்தார். கடல் தாண்டும் பயணத்தை சில வைதிகர்கள் எதிர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

'ஜி.சு.'வையும் விட்டு வைக்கவில்லை. அவரை சாதி விலக்கு செய்யப் போவதாக மிரட்டியது. பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தனர். பிராமணர்களுக்கு ஒரு பவுன் தட்சணை வழங்கி சடங்கு செய்ய வேண்டும் என்றும் 'பிராம்மண வைதிகம்' விதித்தது.

சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக 'ஜி.சு.'வும் இணங்க வேண்டியதாயிற்று. சடங்குகள் 'பந்தி போஜனம்' முடிந்த பிறகு தட்சணையைக் கொடுப்பதாகச் சொன்னார், ஜி.சு. சடங்கு முடிந்ததும் இரண்டு ரூபாய் மட்டுமே ஒவ்வொரு பிராமணருக்கும் கொடுக்கப்பட்டது."

இந்தச் செய்தியைக் கூறிவிட்டு நான் எடுத்த குறிப்பில் வி.சுப்பிரமணியம் என்று ஆங்கிலத்தில் கையெழுத்திட்டார்.

வ.வே.சு.ஐயரையும் 'பிராம்மண வைதிகம்' இவ்விஷயத்தில் விட்டு வைக்கவில்லை. சுவாமி விவேகானந்தரையும் தட்சணேசுவரர்

கோவிலில் நுழைய கடல்தாண்டிய பயணத்திற்காக தடை விதிக்கப்பட்டது. இவையெல்லாம் இங்கு நினைவுகூரத் தக்கன.

என்னிடம் மிக நெருக்கமாக நட்புறவுடன் பழகியவர் வி.சுப்பிரமணிய ஐயர். தாம் சேகரித்து வைத்திருந்த 'ஜி.சு. ஆவணக் களஞ்சியத்தை என் பார்வைக்குத் திறந்து வைத்தார்.

"புதிய விழிப்பின் முன்னோடி - ஜி.சுப்பிரமணிய ஐயர்" எனும் நூலுக்கு (1987 பூரம் பப்ளிகேஷன்ஸ் - மேற்கு மாம்பலம்) எழுதிய வாழ்த்துரையில்,

"நானறிந்தவரையில என்னுடைய தாத்தாவின் நினைவு நாளை முதன்முதலில் கொண்டாடத் தொடங்கியவர் இந்நூலாசிரியர் பெ.சு.மணி அவர்களே ஆவார்!" என்று குறிப்பிட்டு 'ஜி.சு.' புகழ் பரப்பும் பணியை ஓர் இயக்கமாக நடத்தி வரும் என்னைப் பெருமைப் படுத்தினார்.

அவர் மறைவிற்குப் பிறகு அவருடைய இல்லத்தரசி ஜெயலட்சுமி அம்மையார் அருமைக் கணவர் பாதுகாத்து வைத்திருந்த 'ஜி.சு.'பற்றிய ஆவணங்களை அவ்வப்பொழுது பார்வையிட உதவினார். இது மட்டுமல்ல, தனது மகன் கணேசனிடம் 'ஜி.சு.' பற்றிய அனைத்து ஆவணங்களையும், சிறு சிறு துண்டுக் குறிப்புகள் உட்பட அனைத்தையும் பெ.சு.மணியிடம் சேர்த்துவிடவும் என்று பணித்தார். தாய் சொல்லைத் தட்டாத மகனான கணேசன் அவர்களும் ஒரு நாள் இரு பெரிய மூட்டைகளுடன் நங்கநல்லூரிலிருந்து மேற்கு மாம்பலத்தில் உள்ள என் வீட்டிற்கு வந்து ஒப்படைத்தார். இத்தகைய அரும்பெரும் செயலுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன்.

'ஜி.சு.'வைப் பற்றி இதையடுத்து மேலும் மகத்தான ஓர் விரிவான ஆய்வு நூலை எழுதி வெளிக் கொணர வேண்டும் என்று வி.சுப்பிரமணிய ஐயரின் மகன் அன்பர் எஸ்.கணேசன் கேட்டுக் கொண்டார்.

நான் இதை செய்து முடிப்பேன் என்று வாக்களித்துள்ளேன். நூலைப் பதிப்பித்துத் தர நான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்று 'பூங்கொடி' வே.சுப்பையாவும் உறுதி அளித்துள்ளார்.

இந்நூலை அமரர் வி.சுப்பிரமணிய ஐயர் – ஜெயலட்சுமி இணையருக்குக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.

தாய் தந்தையர் படத்தைத் தக்க குறிப்புகளுடன் அன்புடன் வழங்கிய திரு கணேசன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கம்போல் இந்நூலை வெளியிட்டு உதவிய எனதருமை குடும்ப நண்பர் 'பூங்கொடி' சுப்பையாவிற்கும் என் தனி நன்றி உரியது.

**பெ.சு.மணி**

23/11, இராமகிருஷ்ணாபுரம் 2–வது தெரு,
*மேற்கு மாம்பலம்*
*சென்னை–600 033*

# ஸ்ரீ. ஜி.சுப்பிரமணிய ஐயர்

## வ.உ.சிதம்பரம் பிள்ளை (1916)

சென்னை மாகாணத் திருவையாற்றிற் பிறந்து
சென்னைமா நன்ன கரைச் சேர்ந்து கற்று–முன்னை
உவாத்தியாயர் நிலையில் ஒப்பற்று நின்று
தவாத்திறனை மாணவர்க்குத் தந்து (1)

பின்னை இந்து பத்திரிகை பெற்றுவளர்த் தாங்கதனால்
அன்னை இந்து தேசத்தை ஆள்கின்ற–மன்னர்க்குக்
காக்குமுறை யெல்லாம் கழறி இந்தியர் வளர
ஊக்குமுறை யெல்லாம் உரைத்து 2)

தமிழ் மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவுள்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க்–கமிழ்தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு (3)

நம்முடைய முன்னிலையும் நம்முடைய மென்னிலையும்
நம்முடைய பின்னிலையும் நம்மன்னர்–தம்முடைய
வன்னிலையும் உண்ணிலையும் மற்றையமேல் நாட்டாரின்
பன்னிலையும் மெண்மேல் பகர்ந்து (4)

கல்வியொடு வாணிகமும் கைத்தொழிலும் மேம்படுத்தச்
செல்வமொடு மாணறங்கள் சேரும்பின்–பல்வகைய
இன்பம் புகழ்சால் பிணையில் துணைவலியாம்
மன்பதம் பின் சேரும் வளர்ந்து (5)

என்றெல்லாம் கூறி நம் இந்தியரும் ஏனையரும்
நன்றெல்லாம் கொள்ளற்கு நன்னெறியாய்-நின்றுதவும்
ஆசாரந் தன்னோடே ஐக்கியத்தின் நன்மையும் நம்
ஆசானாய் நின்றே யறைந்து (6)

நந்தேசம் என்னுமொரு நன்னினைவும் ஒற்றுமையும்
நந்தேச மெங்கும் நனிநாட்டி-நந்தேச
ஆட்சியினை நாம் கொண்டறம்பலவும் செய்திங்கு
மாட்சியுறக் காட்டி வழி (7)

நேசத்தால் எல்லோரும் நெஞ்சத்துட் கொண்டிடவும்
தேசத்தா ரெல்லோரும் தெய்வமான-வாசத்தோ
டெஞ்ஞான்றும் போற்றிடவும் எம்போல்வார் வாழ்த்திடவும்
இஞ்ஞான்றும் நீரத்திவ் விடம் (8)

வானுலகம் புக்கு மகிழ்வுற்று வானவரின்
கோனுடனே பேசிக் குலவியவன்-தேனெனவே
செப்புமின்ப மெல்லாம் சிறியன வாம் என்றிகழ்த்து
ஒப்புயர்வில் மெய்யுலகம் ஓர்ந்து (9)

அங்கு மெய்ப் பொருளோ டைக்கியமாய் நின்றிந்நாள்
இங்குற்ற துன்பமெலாம் ஏகுதற்குக்-கங்குல்
பகல் கடந்து பாடு பாடுகின்றான் சேயை
நிகர் சுப்பிரமணி யனே

நன்றி:- குமரி மலர்; ஜனவரி 1972

# புதிய விழிப்பின் முன்னோடி

## சில பாராட்டுரைகள்

நாட்டுப் பற்று, மொழிப்பற்று, சமூக சீர்திருத்தப் பற்று எனும் மூன்று பற்றுகளில் ஒன்று விடாமல் மூன்றும் நிறைந்து இனிது விளங்கும் முதல் தேச பக்தர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் என்றால் அது மிகையாகாது.

சுதேசமித்திரனில் ஜி.சுப்பிரமணிய ஐயருடன் இணைந்து துணை ஆசிரியராகப் பணிபுரிந்த தமிழறிஞர் குருமலை சுந்தரம் பிள்ளை அவர்கள் 1907–லேயே "ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்" எனும் அரிய வாழ்க்கை வரலாற்று நூலை திறனாய்வின் அடிப்படையில் எழுதி வெளியிட்டார். இந்த நூல்தான் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரின் பெரும் புகழைப் பரப்பத் தோன்றிய முதல் நூலாகும். இந்த நூலில் குருமலை சுந்தரம் பிள்ளை கூறியுள்ள பின்வரும் கருத்து, நினைவிற்குரியது.

"ஸ்ரீ நௌரோஜி பாம்பே மாகாணத்துக்கு இருப்பது போல நமது ஐயரும் சென்னை மாகாணத்துக்கு முதலாவது தேச பக்தராகின்றார் என்னும் உண்மை அவருடைய சரித்திரத்தை ஆராய்ச்சி செய்யும் எல்லோருடைய மனத்திலும் முக்கியமாய்ப் பதிய வேண்டிய உண்மையாகும்."

## தேசியத்தின் திரிசூலம் வாழ்த்தியது

*தேசியத்தின் திரிசூலமாய்த் திகழ்ந்த பாரதி–வ.உ.சி. – சுப்பிரமணிய சிவா மூவரும் ஜி.சுப்பிரமணிய ஐயரின் வரலாற்றுப் பாத்திரத்தை வலியுறுத்தியுள்ளனர்.*

## பாரதியார் பாராட்டுரை

*"தமிழ் நாட்டின் விழிப்பு" எனும் தலைப்பில் பாரதியார் வலியுறுத்திய கருத்து வருமாறு:*

*"ராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய ஐயரும், இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ் நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர்."*

*1918–ல் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றிப் பாரதியார், இவ்வாறு கூறினார். இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே 1907–ல் பாரதியார், ஜி.சுப்பிரமணிய ஐயரின் விழிப்புணர்ச்சியை பின்வருமாறு பாராட்டியுள்ளார்.*

*"மற்ற மாகாண வாசிகளால் 'இருளடைந்த மாகாணம்' என்றழைக்கப்படக்கூடிய பாக்கியம் பெற்ற நமது சென்னையில் நாம் முன் கூறியபடியே ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய அய்யரும் அவரைப் பின்பற்றியொழுகும் சிலரும் தவிர, மற்றபெரும் பெயர்ளெல்லாரும் தாங்கள் பழைய சாதியைச் சார்ந்த பரமசாதுக்கள் என்று சொல்லிக் கொண்டு வீட்டிற்குள் தூங்குகின்றார்கள்." (பக்கம் 23 பாரதிதரிசனம் 2; 1907)*

## வ.உ.சி.யின் வாழ்த்து

*1916–ல் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மறைந்த பொழுது, அவருடைய நெருங்கியத் தோழர் வ.உ.சி. பத்து வெண்பாக்களைக் கொண்ட புகழ் மாலையைச்*

*சூட்டினார். மூன்றாம் வெண்பாவில் தமிழரைத் தட்டி யெழுப்பின ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரும் பணிகளில் ஒன்றை பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.*

தமிழ் மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவில்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்த் – தமிழ தென்ன
செந்தமிழில் நம்முயர் சுதேசத்தரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு.

*(பக்கம் 60; குமரி மலர்; ஜனவரி 1972; ஆசிரியர் ஏ.கே.செட்டியார்).*

**சுப்பிரமணிய சிவா புகழுரை**

*கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் போர்க்கள மறவராக விளங்கிய சுப்பிரமணிய சிவம், ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களைப் பற்றி கூறியதாவது:*

*"சுதேசமித்திரன் பத்திராதிபராயிருந்த பிரஹ்மஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐய்யரவர்களிடத்தில் நமக்கு அளவற்ற மதிப்பு உண்டு. இவர் நமது தமிழ்நாட்டிற்கு அளவற்ற நன்மைகள் செய்திருக்கின்றார் என்பது எவராலும் மறுக்கக் கூடாததொரு கார்யம். தேசாபிமானமும் பாஷாபிமானமும் இன்னவையென்று எவரும் உணராத அக்காலத்தில் அதாவது, 'சுதேசமித்திரன்' ஆரம்பிக்கப் பட்ட காலத்தில் ப்ரஹ்ம ஸ்ரீ சுப்பிரமண்ய ஐயரவர்கள் தாம் நடத்திக் கொண்டிருந்த 'ஹிந்து' என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை விட்டுவிட்டுச் சாதாரண ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ் பத்திரிகையை ஆரம்பித்தது மிகவும் வியக்கத்தக்கது." (பக்கம் 199: ஞானபாநு, ஆகஸ்ட் 1915, ஆசிரியர் சுப்பிரமணியசிவம்).*

**சுரேந்திரநாத் பானர்ஜி பாராட்டுரை:**

*1914–ல் சென்னை மகாஜனசபையில், திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் அறுபதாம்*

ஆண்டு நிறைவு விழாவின் அடையாளமாக, வங்கம் தந்த தேசிய மாவீரர் சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களால் ஜி.சுப்பிரமணிய ஐயரின் முழு உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் சுரேந்திரநாத் பானர்ஜி தமது பாராட்டுரையின் ஓரிடத்தில் பின்வருமாறு கூறினார்:

"Mr.Subramania Iyer, let me say, had been the instrument of popular Political work in the widest sense of that word in south India".

(பக்கம் 5; New India; December 29, 1914. Editor-Annie Besent).

**வாழ்க்கைச் சுருக்கம்:**

'தேசாபிமானிகள் சிம்மம்', 'தக்ஷிணத் திலகம்', 'சென்னை சிம்மம்', 'எடிட்டர் சுப்பிரமணிய ஐயர்' எனப் பலவாறு பாராட்டப் பெற்ற ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சுருக்கமாக அறிந்து மேலே செல்வோம்.

இவர் திருவையாற்றில் 1855 ஜனவரி 19ஆம் தேதி பிறந்தார். திருவையாற்றில் ஆரம்பப் பள்ளியில் பயின்று, பின்னர் தஞ்சாவூர் எஸ்.பி.ஜி.உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்து 1869-ல் மெட்ரிகுலேஷன் பரிட்சையில் தேறினார். பதின்மூன்றாம் வயதிலேயே தந்தையை இழந்தார். 1871-ல் எஃப்.ஏ. பரிட்சையில் தேறினார். 1874-ல் சென்னையில் பள்ளி ஆசிரியர் போதகராகப் பயிற்சி பெற நார்மல் பள்ளியில் (இப்பொழுது ஆசிரியர் கல்லூரி) சேர்ந்தார். 1875-ல் ஸ்காட்லாந்து மிஷன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். இங்கு, முடும்பை வீரராகவாச்சாரியாரின் அறிமுகமும், நட்பும் ஜி.சுப்பிரணிய ஐயருக்குக் கிடைத்தது. இருவரும் 'இரட்டையர்' எனப் புகழ்பெற்று அரசியல் பணியில் ஈடுபட்டனர். 'இந்து'வின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் இருவரும் இணைந்து

செய்த சாதனை தனி ஆய்விற்குரியது. கல்லூரியில் சேர்ந்து படிக்க வாய்ப்பில்லாமல், சொந்தமாகவே படித்து தத்துவம், தருக்க சாத்திரத்தை பாடங்களாகக் கொண்டு 1877–ல் பி.ஏ. பரிட்சை தேறினார். 1879–ல் திருவல்லிக்கேணி ஆங்கிலோ–வெர்னாகுலர் பாட சாலையின் (தற்பொழுது இந்து உயர் நிலைப்பள்ளி), தலைமை ஆசிரியரானார்.

1888–ல் திருவல்லிக்கேணியில் ஓர் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தி அதில் முஸ்லீம்களையும் தீண்டாதார் எனப் பட்டோரையும் சேர்த்துக் கொண்டார்.

1878–ல் இந்து பத்திரிகையையும், 1882–ல் சுதேச மித்திரனையும், 1902–ல் 'யுனைடெட் இந்தியா' வையும் தோற்றுவித்து இதழாசிரியராகச் சிறப்பெய்தினார். 1898–ல் 'இந்து'வை விட்டு விலகினார். 1915–ல் சுதேசமித்திரனை ஏ.ரங்கசாமி ஐயங்காரிடம் ஒப்படைத்தார். 1916 ஏப்ரல் 18–ல் காலமானார்.

## காலமும் களமும்

மனித அறிவாற்றலை மலரவிடாமல் கூம்பிக் கிடக்கச் செய்யும் தடைகள், கட்டுப்பாடுகள், ஆதிக்கங்கள் நிறைந்த இந்திய சமூக அமைப்பு பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் முரண்பாடுகளையும், நெருக்கடிகளை யும் சந்தித்து தீர்வு காண வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டது. இந்தக் கால கட்டத்தில் ஐரோப்பிய– ஆங்கிலேய வர்த்தக முதலாளித்துவ வர்க்கமும், அது தோற்றுவித்த காலனி ஆதிக்கமும். கிருஸ்துவ மதபோதகர்களின் கட்டுப்பாடு மிக்க ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த இந்த மத விரோதப் பிரசாரமும், மத மாற்ற முயற்சிகளும், ஐரோப்பாவில் தோன்றிப் பரந்த

தொழில் வாதம், ஜனநாயகம், தேசியம் ஆகிய முப்பெரும் தத்துவங்களின் தாக்கமும், இந்திய சமூக அமைப்பை முற்கூறிய கட்டாய நிலைக்குத் தள்ளியது.

கலாசாரம், அரசியல் ஆகிய இரு முனைகளில் இந்திய சமூக அமைப்பு போராட்டத்தை தொடங்க வேண்டிய தாயிற்று.

புதிய அறிவொளி, இயக்கத்தின் தந்தையாக ராஜா ராம் மோகன் ராய் (1772–1883) தோன்றி புதிய சமய–சமூக இயக்கங்கள் உருவாக வழி வகுத்தார்.

புதிய சமய–சமூக இயக்கங்கள் இந்து மதத்திலும், இஸ்லாமிய மதத்திலும் தோன்றின.

பிரம்ம சமாஜம் (1823), பிரார்த்தனை சமாஜம் (1867) ஆர்ய சமாஜம் (1875); இராமகிருஷ்ணா மிஷன் (1886); தியோசாபிகல் சொஸைடி (1875); சமரச சுத்த சன்மார்க்க சங்கம் (1865); மகாத்மா ஜோதிர்பாபூலேவின் "சத்ய ஷோதக் சமாஜ்" (1873); ஆகியவை இந்து சமய–பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளை நெருக்கடிகளைத் தீர்க்க முயன்றன.

வஹாபி இயக்கம், அஹமதியா இயக்கம், டியோ பாண்ட் தத்துவ இயக்கம், அலிகார் இயக்கம் முதலானவை இஸ்லாமியர்களிடையே தோன்றிய புதிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண முன் வந்தன.

இந்த இயக்கங்கள், இந்திய அரசியல் இயக்கங்களுக்குத் தேவைப்பட்ட கலாசார புரட்சியை நிகழ்த்தி உதவி புரிந்தன.

டாக்டர் அம்பேத்கர் அவர்களும், சமய–சமூக இயக்கங்களுக்கு இடையே உள்ள தொடர்பை 1936–ல் மிகத் தெளிவாக, பின்வருமாறு விளக்கியுள்ளார்.

*"அரசியல் புரட்சிகளுக்கு முன் சமய – சமூகப் புரட்சிகள் ஏற்பட்டிருப்பதற்கு சரித்திரத்திலே ஏராளமான* **திருஷ்டாந்தாங்கள்** *இருக்கின்றன. லூதர் தோற்றுவித்த மத சீர்திருத்த இயக்கமே ஐரோப்பிய தேசத்தாரின் அரசியல்விடுதலைக்குத் தூண்டுகோலாயிருந்தது. இங்கிலாந்தில் பியூரிட்டன் இயக்கம் அரசியல் சுதந்திரத்துக்கும் அடிப்படையாக இருந்தது. புது உலக (அமெரிக்க) ஸ்தாபனத்துக்கும் பியூரிட்டன் இயக்கமே காரணம். அமெரிக்க விடுதலைப் போர் வெற்றிக்கும் பியூரிட்டன் இயக்மே காரணமாயிருந்தது. பியரிட்டன் இயக்கம் மதச் சார்பான இயக்கமே. முஸ்லீம் சாம்ராஜ்ய ஸ்தாபனத்துக்கும் மதமே காரணம். அரேபியர் அரசியல் அதிகாரம் பெறு முன் முகமது நபி தோற்றுவித்த மதப் புரட்சியில் ஈடுபட்டுப் பழக்கம் பெற்றிருந்தார்கள். இந்திய சரித்தரமும் என் அபிப்பிராயத்தை வலியுறுத்தவே செய்கிறது. சந்திரகுப்தன் நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் புத்தர் சமய சமூகப் புரட்சி நடத்தி வெற்றி பெற்றிருந் தார். சிவாஜி நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் மகாராஷ்டிர ஞானிகள் சமய சமூக சீர்திருத்தப் போர் நடத்தியிருந்தார்கள். சீக்கியர் நடத்திய அரசியல் புரட்சிக்கு முன் குருநானக்கின் சமய சமூகப் புரட்சி நடைபெற்றிருந்தது." (பக்கம் 37; சாதியை ஒழிக்க வழி; 'குடி அரசு' பதிப்பகம்; 1936)*

*கலாசார இயக்கங்கள் இந்திய சமூக மறு சிந்தனையில் முற்போக்கான வழிமுறைகளுக்கு ஓரளவு பாடுபட்டது போல, கல்கத்தா, சென்னை, பூனா, பம்பாய் நகரங்களில் தோன்றிய* **மாநில அரசியல் அமைப்புகள்** *அரசியல் சிந்தனைக்கு ஆக்கமளித்தன. இத்தகைய மாநில அரசியல் அமைப்புகள் உருவாக்கிய அரசியல் சூழ்நிலையில்தான் அகில இந்திய அரசியல் அமைப்பாக காங்கிரஸ் மகாசபை 1885–ல் தோன்றியது. (இதன் விளக்கத்தை விரிவாக*

திரு.பெ.சு.மணியின் 'இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" எனும் நூலில் காணலாம்).

மாநில அரசியல் அமைப்புகளின் பெயர்களும் தோன்றிய காலமும் வருமாறு:

1. பிரிட்டிஷ் இந்தியன் அசோசியேஷன்–கல்கத்தா–1851
2. மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன்–சென்னை–1852
3. பூனா சர்வஜனிக சபை–பூனா–1872
4. இந்தியன் அசோசியேஷன்–கல்கத்தா–1873
5. பம்பாய் அசோசியேஷன்–பம்பாய்–1876
6. மகாஜனசபை–சென்னை–1884.

கலாசார, மாநில அரசியல் இயக்கங்களோடு முக்கிய நகரங்களில் "இலக்கியச் சங்கங்கள்" தோன்றின. இந்தச் சங்கங்களின் பெயரில் 'இலக்கியம்' ஒட்டிக் கொண்டிருந்தாலும் இவைகள் அரசியல் சமூக பிரச்னைகளை விவாதிப்பதில் ஊக்கம் காட்டின. ஆங்கில மொழியை அடிப்படையாகக் கொண்டு நவீன கல்வி இயக்கம், இத்தகையச் சங்கங்கள் தோன்றத் தூண்டியது.

1882–ல் சென்னை மாநிலத்தில் ஐம்பது சங்கங்கள் இருந்தன என்றும், அவைகளின் எண்ணிக்கை தொடர்ந்து நூறாக உயர்ந்தது என்றும் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் கல்கத்தாவில் இருந்து வெளிவந்த 'இந்தியன் மிரர்' எனும் இதழில் 1883–ல் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சென்னையில் சங்கங்கள் ஏற்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளில் 'ஏதேனியம்' (Athenaeum) எனும் ஆங்கில மொழிப் பத்திரிகை புதுமையைக் கண்டது. 1852 பிப்ரவரி 28ஆம் ஏதேனியம், இதழில் பின்வரும் விமர்சனம் வெளிவந்தது.

"இங்கிலீஷ் நடவடிக்கை சங்கங்களைப் பின்பற்றி இந்துக்களும், முஸ்லீம்களும் சங்கங்கள் நிறுவ முன் வருவது விந்தையாய் இருக்கின்றது... செட்டிகளும், பிள்ளைகளும் எவ்வளவுதான் பெருமை பெற்றிருந்தாலும் அரசாங்க விவகாரங்களைக் குறித்து கூட்டம் கூடி விவாதிப்பதை கனவிலும் கண்டிருக்கமாட்டார்கள்."

இங்கு செட்டி- பிள்ளை எனக் குறிப்பிடப்பட்டோர் காஜுலு லட்சுமி நரசு செட்டியும் (1806-1868); திரு.சீனிவாச பிள்ளையும் ஆவர்.

1852-ல் சென்னை மாநிலத்தின் முதல் அரசியல் அமைப்பான மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷன் தோன்றுவதற்குரிய சூழலை 1831-ல் தோன்றிய "ஹிந்து லிடரரி சொஸைடி" உருவாக்கியது. இதன் செயலாளர் சீனுவாச பிள்ளை, முக்கிய உறுப்பினர் லட்சுமி நரசு செட்டி.

சென்னையில் 1868-ல் "டிரிபிளிகேன் லிடரரி சொஸைடி" அமைக்கப்பட்டது. இதனை அமைக்கப் பாடுபட்டவர் மீர் இப்ராஹீம் அலி என்றாலும், 1874-ல் திருவல்லிக்கேணியை சுற்றியிருந்த இந்துமத பட்டதாரிகள் இந்தச் சங்கத்தை திருத்தி அமைத்து புதிய பொலிவும்-வலுவும் ஏற்படச் செய்தனர்.

'இந்து' பத்திரிகையின் தோற்றத்திற்கும், சென்னை மகா ஜன சபையின் அமைப்பிற்கும் "டிரிப்ளிகேன் லிடரரி சொஸைடி"யே மூலகாரணமாகும்.

1880 முதல் அரசியல் பிரச்னைகளை விவாதித்து அறிக்கைகள் உருவாக்கி அரசாங்கத்திடம் அளிப்பதில் இந்த இலக்கியச் சங்கம் முன் நின்றது.

1881-ல் சென்னை மாநில ஆளுநர் கிராண்ட் டப் என்பவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மடலில், நில

மதிப்பீடுகள், வேளாண்மை கல்விக்கு ஊக்கம், நீதி–நிர்வாகப் பிரிவினை, உப்புவரி, காட்டுவரி, சமய அறக் கட்டளைகளுக்கான சட்ட திட்டங்கள் முதலானவை களைப் பற்றிய முறையீடுகள் குறிப்பிடப் பட்டன.

ஜி.சுப்பிரமணிய ஐயர், "டிரிப்ளிகேன் லிடரரி சொஸைடியில் இளமையிலேயே சேர்ந்து அங்கு நடைபெற்ற விவாதங்களில் கலந்துக் கொண்டு பயிற்சி பெற்றார்.

## பொது வாழ்க்கைப் பிரவேசம்

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் பொது வாழ்க்கை பிரவேசத்திற்கு வழி வகுத்துக் காடுத்தது, டிரிப்ளிகேன் லிடரரி சொஸைடி. பத்திரிகைத்துறையின் தந்தை என தமிழகத்தில் 'ஜி.சுப்பிரமணிய ஐயர் புகழ் பெறுவதற்கு முன்பு, பத்திரிகையில் எழுதும் பழக்கம் இந்த இலக்கியச் சங்கத்தில் இருந்தபொழுது ஏற்பட்டது. இதைப்பற்றி அவரே "சுதேசமித்திரன்" வெள்ளி விழாவில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"நான் 1874–ஆம் வருஷம் ஜனவரி மாதம் இந்தப் பட்டணத்துக்குப் படிப்பினிமித்தமாக வந்தபோது, திருவல்லிக்கேணி லிட்டரரி சொஸைட்டி என்று ஒரு சங்கமிருந்தது. அதில் நானும் பின்னும் அநேகரும் சேர்ந்து பல வியாஸங்களை எழுதிப் படித்து வந்தோம். அப்போது தற்காலம் பெரும் அந்தஸ்திலிருப்பவர் சிலரும், காலஞ்சென்றவர்கள் சிலரும் மெம்பர்களாயிருந்தார்கள். அந்தச் சமயம் டாக்டர் கஸ்டேவ் ஆப்பர்ட் என்ற ஒரு ஜெர்மானிய ஸம்ஸ்கிருத பண்டிதர் இருந்தார். அவர் அந்நியர் நகைத்துப் பேசும் விதத்தினராயிருந்ததால் நான் அவரைப் பற்றி பலமுறை 'மெயில்' பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதினேன். அந்த வியாஸங்கள் பிரசுரமானவுடன் பத்திரிகைக்கெழுதும் சக்தி எனக்கு

*உண்டாகிவிட்டதாக நான் நினைத்துக் கொண்டேன்". (பக்கம் 20; குமரி மலர், ஜனவரி 1972).*

*சென்னை மாநிலத்தில் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அநியாயங்களையும், கிறிஸ்துவ மிஷனரிகளின் இந்துமத வெறுப்புப் பிரசாரத்தையும், எதிர்த்து "பொது மக்கள் கருத்து" எனும் நவீன பிரசார முறைக்கு வழிப்படுத்தியவர் காஜுலு லட்சுமி நரசு செட்டி (1806–1868). இவருக்கு இந்த வகையில் அவரது 'கிரசென்ட்* (The Cresent) *எனும் பத்திரிகையும், மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷனும் துணை நின்றன. இவருக்குப் பிறகு ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகளின் இந்தியர் விரோத பிரசாரத்தையும், அதிகார வருக்கத்தின் கொடுமைகளையும், ஊழல்களையும் எதிர்த்து பொது மக்கள் கருத்தை" உருவாக்குவதில் வெற்றி பெற்றவர் 'இந்து' பத்திரிகை ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர். 'இந்து' பத்திரிகை தோன்ற கூட்டு சேர்ந்த அறுவரும், "டிரிப்ளிகேன் லிடரரி சொஸைடி"யைச் சார்ந்தவர்கள்.*

## பிராமணர்-பிராமண அல்லாதர் பிரச்னை:*

*1878-ல் திரு.முத்துசுவாமி ஐயர், சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப் படுவார் என்ற அறிவிப்பை அறிந்ததும் சென்னை நகர ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகளான "மெட்ராஸ் மெயில்" "ஏதேனியம்" முதலியன பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்சினையை வெள்ளையர் நிறவெறித் திமிருக்காக பயன்படுத்தின. "நீதி மன்றத்தில் ஒரு பிராமண நீதிபதிக்கு கீழ்ப்படுவது என்பது ஆத்திரத்தை உண்டாக்குகின்றது;*

---

* இந்தப் பிரச்னையின் தோற்றம் வளர்ச்சி தனி ஆய்விற்குரியது. இது குறித்த ஆய்வு இந்நூலாசிரியரின் நூல்கள் சிலவற்றில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஓர் ஐரோப்பியனின் ரத்தம் கொதிக்கின்றது" என மெட்ராஸ் மெயில் ஆகஸ்ட் 21, 1878–ஆம் இதழில் எழுதியது. (பக்கம் 152, Politics and Nationalist Awakening in South India; 1852-1891 R.Sunthara lingam 1974.)

மெயில் பத்திரிகை இவ்வாறு எழுதியதோடல்லாமல், பிராமணரல்லாதார் கருத்தாக ஒரு "திராவிட நிருப"ரின் இரு கடிதங்களையும் வெளியிட்டது. "இந்த நீதிபதி அவர் சாதியைச்சார்ந்தவர்களிடையே மட்டும் பழகுவதால் இந்து சமூகத்தின் பிற பகுதியினருடைய பழக்க வழக்கங்களை அறிய மாட்டார். இந்தச் சமயத்தில் இந்தியர்களுக்கு இவ்வளவு பெரிய பதவியைக் கொடுப்பது புத்திசாலித்தனமாகாது. சாதி அபிமானமில்லாமல், தங்கள் பொறுப்புகளை செய்வார்களா என்பதும் கவனிக்க வேண்டியதாகும்." இவ்வாறு முதல் கடிதம் அமைந்திருந்தது. இரண்டாவது கடிதத்தில, "பிராமணர்கள் தங்களை தேவர்களாகவும், மற்றவர்களை மிலேச்சர்களாகவும் கருதுவதால் அவர்கள் எல்லா சாதியினரிடமும் நியாயமாக நடந்து கொள்வார்களா?" என்று குறிப்பிட்டது. பக்கம் 153, மேற்படி நூல்)

அரசாங்க உத்தியோகங்களை இந்தியர் மயமாக்கக் கோருதல் எனும் தொடக்க கால அரசியல் கோரிக்கைக்கு எதிர்ப்பை ஏவிவிடும் வெள்ளையர் சூழ்ச்சியை ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எதிர்த்தார்.

ஜி.சுப்பிரமணிய ஐயர், 'மெயில்' பத்திரிகைக்கு பதில் அளித்து, முத்துசாமி ஐயரின் நியமனத்தை ஆதரித்த ஒரே ஒரு ஆங்கிலோ–இந்தியப் பத்திரிகையான 'மெட்ராஸ் டைம்ஸ்' பத்திரிகையில் எழுதினார். இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வில்லியம் டிக்பை இந்தியர்கள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டியவர்; காங்கிரஸ் மகாசபையின் ஆதரவாளராகவும் விளங்கியவர்.

"பிராமணர்கள் கல்வி கற்று முன்னணியில் நின்று பொது வாழ்க்கையில் பிரபலமாகியிருப்பதால் அவர்களுக்கு எதிரான கூக்குரலை எழுப்புவது சகஜமாகி விட்டது. பிராமணர் - பிராமணரல்லாதரிடையே பரஸ்பர பரிவு இல்லை எனக் கூறுவது ஒப்புக் கொள்ளக் கூடியதன்று... படித்த பிராமணன், சூத்திரர்களை வெறுப்பது என்பதும், தொட்டால் பாவம் என்பதும், நவீன இந்திய சமூக அமைப்பில் உண்மையாக மாட்டாது.

ஆங்கிலக் கல்வி கற்றோரிடையே, பிராமணர், பிராமணரல்லாதார் பிணக்கு வேண்டாம். அவர்கள் அனைவரும் ஒரே பிரிவினர் என்ற நினைப்பு ஓங்க வேண்டும்." இவ்வாறு ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தாம் சந்தித்த முதல் பிராமணர், பிராமணரல்லதார் பிரச்னையைப் பற்றி கருத்து தெரிவித்துள்ளார்.

அந்தக் காலத்தில் அரசியல் தலைமை ஏற்ற ஆங்கிலம் படித்த வருக்கத்தின் ஒற்றுமைக்கு குரல் கொடுத்தார், ஜி.சுப்பிரமணிய ஐயர்.

பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்னையில் தமக்கு ஏற்பட்ட மன வேதனையை 'சென்னை மகாஜன சபை' பற்றிய கருத்திலும் வெளியிட்டுள்ளார், சாதி எதிர்ப்பில் போர் முரசு கொட்டிய ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

சென்னை மகாஜன சபையை தோற்றுவித்து, அதன் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய் பாடுபட்ட ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மகாஜன சபை, பிராமணர் - பிராமணரல்லாதார் பிரச்னையால் பலவீனமடைந்ததைக் கண்டு மனம் நொந்து பின் வருமாறு எழுதினார்:

"....இச்சென்னையில் சில காலமாய் அந்நியோன்னியம் குறைவாய் வருகின்றது. முன்போலக் கட்டுப்பாடு

இல்லை. பார்ப்பார் – சூத்திரர் என்று ஒருவரை மற்றொருவர் பழித்து, கக்ஷி பிரதிகக்ஷி உண்டாக்கி பலப்பட்டு ஒருவர் செய்யும் வேலையை மற்றொருவர் உப பலப்படுத்துவதில்லை". (பக்கம் 4, சுதேசமித்திரன், ஜுன் 21, 1895).

உத்தம தேசியவாதியாக விளங்கி, மக்களை ஒன்றுபடுத்தும் தேசிய உணர்ச்சியை வளர்க்கப் பாடுபட்ட ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பின்பற்றியிருந்தால் பிராமணர் – பிராமணரல்லாதார் பூசல் பின்னடைந்திருக்கும் எனும் கருத்து 1924–ல் வெளியிடப்பட்டது. 'புதுவை தேச சேவகன்' ஆசிரியராக இருந்த திரு.முகம்மதுராம் என்பவர் 'லட்சுமி' என்னும் இதழில் ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரத்தை எழுதிய பொழுது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"அவரது வாழ்க்கையை ஊன்றிக் கவனிப்போர்க்குத் தாம் முன்னதாக இந்தியன், பின்னர் ஹிந்து, பின்னரே பிராமணன் என்ற திவ்வியக் கோட்பாடுடன் ஒழுகி வந்திருக்கிறார் என்பது நன்கு புலனாகும். இத்தகையாரின் உதாரணத்தை மட்டில் அவர் பின்வந்த ராஜீயவாதிகளும், பத்திரிகாசிரியர்களும் பின்பற்றி வந்திருந்தால் நமது தமிழகத்தில் பிராமணர் – பிராமணரல்லாதார் போன்ற பூசல்கள் தலையிடாது ஒற்றுமை நிலைத்திருக்குமே." (பக்கம் 550; லட்சுமி' – தொகுப்பு 2; 1924).

இங்குச் சுட்டிக் காட்டப்பட்ட "உதாரணத்தை" மேலும் அறிந்து கொள்ள ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் உதவும்.

## தாய்மொழி மூலம் அரசியல்:

அரசியல் சிந்தனை, அரசியல் பிரசாரம் முதலானவற்றை ஆங்கிலம் ஒன்று மட்டுமே ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலத்தில் தாய் மொழி மூலம் பாமர

மக்களுக்கு அரசியல் அறிவு புகட்ட வேண்டும் என முதன் முதலில் திட்டம் தீட்டி செயலாற்றியவர் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

ஆங்கில மொழிப் பத்திரிகையான இந்துவைக் கொண்டு ஜி.சுப்பிரமணிய ஐயர் செய்த சக்தி வாய்ந்த அரசியல் போதனையும், கிளர்ச்சியும் தனி ஆய்விற்குரியது.

ஆங்கிலக் கல்வி மூலம் பெற்ற அறிவை, ஆங்கில மொழியறிவு பெறாதவருடன் பகிர்ந்துக் கொள்ள சிந்திக்கவும் மறுத்த ஆங்கிலம் படித்த வருக்கத்தில் விதி விலக்காய்த் திகழ்ந்தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

பொது மக்கள் அரசியல் அறிவு பெற முடியாமல் இருந்த காரணத்தினாலேயே இந்தியா அடிமைப்படுத்தப் பட்டது எனும் சீரிய கருத்தை ஜி.சுப்பிரமணியம் ஐயர் "ஜனநிர்மாணம்" எனும் நூலின் நூன்முகத்தில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

"பூர்வம் நமது ஜனங்கள் தேசப் பொது காரியங்களில் பிரவேசித்ததில்லை. ஜனங்கள் விசேஷமாய்க் கிராமாந் திரங்களில் வசித்தனராகையால் கிராம வாசிகளுக்குத் தம்தம் கிராமமே உலகமாய் விளங்கிற்று. எல்லாத் தொழில்களும் ஜாதிக் கட்டுப்பாட்டையொட்டி வம்ச பரம்பரையாய்ச் செய்யப்பட்டு வந்தபடியால் தொழில் செய்தவர்களும், வியாபாரம் செய்தவர்களும் தங்கள் அறிவையும், அனுபோகத்தையும் பெருக்கும்படி நூல்களை விரும்பினதில்லை. அரசர்களும், ராஜ தந்திரிகளும் தேசத்தை நிர்வாகம் செய்ததில் ஜனங்களுடைய கூட்டுறவை நாடியவர்களல்லர். ஆகையால் ஜனங்களுக்கு ராஜிய சம்பந்தமாய் அறிவும், ஊக்கமும் உண்டாக வேண்டும் என்று விரும்பிப் புஸ்தகங்கள் செய்தவர் களில்லை. இந்தியா அதன் பூர்வீக உன்னத நிலைமையை

இழந்து அந்நியர்களுக்கு வசப்பட்டது போனது முக்கிய மாய் இந்தக் காரணத்தினால்தான்". (பக்கம் 15; ஜனநிர்மாணம்; 1909).

தமது முன்னுரையின் இறுதியிலும், "தேச பாஷைப் பத்திரிகைகளும் தேச பாஷை நூல்களும் அதிகமாய்த் தோன்றி ஜனங்களுக்கு சகாயம் செய்யா விட்டால் இந்த நவீன ஜனநாயகமுறை நிறைவேறுதல் கஷ்டமாகும்" என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

## வரலாறு படைத்த "சுதேசமித்திரன்"

தமிழ் மக்களுக்கு அரசியலறிவைப் புகட்ட வேண்டும் என்பதற்காகவே சுதேசமித்திரனைத் தொடங்கியதாக ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களே பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்து" பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால், இங்கிலீஷ் பாஷையறியாத தமிழ் ஜனங்களும் தேச சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்கல்லாதிருப்பதை யோசித்து, 'சுதேசமித்திரன்' பத்திரிகையை 1882–ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாராந்திரமாகத் துவக்கினேன்...சுதேசமித்திரன்' பத்திரிகையை விருத்தி செய்து, தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மை என்று கருதினேன்." (பக்கம் 7 – ஆகஸ்ட் 77; குமரி மலர்).

சுதேசமித்திரன் தான் அந்த நாளில் அரசியல் விமர்சனங்களுக்கு வழிகாட்டியதை பத்திரிகைகள் சம்பந்தமான அரசாங்க அறிக்கை கூறியுள்ளது. திரு.டி.பாலசுந்தர முதலியார் – அரசாங்க தமிழ் மொழிப் பெயர்ப்பாளர் – 1898–ல் ஆங்கிலத்தில் தயாரித்த அறிக்கை அது. அதன் ஒரு பகுதி வருமாறு:

"விகடதூதன், வெற்றிக்கொடியோன், பறையன், ஆர்ய ஜனப்பிரியன், ஜனானுகூலன் போன்ற தமிழ் இதழ்கள் சுதேசமித்திரனைப் பின்பற்றி அரசியல் விமர்சனம் செய்தன",. (பக்கம் 159; G.O. 736 (Conf'dl) dated 6.6.1898).

சுதேசமித்திரனில் துணை ஆசிரியர்களாக சிறந்த தமிழ் அறிஞர்களை நியமித்ததார், ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள். 'விவேக சிந்தாமணி' சுவாமிநாதய்யர், கோதண்ட ராமய்யர், வரகவி.அ.சுப்பிரமணியபாரதி, சங்கரலிங்கம் பிள்ளை, குருமலை சுந்தரம் பிள்ளை, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் சுதேசமித்திரனின் துணை ஆசிரியர்கள் குழுவில் இணைந்திருந்தனர்.

"ஆங்கிலப் பதங்களுக்கு ஐயர் தாமே தமிழ்ப்பதங்களை உண்டாக்கினார். ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள், அரசியல் தத்துவங்களை வெளியிடச் சுதேசமித்திரன் பாஷையையே ஆதாரமாகக் கொள்ள வேண்டிய அவசியத்திற் குள்ளாயின" இவ்வாறு வரகவி அ.சுப்பிரமணிய பாரதி குறிப்பிட்டுள்ளார்.

சுதேசமித்திரனின் தலையங்கங்கள் கிராம மக்களை மனதில் கொண்டு எழுதப்பட்டன. பௌராணிக, இதிகாச கதைகளையும், பழமொழிகளையும் கொண்டு, உணர்த்தும் ஆற்றலில் விஞ்சி நின்றன. அந்தக் கால கட்டத்தில் சுதேசமித்திரன் **மிதவாதத்தை** அரசியல் கொள்கையாக ஏற்றிருந்தாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பார்வையில் ராஜத்துரோகத்தைப் பரப்பும் பத்திரிகையாக கருதப்பட்டது.

1886–ல் சென்னை அரசாங்கத்தின் பத்திரிகைத்துறை மொழி பெயர்ப்பாளர் திரு.சி.டி.மாக்லீன் என்பவர் சுதேசமித்திரன் தலையங்கங்களை மூன்று வகைகளாகப்

பிரித்து, சுதேசமித்திரன் ராஜத்துரோகத்தை வளர்ப்பதாக குற்றம் சாட்டினார்.

திரு.மாக்லீன் குறிப்பிட்ட மூன்று வகைத் தலையங்கங்கள் வருமாறு:

1. சென்னை மாநிலத்திற்கு வெளியே நிகழும் நாட்டு நடப்புகளைப் பற்றிய சுதேசமித்திரனின் தலையங்கங்களின் எண்ணிக்கை, 10.

2. சென்னை மாநிலத்திற்குள் இனவேறுபாடற்ற செய்திகளைப் பற்றிய தலையங்கங்களின் எண்ணிக்கை 45.

3. ஆட்சியாளர்களுக்கும் – சுதேசிகளுக்கும் இடையே நிலவும் உறவு பற்றிய தலையங்கங்களின் எண்ணிகை 45.

தமிழில் அரசியல் அறிவை வளர்க்க ஜி.சுப்பிரமணிய ஐயர் பாடுபட்டதை மேலே காணும் தலையங்கங்களின் பகுப்பு முறை எடுத்துக் காட்டுகின்றது. சு.மி.யின் சில தலையங்கங்கள் புதிய விழிப்பின் ஆதிகர்த்தாக்களுள் ஒருவர் என ஜி.சுப்பிரமணிய ஐயரை குறப்பிடும் பொழுது சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயர் என பாரதி சுதேசமித்திரனை முன்னிலைப்படுத்திக் கூறினார். தாம் உருவாக்கிய வாசகர்களைப் பற்றி திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களே பெருமிதத்துடன் கூறியதாவது.

"நமது மித்திரனைச் சிறு கிராமங்களிலுள்ளவர்களும் படிப்பதால் அவர்களும் தேச சமாசாரங்களைத் தெரிந்து கொள்ள விருப்பம் உள்ளவர்களாயிருப்பதை நானே நேரில் கண்டிருப்பதுடன் பல நேசர்களும் என்னிடம் கூறிச் சந்தோஷப்பட்டிருக்கிறார்கள்... ஆங்கிலப் பத்திரிக்கைகளைப் படிப்பவர்களைவிட, 'சுதேசமித்திரன்' படிப்பவர்கள் தேச க்ஷேமத்தில் அதிகக்கூர்மையான உணர்ச்சியுள்ளவர்கள். அநேகமாக அவர்கள் ஸ்வராஜ்யமே நம் இலக்காகக் கருதும் அமிதவாதிகள்".

*1908-ல் இவ்வாறு, ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியுள்ளதின் இறுதி வரியை உற்றுநோக்க வேண்டும். "ஸ்வராஜ்யமே நம் இலக்காகக் கருதும் அமிதவாதிகள்" எனும் இறுதி வரியில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல் சிந்தனையின் பரிமாண வளர்ச்சியைக் காண்கிறோம். 1907-சூரத் காங்கிரசிற்குப் பின் மிதவாதிகள்* (Moderates), *தீவிர வாதிகள் அல்லது நேஷனலிஸ்டுகள் எனும் இரு பிரிவுகள் வெளிப்படையாகவே செயலாற்றத் தொடங்கின. இவற்றுள் ஜி.சுப்பிரமணிய ஐயர் தீவிரவாதி அணியை ஆதரிப்பவராக மாறியதை முற்கூறிய இறுதிவரி மாற்றுகிறது.*

*காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்திற்காக ஆங்கிலம் அறியாது தமிழ் மட்டுமே அறிந்தவர்கள் தொண்டு மிக்க மதிப்பு வாய்ந்தது. இதற்காக ஓரளவு பண உதவி கொடுத்தும் தமிழ்ப் பேச்சாளர்களை அமைத்துக் கொள்ள வேண்டும் எனும் முக்கியக் கருத்தையும் வலியுறுத்தினார், ஜி.சுப்பிரமணிய ஐயர். (பக்கம் 5; நியூ இந்தியா; நவம்பர் 28, 1914).*

## தமிழில் அரசியல் நூல்கள்

*தமிழ்மொழியின் வாயிலாக தமிழ் மக்களுக்கு அரசியல் அறிவை அளிக்க வேண்டும் எனும் தமது அரசியல் சிந்தனைக்கு ஏற்ப பின்வரும் தமிழ் நூல்களை வெளியிட்டார், ஜி.சுப்பிரமணிய ஐயர்.*

1. *சுய அரசாட்சி வினா-விடை-1883*
2. *ஜப்பான் சரித்திரம் - 1903*
3. *இந்தியா-அதன் அரசியலும் வருங்கால நிலையும்-1905*
4. *பாரிசால் கொடுமைகள் - 1906*
5. *காங்கிரஸ் பிரசங்கங்கள் - 1907*

6. இந்தியர் ஆட்சி பற்றி இருவர் அபிப்பிராயம் 1907
7. சென்னை சுதேச -தொழில் சங்கம் பாகம் 1-1908
8. இந்திய கவர்ன்மெண்டில் திருத்தங்கள் முதலியன – 1908
9. சுதேசியம், ஸ்வராஜ் பற்றி புகழ் மிக்க இந்தியர்களின் பேச்சுகளும், கட்டுரைகளும் பக்கம்–164 – 1907
10. ஜனநிர்மாணம் – 1909
11. அலகாபாத் பேச்சு – 1911
12. ஆசார சீர்திருத்த வியாசங்கள் – 1914

சுதேசமித்திரனின் சகோதரப் பத்திரிகையான 'விகட தூதன்' 29.4.1898–ல் ஜி.சுப்பிரமணிய ஐயரின் தமிழ் தழுவிய அரசியல் போதனையை பின்வருமாறு போற்றியது.

"இவரும் வெகுநாளாகக் காங்கிரஸ் முதலான பொதுக் கூட்டங்களின் விவரங்களையும் காரியங்களையும் தமிழைத் தழுவியே நடத்தி சகல ஜனங்களுக்கும் எளிதில் தெரியச் செய்து பாடு பட்டுழைப்பது மெத்த நலமாயிருக்கிறதென்று பன்முறை பேசி வருகிறார்". (பக்கம் 50; குமரி மலர் – ஜூன் 1981).

## தமிழ்ப் புலவர்களிடம் பரிவு

ஜி.சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப் புலவர்கள் பிரச்னை களில் பரிவு காட்டியவர். 1899 மார்ச் 5–ல் சென்னை நகரத்தில் தென்னாட்டு மொழிகள் வளர்ச்சிக்காகத் தோன்றிய "திராவிட பாஷா சங்கம்" என்னும் அமைப்பை உருவாக்கியவர்களில் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஒருவர்.

பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடுபவர்களுக்கு, ஆங்கில மொழி அறிய வேண்டும்

என்னும் விதி முறையைத் தமிழ்ப் புலவர்கள் எதிர்த்தனர். ஜி.சுப்பிரமணிய ஐயர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து 9.8.1898-ல் சுதேசமித்தரனில் **“நம் பண்டிதர்கள்”** என்னும் தலைப்பில் ஒரு துணைத் தலையங்கம் எழுதினார். இதன் ஒரு பகுதி வருமாறு:

“கும்பகோணம் காலேஜ் தற்கால தமிழ்ப் பண்டிதரை (உ.வே.சாமிநாதய்யர்) ஐரோப்பாவிலுள்ள சிறந்த வித்வான்களுக்குச் சமதையாக டாக்டர் போப் சொல்லியிருப்பதை ஞாபகத்தில் வைப்போம். இப்பேர்ப்பட்ட கல்வி திறம் வாய்ந்த பண்டிதர்களுக்கு பதினைந்து முதல் ஐம்பது ரூபாய் வரை சம்பளம் கொடுக்கிறார்கள்... யூனிவெர்ஸிடியில் எல்லோரையும் போல இப்பண்டிதர்களையும் தங்கள் தங்கள் பாஷையில் பரீட்சகர்களாக நியமித்து அதன் மூலமாவது இவ்வகுப்பாருக்கு ஓர் வரும்படியை உண்டாக்க வேண்டும்... ஆனபடியாலே இவர்களுக்கு பரீட்சை கர்த்தா வேலை தருவது உசிதமாகும்.”

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க முன்வரும் தமிழ் புலவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்னும் கொள்கையை வலியுறுத்தினார். ஜி.சுப்பிரமணிய ஐயர் இதற்காக தமிழ்ப்பேரறிஞர் சி.வை.தாமோதரம் பிள்ளைக்கு உதவினார், ஜி.சுப்பிரமணிய ஐயர். இந்த பேருதவியைப் போற்றி பின்வருமாறு பாராட்டினார் சி.வை.தாமோதரம் பிள்ளை.

“இந்து பத்திராதிபர்களாகிய ஸ்ரீ.க.சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீ மு.வீரராகவாசாரியாரிருவரும், 30–35 பாரத்திற்கு மேற்படாமல் ஒரு நூல் காகிதச் செலவோடு கூட தமது அச்சுயந்திர சாலையில் பதித்துத் தருவதாக உத்தரவு செய்தார்கள்... இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றி பிற அச்சுக்கூடத் தலைவர்களும் தலைக்கொரு பழைய

நூலைத் தத்தம் யந்திர சாலையில் தக்க வித்துவான்களை கொண்டு பரிசோதித்து பதிப்பாராயின் எத்தனை நூல் அழியா தொழியும்?" (கலித்தொகை–பதிப்புரை–1877–பக். 22)

ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ் மொழியில் ஆர்வம் காட்ட மறுப்பதைக் கண்டித்து ஜி.சுப்பரமணிய ஐயர் பின்வருமாறு, 1906 செப்டம்பரில் சுதேசமித்திரனில் கடுமையாகச் சாடினார்.

"தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களில் சிறுபாலோர் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும், இவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பக்ஷத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கி காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள்."

## முதல் தமிழ் அரசியல் வெளியீடு:

தமிழ் மொழியில் அரசியல் அறிவை எளிய மொழி நடையில் பரப்பத் தோன்றிய முதல் நூல் "சுய அரசாட்சி – வினா – விடை" என்பதாகும். இந்த வெளியீடு ஜி.சுப்பிரமணிய ஐயரால் "உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை"க்காக எழுதப்பட்டது. 1883–ல் வெளிவந்த இந்த வெளியீடு, "சாதாரண ஜனங்கள் துரைத்தன விஷயமாயும் புரிந்து கொள்ள வேண்டி" இனாமாக வழங்கப்பட்டது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் முதலான தேச பக்தர்களால் பாராட்டப் பெற்ற இந்திய ராஜப் பிரதிநிதியான ரிப்பன் பிரபுவின் 'ஸ்தல சுயாட்சி ஸ்தாபன திட்டம்' பற்றிய பிரசாரத்திற்காக "சுய அரசாட்சி வினா'விடை" எழுதப்பட்டது.

"ஸ்தல சுயாட்சி ஸ்தாபன திட்டம்" என்பதை விளக்கி ரிப்பன் பிரபு வெளியிட்ட அறிக்கையில் உள்ள பின்வரும் பகுதி ஜி.சுப்பிரமணிய ஐயரின் முதல் தமிழ் வெளியீட்டின் நோக்கமாக அமைந்தது.

"நிருவாகத்தை முன்னேற்றமடையச் செய்வதற்காக கொண்டு வரப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதுவதைவிட, அரசியல் அறிவு புகட்டும் ஒரு கருவியாகவே இந்தத் திட்டத்தை முக்கியமாகக் கருதவேண்டும். (பக்கம் 99; காங்கிரஸ் வினா–விடை மூலமும் ஆய்வும்; 1979, பெ.சு.மணி)

வினா – விடை உத்தியில் அமைந்த ஜி.சுப்பிரமணிய ஐயரின் நூல் 44 பக்கங்களில் 42 வினா–விடைகளைக் கொண்டுள்ளது.

"இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றிலேயே முதல் முறையாக பொதுமக்களை காங்கிரசில் சேருமாறு வேண்டுகோள் விடுத்த திரு.மு.வீரராகவாச்சாரியாரின் காங்கிரஸ் வினா–விடை (1887) எனும் காங்கிரசின் உத்தியோக பூர்வமான முதல் தமிழ் அரசியல் வெளியீட்டிற்கு வழிகாட்டியாகவும், ஆதாரமாகவும் அமைந்தது ஜி.சுப்பிரமணிய ஐயரின் சுய அரசாட்சி வினா–விடை நூலே. (இரு வெளியீடுகளின் ஒப்பாய்வை, பெ.சு.மணியின்– "காங்கிரஸ் வினா–விடைமூலமும் ஆய்வும்" நூலில் 1979 காண்க)

ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல் சிந்தனைகளில் சிலவற்றை சுய அரசாட்சி வினா–விடையில் அறிகிறோம்.

சமுதாயத்தின் பல பிரிவினர்களிடையே ஒற்றுமை ஏற்படாத வரையில் இந்தியர்களிடம் அதிகாரப் பொறுப்பைவிடக் கூடாது என இந்தியர்களின் நலன்களுக்கு எதிராக கூறப்பட்டதை மறுத்து சுய அரசாட்சி வினா–விடை கூறியுள்ளதாவது:

"இன்று கூட நமது ஜனங்களுக்கு தென்கலை–வடகலை சண்டையும், பார்ப்பான், வெள்ளாளன் சண்டையும், ஹிந்து – துலுக்கன் சண்டையும் விடவில்லையே. தென்கலை மெம்பர்கள் வடகலை ஜனங்களுக்கு அநியாயமும், பிராமண மெம்பர்கள் சூத்தர ஜனங்களுக்கு அநியாமும், ஹிந்து மெம்பர்கள் மகமதியர்களுக்கு அநியாயமும், செய்தால் கவர்ன்மெண்ட்டார் கேட்பார்களா? அதிலும், இப்படி நல்ல காலம் வருமென்று காத்துக்கிடந்தால் ஒரு நாளும் வராது. நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால் தண்ணீரிலிறங்கச் சொல்ல பயந்து முடியாது என்று நினைத்தல்லவா இப்போது ரிப்பன் பிரபு மகாதயவு கூர்ந்து ஜனங்களுக்கு சொற்ப அதிகாரத்தையாவது கொடுத்துதான் பார்க்க வேண்டுமென்று, வெகு ஐரோப்பியர்கள் அவரைத் தடுத்தும் உறுதியாய் செய்து வருகிறார்." (பக்கம் 24–25–சுய அரசாட்சி வினா–விடை, 1883).

மேலும் ஒரு வினா–விடையைப் பார்ப்போம்.

வினா: ஆம்; இவர்கள் வேலையைச் செவ்வையாய்ச் செய்வார்களா? அவனவன் தன் ஜாதி மத அபிமானத்தாலும், கட்சிப்பிரதி கட்சியாலும், நமக்கென்னவென்ற அலட்சியத்தாலும் விஷயத்தைக் கெடுத்து போடமாட்டானா?

விடை: இப்போது நீர் சொன்னது அவசியம் யோசிக்க வேண்டியதுதான். இந்த இழி குணங்ளே நமக்கு மக சத்துரு.

தமது தேசங்கெட்டாலும், ஊர் கெட்டாலும், தாமே கெட்டுப் போனாலும், தமது அயலான் கெட்டால் போதும் என்கிற ஜாதிகள் அல்லவோ ஹிந்துக்களில் பெரும்பான்மையோர். இப்படி நாமிருக்கிறவரையில் நமது தேசத்துக்கும் நமக்கும் பெருமை வரப் போகிறதில்லை. அப்படி நமக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் இருந்தால் 25 கோடி ஜனத்தொகை உள்ள நாம் சென்ற ஐந்நூறு வருஷ காலமாய் பராதீனர்களாய் வருவோமா? (பக்கம் 35–மேற்படி நூல்)

அந்தக் காலத்தில் அரசியல் உணர்வு பெற்ற ஆங்கிலம் படித்தவர்க்கம் இஸ்லாமியரின் 500 ஆண்டுகால ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்ததற்காக பிரிட்டிஷ் ஆட்சியை வரவேற்றது. ராஜா ராம்மோகன்ராய் (1772–1883) இந்தச் சிந்தனைப் போக்கைத் தொடங்கி வைத்தார். பிரிட்டிஷ் ஆட்சியை கடவுளின் வரப்பிரசாதம் (Divine Dispensation) என விளித்தது, ஆங்கிலம் படித்த வருக்கம். எழுபத்திரண்டு ஆங்கிலப்பட்டதாரிகள் மட்டுமே அழைக்கப்பட்டு 1885–ல் அமைக்கப் பெற்ற காங்கிரஸ் மகா சபை, பிரிட்டிஷ் பேரரசுக்கு வாழ்த்துப்பாடி வணங்கியதில் பெருமிதம் கொண்டது.

அந்த 72 பட்டதாரிகளில் ஒருவரான ஜி.சுப்பிரமணிய ஐயரும் பிரிட்டிஷ் ஆட்சியில், காலனி ஆதிக்கக் கொடுமையையோ, ஏகாதிபத்தியத்தையோ இனங்காண காலச்சூழல் இடந் தரவில்லை.

"இங்கிலீஷ் படிப்பாளிகள், இங்கிலீஷ் அரசாங்கம் பலமாக காலூன்ற அல்லவா பாடுபடுவார்கள். இங்கிலீஷ் ஆட்சியை அகற்றினால் அவர்களுக்குத்தானே அது அழிவைத்தரும்" என ஜி.சுப்பிரமணிய ஐயரும் கருதிய காலம் ஒன்று உண்டு. (சுதேசமித்திரன் 3.12.1888)

'சுய அரசாட்சி வினா–விடை' நூலின் இறுதியில் அவர் கூறியுள்ளதில் எதிர் காலத்தில் இந்தியா ஐரோப்பிய நாடுகளைப் போல் விளங்கும் என நம்பிக்கை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

"இது ஸ்திரப்பட்டு வேரூன்றி ஓங்கி வளர்ந்து பிற்காலத்தில் ஹிந்து ஜனங்கள் ஒரு தேசத்தாராய் ஒருமைப்பட்டு தங்கள் ராஜ்ஜியத்தைத் தாங்களே ஆண்டு கொள்ளும் திறமையுண்டாய்; ஐரோப்பிய ராஜ்யங்களை விட கீர்த்தியும் பலமும் ஐசுவரியமும் உண்டாய், ஹிந்து தேசமென்ற பேர் என்றைக்கும் உண்டாய், ஹிந்து தேசமென்ற பேர் என்றைக்கும் மறையாத கடும் பகற் சூரியன் போல் பிரகாசிக்கும்." (பக்.44–சுய அரசாட்சி வினா–விடை).

இவ்வாறு ஸ்தல சுயாட்சிதிட்ட விளக்கப் பிரசாரம் சென்னை மாநிலத்தில் ஆக்கமும் ஊக்கமும் பெற நடைபெற்றது. அகில இந்திய அரசியல் தலைவர்களையும் கவர்ந்தது. பம்பாய் மாநில அரசியல் சமூக சீர்திருத்தச் சிந்தனையாளரான திரு.நாராயண சந்த்வர்கர், "1883 வருஷம் ராஜாங்க விஷயக் கிளர்ச்சியில் மதராஸ் முன்நின்று விளங்கியது" என பாராட்டினார். (பக்.5, தேச பக்தன், ஆகஸ்ட் 15, 1919, ஆசிரியர் திரு.வி.க.)

### முதல் அரசியல் பிரசாரப் பயணம்:

சென்னை மாநிலத்தின் முதல்மாநில அரசியல் அமைப்பு எனப் புகழ் கொண்ட மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன் ரிப்பன் பிரபுவின் "ஸ்தல சுயாட்சி ஸ்தாபன திட்டம்" வெற்றிபெற கிளர்ந்தெழுந்தது. திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் மேற்கொள்ள வேண்டிய கருத்துக்களை அறிய வினாத்தாள்களை மாவட்டக்கிளை அமைப்புகள், இலக்கியச் சங்கங்கள்,

செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் பார்வைக்கு அனுப்பி வைத்தது மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன். இத்துடன் அமையாமல் முக்கிய நகரங்களுக்கு நேரடியாகச் சென்று பிரசாரம் செய்ய திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரைத் தேர்ந்தெடுத்தது. இதற்கு முக்கியக் காரணம் ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு கற்றோர்களிடமிருந்த செல்வாக்கேயாகும். 1881–ல் "செங்கல்பட்டு ஊழல்", "சேலம் வகுப்புக் கலவர வழக்கு" எனும் இரு பிரச்னைகளில் 'இந்து' பத்திரிகை வாயிலாக அவர் நடத்திய ஆட்சிக்கெதிரான கிளர்ச்சியும், அதில் அவர் பெற்ற வெற்றியும் அவருக்குச் செல்வாக்கைத் தேடித்தந்தது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 1883–ல் "சுய அரசாட்சி வினா–விடை" எழுதுவதற்கான அனுபவம், 1882–ல் அவர் மேற்கொண்ட "ஸ்தல ஸ்தாபன திட்ட" ஆதரவுப் பிரசாரப் பயணத்தில் கிடைத்தது. 1882–ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கடலூர், சிதம்பரம், திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப் பட்டினம், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி முதலான நகரங்களில் சுற்றுப்பயணம் செய்தார், ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு அன்றைய தீவிரமான ஓர் அரசியல் திட்டத்தின் ஆதரவிற்காக முதன்முறையாக சுற்றுப் பயணம் செய்தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர். அரசியல் பிரசார சுற்றுப்பயணத்தை அறிமுகப்படுத்தி ஆக்கமளித் தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் என்பது மனதில் பதிய வேண்டிய செய்தியாகும்.

இவ்வாறே, மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷனுக்குப் பிறகு, காங்கிரசுக்கு முந்திய தேசிய இயக்கங்களில் ஒன்றான மகாஜனசபையின் சார்பில் அரசியல் சுற்றுப்

பயணத்தை மேற்கொண்டவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள். சென்னை மகாஜனசபையின் தோற்றத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயருக்குப் பெரும் பங்குண்டு. 1888–ல் சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் அமைப்பின் சீரமைப்பிற்காக ஜி.சுப்பிரமணிய ஐயர் சுற்றுப்பயணம் செய்தார். வாலாஜா நகர், ஈரோடு, கோயம்புத்தூர், லால்குடி, பாலக்காடு, கோழிக்கோடு முதலான நகரங்களுக்குச் சுற்றுப்பயணம் சென்றார் ஜி.சுப்பிரமணிய ஐயர். 1907–ல் சுதேசி இயக்கத்திற்காகவும் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

இந்தச் சுற்றுப் பயணங்களில் **தமிழில் பேசி, பொதுமேடை அரசியல் பேச்சு வரலாற்றில் முதன் முதலில் தமிழைப் பயன்டுத்தியவரும் ஜி.சுப்பிரமணிய ஐயரே எனும் தனிப்புகழையும் பெற்றார்.**

ஜி.சுப்பிரமணிய ஐயருக்கே உரிய இந்த வரலாற்றுப் பெருமையைக் குறித்து குருமலை சுந்தரம் பிள்ளை தமது நூலில் சாற்றியதாவது:

"மதாசாரியர்கள் தங்கள் மதங்கள் பரவுவதற்காக மதப்பிரசங்க யாத்திரை செய்வது போல ஜனத் தலைவர்கள் இராஜரீக சம்பந்தமான விஷயங்களுக்காக பிரசார யாத்திரை செய்யும் வழக்கத்தை இச் சென்னை மாகாணத்தில் முதலில் உண்டாக்கியவரும் நமது ஐயரே" (பக்கம்: 263 ஸ்ரீ.ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்–1907).

## துண்டு பிரசுரங்களை வெளியிட்டுப் பரப்புதல்

அரசியல் சுற்றுப்பயணம் செய்ததிலும், மேடைப் பேச்சில் தமிழைப் பயன்படுத்தியதிலும் சில தொடக்கங்களைச் செய்தவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் என்பதோடு தமிழில் சிறு சிறு வெளியீடுகளை உடன் கொண்டு போகுமிடங்களில் வழங்கிப் பரப்பும் பிரசாரக்

கலையையும் தமிழகத்தில் புகுத்திய முதல் அரசியல் தலைவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களே எனும் வரலாற்றுப் புகழ் கொண்டார்.

சங்கிலித் தொடரான கூட்டங்கள், கூட்டங்களில் துண்டுப் பிரசுரங்களை வழங்குதல் என்பனவற்றை சக்தி வாய்ந்த இயக்கங்களாக இங்கிலாந்தில் (1839 முதல் 1846 வரை) நடத்தி வெற்றி கண்டவர் ரிச்சர்ட் காப்டன்–(Richard Cobden) என்பவர் ஆவார். காப்டன் பெயரில் லண்டனில் அமைந்த 'காப்டன் கிளப்' இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆதரவானது. ரிச்சர்ட் காப்டனைப் பின்பற்றி பிரசார இயக்கத்தை இந்திய அரசியலில் நடத்தத் தூண்டியவர் ஆலன் ஆக்டோவியன் ஹ்யூம். காப்டன் தலைமையில் நடைபெற்ற போராட்டம் "தானிய சட்டம் எதிர்ப்புப் போராட்டமாகும்." Anti Corn League எனும் அமைப்பு போராட்டத்தை நடத்தியது. பிரிட்டனில் சிறுபான்மையான ஒரு பிரபுத்துவக் கூட்டம் மக்களுக்குச் சுலபமாக உணவு தானியங்கள் கிடைக்கவொட்டாமல் தானிய இறக்குமதி வரி விதிப்பிற்கு வழி செய்தது. இதை எதிர்த்து "Anti Corn League" போராட்டம் நடத்தியது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தமது மேடைப் பேச்சை முடித்துக் கொண்டு சிறு சிறு அரசியல் தமிழ் வெளியீடுகளை மக்களிடையே வழங்கும் பழக்கத்தை கொண்டிருந்தார் என்பதற்கு பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் சான்று உள்ளது.

இவ்வாறு ஜி.சுப்பிரமணிய ஐயர் வெளியிட்ட சிறு வெளியீடுகளில் அமெரிக்க அரசியல் தலைவர் **பிரெய்ன்** என்பவரைப் பற்றியதொன்றாகும். இந்த வெளியீடு பிரிட்டிஷ் ஆட்சியின் கவனத்தைக் கவர்ந்தது. பிரெய்னின் முழுப் பெயர் **பிரெய்ன் வில்லியம் ஜென்னிங்கஸ்**

*(1860–1925) என்பதாகும். இவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர். இவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். பாரதியார் இவரைப் பற்றி தமது 'இந்தியா' இதழில் "**பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளை நன்கு எடுத்துக் காட்டி கண்டனை புரிந்த அமெரிக்க ஞானி மிஸ்டர் பிரெய்ன்**" என்று பாராட்டியுள்ளார். தூத்துக்குடியில் வ.உ.சி.க்கு ஆதரவாக ஜி.சுப்பிரமணிய ஐயர் சொற்பொழிவாற்றிய பிறகு வழக்கம் போல் கைப்பையில் இருந்த துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே வழங்கினார். இந்த வெளியீடுகளை புலனாய்வுத்துறைக்கு அனுப்பி வைத்து மாவட்ட நீதிபதி பின்வரும் குறிப்பையும் இணைத்திருந்தார்.*

"I enclose a book which is being distributed by G.Subramania Iyer after his Lectures. It is published by his own press for sale nominally, but really is given away at his political meetings and the object is apparent. It contains (i) A Tamil translation of a speech made by Byran of America atacking British administration; (ii) Mr.Morleye's Budget speech. The object, of course of the book is to show that English administration is a failure, and that the money of the country is going out of it to England and that any form of Govertnment is better than the existing one, and'that even Mr.Morley has no intention of keeping faith with the queen's proclamation; (iii) Life work of Bryan (iv) Life of Mr.Morley The ignorant Hindu reader imagines that Bryan is qualified to criticise and that he is English instead of being what he is an American demagogue and openly hostile to England. The first page of the contents of the book is instructive reading and likely to cause disloyalty...

1. "Russian rule better than English"
2. "Death rate speedily rising under British administration"
3. "Proclamation never carried out"

4. Wealth of India ran off to England and people starving." (Page 85; G.O. 1542-Confd'1; Dated 3.10.1911)

மேற்காணும் நான்கு கருத்துக்களை சற்று ஆய்வோம்.

ரஷ்ய ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது, எனும் முதல் கருத்து பற்றிய குறிப்பிற்கு ஒரு பின்னணி உண்டு. 'ரஷ்ய அபாயம்' 'இந்தியாவில் ஆங்கிலக் கல்வி கற்றோர் அதிருப்தி" இரண்டையும் இணைத்துச் சிந்திக்கப்பட்டது. 'அதிருப்தி'க்கு ஒரு வடிகால் அமைத்துக் கொடுப்பதன் மூலம் 'ரஷ்ய அபாயத்தை' போக்கலாம் என காங்கிரஸை அமைக்கத் திட்டமிட்டோரும், இதற்கு உடந்தையாக பிரிட்டிஷ் ஆட்சியும் இருந்தது என்பதையும் நினைவு கூர்தல் வேண்டும். ஹ்யூமின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய வெட்டர்பர்ன் நூலில் இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் மகாசபையின் தலைவர்களும் ஆரம்ப காலத்தில் ஜார் கால ரஷ்ய ஆட்சியின் கொடுங் கோன்மையை மக்களிடையே பிரசாரம் செய்தனர்.

"இங்கிலீஷ் ராஜ்யம் நாகரீகமானது ருஷ்ய ஆட்சியோ கொடுங்கோன்மை"

(பக்: 86, காங்கிரஸ் மகா சபை சரித்திரம்– சுதேசமித்திரன் வெளியீடு 1920).

1887–ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் பத்ருதீன் தியாப்ஜி தமது தலைமை யுரையில் "ருஷ்யராஜ்யத்தைக் காட்டிலும் இங்லீஷ் ராஜ்யம் சிறந்ததென்று விஷயம் யாருக்குத் தெரியும்? படித்தவருக்கா? பாமரருக்கா?" எனக்கேட்டார். 1885–ல் பம்பாய் அசோசியேசன், பூனா சர்வ ஜனக சபை வெளியிட்ட 12 துண்டு பிரசுரங்களில்"Why do Indians prefer British to Russian Rule."என்பதொன்றாகும். காங்கிரஸ்

தோன்றியதற்கு கூறப்படும் பல காரணங்களுள், 'ரஷ்ய அபாயம்' பற்றிய அச்சுறுத்தலும் ஒன்றாகும். "Indian Freedom Struggle" எனும் ஒருநூலில் "Was the congress a Child of Russo-phobia?" எனும் ஆய்வும் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் பார்க்கும் பொழுது, 1907-ல் வெளியிட்டுப் பரப்பப்பட்ட தமிழ்ப் பிரசுரத்தில் "ரஷ்யா ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சியைக் காட்டிலும் சிறந்தது" எனும் கருத்து பொதிந்திருந்ததும், இந்தக் கருத்து பரவ ஜி.சுப்பிரமணிய ஐயரின் வெளியீடு கருவியாய் அமைந்ததும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய சிறந்தச் செய்தியாகும். 'ரஷ்ய அபாயம்' எனும் புரளியைக் கிளப்பி பயமுறுத்தும் பாசாங்குத் தனத்தைக் கண்டித்து ஜி.சு., 4.4.1908ஆம் சுதேசமித்திரனிலும் எழுதினார். 'மாடர்ன் ரெவ்யூ' இதழில் "If Russia to rule over India?"எனும் தலைப்பில் வெளிவந்த கட்டுரை, ரஷ்ய ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் மேலானது என்பது ஐயத்திற்கு இடமில்லாமல் விளக்குகிறது என்பதையும் ஜி.சு.எடுத்துக் காட்டினார்.

"பிரிட்டிஷ் நிருவாகத்தில் இந்திய மக்களின் மரண விகிதம் அதிகரித்துக் கொண்டு வருகிறது" எனும் செய்தி பரவவும் ஜி.சுப்பிரமணிய ஐயர் முயற்சி செய்தார். கி.பி.1860 முதல் கி.பி.1900 வரையில் இந்தியாவில் பத்து பயங்கரப் பஞ்சங்கள் தோன்றி நாட்டைச் சுடுகாடாக்கின. 1900-ல் ஏற்பட்ட பஞ்சம் இங்கிலாந்தின் சரிபாதி ஜனத் தொகைக்கு ஈடான மக்களைக் கொன்று குவித்தது. (பக். 63 இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முதல் பதிப்பு 1973: பெ.சு.மணி).

மூன்றாவது கருத்தான "பிரகடனம், செயல்படுத்தப்பட வில்லை" என்பதாகும். 1857 புரட்சியைத் தொடர்ந்து பிரிட்டிஷ் பேரரசி விக்டோரிய மகாராணி "இந்திய அரசு

ஊழியத் துறையில் இந்தியர் நியமனங்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும்" எனத் தமது பிரகடனத்தில் குறிப்பிட்டார். இதை பிரிட்டிஷ் அதிகார வருக்கம் புறக்கணித்தது. குறிப்பாக கர்சன் பிரபு புறக்கணித்து இழிவுபடுத்திப் பேசினார். கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி காலத்திலும் இத்தகைய பிரகடனம் ஒன்று வெளியிடப் பட்டது. இதை நம்பி காங்கிரசுக்கு முந்திய தேசிய இயக்கங்களான மாநில அரசியல் அமைப்புகளும் ஏமாந்தன. 1904–ல் பம்பாய் காங்கிரசில் ஜி.சுப்பிரமணிய ஐயர் பேசும் பொழுது, 1858 பிரகடனத்தை பற்றி பின் வருமாறு கூறினார்.

"இந்தியர்களின் நிலைமை 1833–ல் இருந்ததைக் காட்டிலும் இப்போது மிகக் கேடாய் விட்டது. மகாராணி கொடுத்த வாக்குறுதிகளை லார்ட் லிட்டன் குடில தந்திரங்களால் பங்கப்படுத்தினார். லார்ட் கர்ஸனோ 1858–ம் வருசத்தில் மஹாராணியின் விளம்பரத்தில் சொல்லப்பட்ட ஆட்சி முறையும் கொள்கைகளும் பிரிட்டிஷ் ஆட்சி முறைக்கும் கொள்கைகளுக்கும் பொருந்தின அல்லவென்று வெளிப்படையாகச் சொல்லி விட்டார். நமக்குச் சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்வதந்தரங்களை நாம் எவ்வகையாலும் காக்க வேண்டும். அங்ஙனம் காக்குமிடத்து இங்கிலாந்து மாத்திரமேயன்றி உலகத்திலுள்ள தேசத்தார் அனைவருமே பாரதநாடு விடுதலை பெறுதல் அவசியமென்று கூறும்படி வேலை செய்யவேண்டும்." (பக்.437; காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்; சுதேசமித்திரன் வெளியீடு, 1920).

நான்காவதாகக் குறிப்பிட்ட "இந்தியச் செல்வத்தின் வெளியேற்றமும், மக்கள் பட்டினியும்" எனும் கருத்தைப் பரப்புவதின் வாயிலாக பொருளாதார உணர்வையும்

முதன்மைபடுத்திய ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல் சிந்தனையின் செழுமையைக் காண்கிறோம்.

1885–ல் பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் இந்திய ஆதரவாளர்களுக்கு வாக்களிக்குமாறு வேண்டிக்கொள்ள லண்டன் சென்று பிரசுரம் செய்தனர் மாநில அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகள். இவர்களில் சென்னை மகா ஜன சபையின் சார்பில் சென்றவர் சேலம் ராமசாமி முதலியார். ஜி.சுப்பிரமணிய ஐயர் வழிகாட்டுதலைப் பெற்றிருந்த மகா ஜன சபை பின்வரும் மூன்று துண்டுப் பிரசுரங்களை ஆங்கிலத்தில் தயாரித்து லண்டனிலிருந்த சேலம் ராமசாமி முதலியாருக்கு அனுப்பி வைத்தது. (பக். 162, கி.பி.1600 முதல் 1947 வரை – கட்டுரை – பெ.சு.மணி; மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு: 1980).

1. Changes in India (இந்தியாவில் நிகழும் மாறுதல்கள்) இந்த வெளியீட்டில் இந்தியாவின் மாறிவரும் நிலைமைகளும், இந்தியரின் பிரிட்டிஷ் விசுவாசமும், நிருவாகத்தில் கூட்டாளியாக வேண்டியதன் அவசியமும் விளக்கப்பட்டன.

2. The Employment of the Native of India in the public Service of the Country: இந்த வெளியீட்டில் 1853–ம் ஆண்டின் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் 1858–ம் வருடத்தின் பிரிட்டிஷ் மகாராணியின் பிரகடனம் ஆகிய இவையிரண்டின் அடிப்படைகளில் இந்தியர்களை உயர்ந்த உத்தியோகஸ்தர்களாக நியமிக்காதது வாக்குத் தவறியதாகும் என்பது விவாதிக்கப்பட்டது.

3. Financial Extravagance : கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் முடியாட்சி ஆகியவற்றின் இந்தியக் கடன் ௱மை வளர்ந்த வரலாறும், இராணுவம் சிவில்

நிருவாகத்தின் மிதமிஞ்சிய செலவும் இதில் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு பிரிட்டிஷ் வாக்காளர்களிடம் முறையிட்ட துண்டுப் பிரசுரங்களை அவர்கள் லட்சியம் செய்ய வில்லை. லிபரல் கட்சியினர் கூட–இந்திய தலைவர்கள் உறவு கொண்டாடிய லிபரல் கட்சியினர்–இந்தத் துண்டுப் பிரசுரங்களைப் பற்றி குறிப்பிடவில்லை.

ஜி.சுப்பிரமணிய ஐயர் தமிழில் தயாரித்து வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் தமிழ் மக்களின் அரசியல் பொது அறிவை வளர்க்கப் பயன்பட்டன.

**காங்கிரசில் ஜி.சுப்பிரமணிய ஐயர்:**

திருவல்லிக்கேணி லிடரரி சொஸைடி, மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன், சென்னை மகாஜன சபை முதலான அமைப்புகள் வாயிலாக நடைபெற்ற ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல் பயணம் காங்கிரசில் பிரவேசித்ததும் ஓர் அகில இந்தியச் சிறப்பைப் பெற்றது.

1858-ம் ஆண்டின் விக்டோரியா மகாராணியாரின் இந்தியர் உத்தியோக நலன் பாதுகாப்பு உறுதி பற்றிய பிரகடனத்தை உச்சி மேல் வைத்து மெச்சி அதையே அடித்தளமாகக் கொண்டு ஆங்கிலப் பட்டதாரிகள் 1885-ல் கண்ட காங்கிரஸ் சபை தோன்றுவதற்கு முன் உலகத் தொழிலாளர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டு அதன் ஒரு கிளை அமைப்பை நிறுவ ஒரு தனிநபர் முயன்றதும், அதன் முடிவையும் இங்கு குறிப்பிடுவது தகும்.

**உலகத் தொழிலாளர் அகிலத்தின்**
**கிளை அமைப்பு குறித்த சிந்தனை:**

கார்ல் மார்க்ஸ் பார்வையில்: உலகத் தொழிலாளர் இயக்கத்தின் “முதல் இண்டர்நேஷனல்” எனும்

அமைப்பின் பொதுக்குழு கூட்டம் 1871 ஆகஸ்ட் 15-ல் பேராசான் கார்ல் மார்க்ஸ் தலைமையில் கூடியது. இந்தக் கூட்டத்தில் கல்கத்தாவில் இருந்து வந்த ஒரு கடிதம் பார்வைக்கு கொண்டு வரப்பட்டது. கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

".......*great discontent* exists amongst the people and the British Government is thoroughly disliked. The taxation is exceessive and the revenues are swalloed up in maintaining a costly system of officialism. As in, other places the extravagances of the ruling class contrast in a painful manner with the wretched condition of the workers whose labour creates the wealth thus squandered. The principles of the International would bring the mass of the people into the organisation if *a section was sarted.*" (Page 42, Main Stream, August - 1972; Bengal and Socialist ideas: Nineteenth century Back ground-Chinmohan Sehanavis)

இந்தக் கடிதத்தை எழுதியவர் யார் என்பதைப் பற்றி இதுவரை திட்டவட்டமாக அறிய முடியவில்லை. ஆனால், இந்தக் கடிதத்தில் தொழிலாளரை மையமாக வைத்து ஓர் அமைப்பு தொடங்கப்பட வேண்டும் எனும் கருத்து நம்மை. வியப்புறச் செய்கிறது.

கல்கத்தா கடிதத்தின் மீதான ஓர் அறிக்கை உருவாக்கப் பட்டது. இந்த அறிக்கை இந்திய உழைக்கும் வருக்கத்தின் நலன்களை கருத்தில் கொண்டு தயாரிக்கப் பட்டதை பின்வரும் வரிகளில் இருந்து அறிகிறோம்.

"In a letter from India an account was given of the Interest created by the International, It was felt that its introduction into that country would be the commencement of a new era. It would effect a greater revolution than anything which has preceded it. The international was an association exactly in accordance with the aspiraton of the working class of India. It would weld the rival races and sews into one homogeneous whole and would help the workers to gain

their rights- political and social. Capital, the real Juggernaut which crushes down Labour, would no longer be allowed to use in human energy like so much fuel but would be brought under the control of the workers themselves." (Page 42- *முற்கூறிய கட்டுரை).*

*காரல் மார்க்ஸ் (1818–1883) இந்தியாவில் தொழிலாளர் அமைப்பு தோன்ற 1871–லேயே பேராவலுடன் வெளியிட்ட சீரிய சிந்தனைகள் நம் மெய்சிலிர்க்க வைக்கின்றன. சீரிய சிந்தனைகள் சிலவற்றைத் தொகுத்துப் பார்ப்போம்.*

*1. இந்தியாவில் உலகத் தொழிலாளர் அகிலத்தின் கிளை ஒன்றை அமைப்பது என்பது ஒரு புதிய சகாப்தத்தின் தோற்றமாகும்.*

*2. இந்திய உழைக்கும் மக்களின் விருப்பங்கள் அகிலத்தோடு உண்மையில் ஒத்துள்ளன.*

*3. மாறுபட்ட இனங்களையும், பிரிவினரையும் ஒருங்கிணைந்த முழுமையாக ஒன்றுபடுத்தும். தொழிலாளர் தங்களது அரசியல்–சமூக உரிமைகளைப் பெற முடியும்.*

*4. தொழிலாளர் வருக்கத்தை நசுக்கும், பலிகொள்ளும் மூலதனம், தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்; மனித சக்தி தேவைக்கு அதிகமாக மூலதனத்தின் எரி சக்தியாக பயன்படுத்தப்படுவது தடுக்கப்படும்.*

*1885–ல் "வேறுபட்ட இனங்களிடையே ஒருநாட்டை உருவாக்கப் போவதாக" வருணிக்கப்பட்ட காங்கிரசின் கொள்கையை 1871–லேயே காரல் மார்க்ஸ் முன்னுணர்ந்து கூறியதும் குறிப்பிடத்தக்கது.*

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய சக அமைப்பின் மேல்தட்டில்தான் புதிய விழிப்பு–அதுவும் மெல்ல மெல்லப் படர்ந்தது. இந்திய தேசிய இயக்கம் ஒரு பூர்ஷ்வா*

இயக்கமாகத்தான் தோன்ற முடியும் என விதிக்கப்பட்டு விட்டதால், கல்கத்தா கடிதமும், கார்ல் மார்க்சும் விரும்பிய வழியில் தேசிய விடுதலை இயக்கம் தோன்ற முடியவில்லை.

கல்கத்தா, பூனா, பம்பாய், சென்னை மாநில அரசியல் அமைப்புகள் ஓர் அகில இந்திய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஹ்யூமிற்கு முன்னமேயே ஈடுபட்டன. பம்பாய் அசோசியேஷன் பிப்ரவரி 6, 1885-ல் **'நேஷனல் இந்தியன் அசோசியேசன்'** எனும் பெயரில் அகில இந்திய அரசியல் அமைப்பை நிறுவியது. கல்கத்தாவில் பிரபல தினசரிப் பத்திரிகையான "இந்தியன் மிரர்", "அமிர்த பஜார்" பத்திரிகையும் பம்பாய் அரசியல் அமைப்பு பம்பாயை மட்டும்தான் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்திந்தியாவையும் அல்ல எனக் குறிப்பிட்டு எதிர்த்தன.

'இந்து' பத்திரிகை ஆசிரியர் என்ற பொறுப்பில் ஜி.சுப்பிரமணிய ஐயரும் பம்பாய் அமைப்பு தேசியத் தலைமைக்குரியதன்று எனக் கூறினார்.

கல்கத்தாவில் சுரேந்திரநாத் பானர்ஜி ('1848-1927), 1885-ல் டிசம்பர் மாதத்தில் "இந்தியன் நேஷனல் கான்பரன்ஸ்" எனும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தார். பம்பாய் அசோசியேசன் கல்கத்தா முயற்சியை ஆதரிக்க மறுத்தது. இதற்கிடையில் ஹ்யூம் முன்னின்று அகில இந்திய அமைப்பை நிறுவ ஜி.சுப்பிரமணிய ஐயரின் ஆதரவைப் பெற்றார். ஹ்யூம் கூட்டவிருந்த அமைப்பிற்கு முதலில் "இந்திய தேசிய யூனியன் கான்பரன்ஸ்" எனப் பெயரிடப்பட்டது. ஆனால் இதே சமயத்தில் கல்கத்தாவில் கூடவிருக்கும் அமைப்பிலும் "கான்பரன்ஸ்"

எனும் சொல் முன்னாலேயே அறிவிக்கப்பட்டதால் ஹ்யூமின் ஆலோசனைக்கிணங்க "காங்கிரஸ்" எனும் சொல் ஏற்கப்பட்டது.

எப்படியோ, ஹ்யூம், "காங்கிரசின் தந்தை" எனும் பெயரைத் தட்டிச் சென்று விட்டார். இந்த ஹ்யூமின் மிக நெருங்கிய நண்பர் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

**பாரதி பார்வையில்:**

'பாரத ஜனஜபை வரலாறு' எனும் நூலில் பாரதியார் காங்கிரசின் தோற்றத்தை பின்வருமாறு வருணித்தார்:

"டிசம்பர் 28ந் தேதியன்று முதற்கூட்டம் கூடியது; வெற்றி! பாரத ஜாதி பேசத் தொடங்கிற்று. அப்பேச்சின் முதல் உச்சாரணங்கள் 'அன்னிய பாஷையிலே செய்யப்பட்டது. விதியின் ரகசியங்களை உணர்தல் மிகவும் அரியதன்றோ!" (பக். 16– காங்கிரஸ் வினாவிடை மூலமும்–ஆய்வும் 1979; பெ.சு.மணி).

1935–ல் காங்கிரஸ் பொன்விழாவை ஒட்டி எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் ராஜாஜி அவர்கள், "இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது" எனக் குறிப்பிட்டார். (பக். 1, தினமணி சுடர் – 14.4.1974).

காங்கிரஸ் மகாசபையின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசும் முன்னுரிமை ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு–அளிக்கப்பட்டது; இந்தக் கொண்டாடத் தக்க வரலாற்றுச் சிறப்பை பாரதியார் பின்வருமாறு புகழ்ந்துரைத்தார்.

"தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில் காங்கிரஸ் மகா சபையின் முதற்கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் பாக்கியம் தமிழ் நாட்டு தலைவராகிய சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது."

ஜி.சுப்பிரமணிய ஐயர்; முன்மொழிந்த முதல் தீர்மானத்தின் அசல் வடிவம் வருமாறு:

Resolved:- That this Congress earnestly recommends that the promised inquiry into the working of Indian Administraton here and in England should be entrusted to a Royal Commission, the people of India being adequately represented there on and evidencess taken both in India and in England (P.17. Congress cyclopaedia - Volume 1,K.Iswara Dutt).

இந்தத் தீர்மானத்தை பம்பாய் மாநிலத் தலைவர் பிரேஸ்ஷா மேத்தா வழி மொழிய, கல்கத்தா தலைவர் நரேந்திரநாத் ஸென் ஆதரித்தார்.

**காங்கிரசில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் முதல் பேச்சு:**

முதல் தீர்மானத்தை முன்மொழிந்து காங்கிரஸ் அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசிய முதல் சொற்பொழிவின் தமிழாக்கம் வருமாறு:

"பல நூற்றாண்டுகளாக இந்தியா கொலை, கொள்ளை, ஆக்ரமிப்பு முதலான பயங்கரக் குழப்பங்களில் தாக்கப்பட்டு வந்தது. இறைவனின் கருணைமிக்க அருளாட்சியின் நோக்கால் ஆங்கிலப் பேரரசு இந்தியாவை ஆட்கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிற்கு அமைதியையும், பாதுகாப்பையும் அளித்தது. பிரிட்டிஷ் ஆட்சி இதற்கு முன் இந்தியாவை ஆண்ட ஆட்சியைக் காட்டிலும் சிறந்தக் குறிக்கோளையும், பயன்களையம் அளித்து நலம் தருவதாக அமைந்துள்ளது. பொருளாதார, தார்மீகச் செழிப்பிற்கு வழிப்படுத்தும். உலக வரலாறு எடுத்துக் காட்டும் சக்திகள், நம் நாட்டில் இந்த ஆட்சியின் வாயிலாக செயலாற்றத் தொடங்கியுள்ளன.

இந்த ஆட்சியின் காரணமாக நாம் அடைந்த பயன்களைச் சுருக்கமாகக் கூறுகிறேன். முதன் முறையாக இந்தியச் சமுதாயம் திட்டவட்டமான ஓர் ஒற்றுமைக் காட்சியைப் பெற்றது. இத்துடன் தேசிய வாழ்வு நெறியைப் பற்றிய சிந்தனை, நாட்டின் கௌரவத்திற்கும், நலனுக்கும் பாடுபட வேண்டுமென எழுந்துள்ள உள்ளார்ந்த ஆர்வம் ஆகியவனவற்றையும் குறிப்பிட வேண்டும்.

இன்று பேசும் பேறு பெற்றுள்ள நான் என் முன்னே செல்வாக்குள்ள பேரவையைக் காண்கிறேன். எங்கெங்கிருந்தெல்லாம் இங்குவந்திருக்கிறார்கள். இந்தியாவின் பல பாகங்களில் இருந்து தொடர்பு கொள்ளவும் சாதனங்கள் அருகியுள்ள இடங்களில் இருந்து வந்திருக்கிறார்கள். லாகூர், சிந்து, பம்பாய், கல்கத்தா, சென்னை முதலான இடங்களில் இருந்து வந்து குழுமியுள்ளார்கள். தேசிய அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தைக் குறிக்கும் இக்கூட்டம், மிக விரைவில் எதிர் காலத்தில் மாபெரும் திருப்பத்தை முன் கூட்டியே முடிவு செய்கிறது.

இன்று முதல், இதுவரை இருந்தாற்போல் இல்லாமல், மிக்க கட்டுப்பாடுடன், இந்தியநாடு, தேசிய கருத்து, தேசிய நாட்டம் என நாம் பேச முன் வரவேண்டும்.

கனவான்களே! மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த மா பெரும் மாறுதலுக்காக நாம் எதற்கு கடன் பட்டுள்ளோம்? ஆங்கிலேயரின் அரசியல் நெறிக்கல்லவா கடன்பட்டிருக் கிறோம். நீதியுணர்வு, பெருந்தகைமை, முன்னேற்ற உணர்வு, இவை யாவும் இந்த ஆங்கில அரசியல் நெறியின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் அல்லவோ?". (P 20-21, G.Subramania Iyer-His life and Career; Ganesh and Co-1909, Introduction- C.Karunakara Menon).

காங்கிரஸ் வரலாற்றில் திலகர் சகாப்தம் தோன்றும் வரையில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு துதி பாடுவதில் சுருதி சுத்தமாய் இருந்தனர், மிதவாத தேசியத் தலைவர்கள். தேசிய விடுதலை இயக்கத்தில் சட்ட மன்றங்களின் பங்கையும் புறக்கணிப்பதில்லை. பலமொழி, இன, மத பேதங்களிடையே தேசிய ஒற்றுமையை உருவாக்குவதில் காங்கிரஸ் எடுத்த முயற்சிகளையும் ஒதுக்கிவிட இயலாது. 1896–ல் இலண்டனில் 'இந்தியா–லண்டன்' எனக் குறிப்பிட்டு காங்கிரசைப் பாராட்டினார் தேச பக்த–மெய் ஞானி விவேகானந்தர்.

## பங்கிம்சந்திரர் தேசியம் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர்

காங்கிரஸ் மகாசபை தோற்றுவித்து பரப்பிய இந்திய தேசிய உணர்வு மக்களைக் கவர்ந்தது எனும் தமது கருத்தை ஜி.சுப்பிரமணிய ஐயர், **"வந்தே மாதரம்"** எனும் முழக்கத்தை அளித்த பங்கிம்சந்திரரின் "ஆனந்தமடம்"–தமிழாக்கம்–எனும் நாவலின் "பாயிரத்தில்" பங்கிம் சந்திரரின் கருத்தையும் விமசரித்து பின்வருமாறு எடுத்துக்காட்டினார்.

"பங்கிம் சந்திரர் சட்டர்ஜி வங்காள தேசத்தில் அபிமானத்தைக் கிளப்பக் கருதினாரேயன்றி, இக்காலத்தில் நேஷனல் காங்கிரஸ் மகா சபையாலும், மற்ற கான்பரன்சுகளாலும் உண்டாயிருக்கும் இந்தியா முழுமையும் பரவி இந்தியர் மனதை எல்லாம் கவர்ந்துவரும் விசாலித்த தேசாபிமானத்தைக் கற்பித்தவரல்லர். ஆயினும் வங்காளத்தில் வங்காளிகள் அபிமானமும் பக்தியும் வைக்க எவை காரணங்களோ அவைகளே இந்தியாவிலும் இந்தியர்கள் அபிமானமும் பக்தியும் வைக்கக் காரணங்களாம்." (பக்.4, ஆனந்தமடம்–1908; தமிழாக்கம்–மகேசகுமார் சர்மா).

"ஆனந்த மடம்" போன்ற தேசிய நாவல்களைப் படித்து தமிழர்கள் எத்தகைய தேசாபிமானத்தை வளர்க்க வேண்டும் என்பதைப் பற்றியும், கீழ்க் கண்டவாறு, அறிவுரை வழங்கியுள்ளார்.

"ஆனந்த மடத்தை வாசிக்கும் தமிழருக்குத் தமிழுலகத்தை மட்டுந்தழுவின் அபிமானமுண்டாகாமல், ஆரிய தருமத்தையும் அதை ஸ்தாபித்த பெரியோர்களின் புனிதப் பெயர்களையும் அலங்காரமாகக் கொண்டாட ஆரியாவர்த்த முழுவதும் வியாபித்த அபிமானமே உண்டாக வேண்டும்" (ஆரிய தருமம், ஆரியாவர்த்த மென்பது அக்காலத்தில் பாரத தருமத்தையும், பாரத நாட்டையும் குறிப்பனவாகும்).

### ராஜாஜி கூறியது

ராஜாஜியும் காங்கிரசின் ஆரம்ப கால வரலாற்றுப் பாத்திரத்தை காங்கிரஸ் பொன்விழாக் கட்டுரையில் பின்வருமாறு விமர்சனம் செய்து பாராட்டினார்.

முதல் இருபது ஆண்டு காலத்தில் குறிப்பாக எல்லா உத்தியோகங்களும் இந்தியர் மயமாக வேண்டுமென்பதில் இயக்கம் நாட்டம் கொண்டது. தேசிய தன்மானத்தை நிலைநாட்டுவது உடனடிக் குறிக்கோள். எல்லா உத்தியோகங்களும் இந்தியருக்கே என்பதுதான் அதற்கு உரைகல். இத்துறையின் சாதனைகள் அரிய பொக்கிஷமாக மதிக்கப் பெற்றது". முதலில் மிதவாதியாக விளங்கி 1907-க்குப் பிறகு தீவிரவாத தேசியத்திற்கு ஆதரவளித்த ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 1914-ல் "The National Congress" எனும் கட்டுரையில் 1885-ல் காங்கிரஸ் கொண்ட கொள்கையை-இதன் வழி அவருடைய அக்கால அரசியல் சிந்தனையை-ஆதரித்து எழுதியுள்ளார்.

"1885-ல் இருந்த இந்தியா வேறு; 1914-ல் உள்ள இந்தியா வேறு... சிதறிக் கிடந்த தனித்தனி தொண்டர்களை ஒரே மேடையில் கொண்டு நிறுத்துவது; பொதுவான கருத்துகளுடன், பொதுவான தேசிய இன உணர்வை (Common Nationality) தூண்டிவிடுவது; ஆட்சியிடம் முறையிடுவது; ஆகிய இவையே பல ஆண்டுகளுக்கு முன்பாக காங்கிரசின் முதல் நோக்கமா யிருந்தது. இந்த நோக்கம் இன்று எதிர் பார்த்தற்கு மேலாகவே பெருமளவு நிறைவேறி யுள்ளதை பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர்." (பக்கம்.5; நியூ இந்தியா-நவம்பர் 28, 1914).

ஜி.சுப்பிரமணிய ஐயரோடு தோளோடு தோள் நின்று காங்கிரஸ் இயக்கத்தை வளர்த்தவரும் "காங்கிரஸ் வினா-விடை" எனும் காங்கிரசின் முதல் தமிழ் அரசியல் வெளியீட்டின் ஆசிரியருமான முடும்பை வீரராகவா சாரியாரும் பின்வருமாறு காங்கிரசின் தொடக்க கால அரசியல் கோட்பாட்டை 1890 ஏப்ரல் 7-ல் காஞ்சிபுரத்தில் பேசிய கூட்டத்தில் விளக்கினார்.

"காங்கிரஸ் சபையார் கேட்டு வரும் பற்பல அம்சங்களில் சட்ட நிருபண சபை சீர்திருத்தம் வெகு முக்கியமான அம்சம். அதுதான் இத்தேசத்தாருக்குள் இப்போது பரவி வரும் பல வியாதிகளுக்கு சஞ்சீவி மருந்து."

**காங்கிரசை மக்கள் இயக்கமாக்கப் பாடுபட்டவர்:**

நிலப் பிரபுக்களும், ஆலை முதலாளிகளும், வக்கீல்களும் காங்கிரசை பலப்படுத்திய பொழுது, காங்கிரசிற்கு எளிய கிராம மக்களின் ஆதரவைத் திரட்டித் தர வேண்டும் என பாடுபட்டார் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

*சென்னையில் 1887–ல் முதன் முறையாக காங்கிரஸ் மகா சபை கூடவிருந்த பொழுது 24.12.1887 சுதேச மித்திரனில் நீண்டதொரு தலையங்கம் எழுதப்பட்டது. அதன் ஒரு பகுதி வருமாறு:*

*"பம்பாயில் ராஜ ஐசுவரியம் பெற்ற வர்த்தகர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். இவர்களைப் போல ஐசுவரியம் படைத்த வியாபாரிகளாவது, பெங்காளத்திலுள்ள வர்களைப் போல மிக ஐசுவரியம் படைத்த பெரிய ஜமீன்தாரர்களாவது மிகுதியாக இங்கே இல்லை... நமது இராஜதானிச் சாமான்ய ஜனங்களும் குடிகளும் காங்கிரஸ் சபையின் முக்கியத்தையும் அதன் உபயோகத்தையும் நன்றாயறியும்படி செய்து காங்கிரஸ் விஷயமாய் அவர்களுடைடய அனுதாபத்தைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று... அனேக கிராமங்களில் குடிகள் "முதல் காங்கிரஸ் சபைக்கு கையொப்பம் செய்து வந்ததைப் பார்த்த காங்கிரஸ் சபை சாமான்ய ஜனங்களினுடைய அனுதாபமும் ஆதரவும் பெற்றதில்லை" என்று சொல்லத் துணிவார்கள்." (பக்கம் 15–17 குமரி மலர்; நவம்பர் 1969).*

## "வக்கீல்! வக்கீல்!"

*1893–ல் சுதேசமித்திரன் வாரம் இரு முறையாக வெளி வந்தது. **"சென்னை சட்ட நிருபண மெம்பர்கள் எலெக்ஷன்"** எனும் தலையங்கம் சுதேசமித்திரனில் எழுதப்பட்டது. இந்தத் தலையங்கத்தில் பின்வரும் பகுதி காங்கிரசின் பொதுமக்கள் பிரதிநிதித்துவக் கோட்பாட்டைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்ததை எடுத்துக்காட்டுகிறது.*

*"பி.ஏ., பி:எல்., களும், வக்கீல்களும் போதுமான வரையில் சட்ட நிருபண சபையில் இருக்கிறார்கள். ஆனால் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த*

விஷயங்களில் விசேஷ அனுபவமும், இவைகளை விருத்தி செய்வதற்கேற்ற ஆலோசனை சொல்லத்தக்கவர்களும் சட்ட நிரூபண சபையில் ஒருவர் கூடவில்லை" (பக்.621, சுதேசமித்திரன், மே 5– 1893).

இந்தத் தலையங்கத்தைத் தொடர்ந்து **"வக்கீல்! வக்கீல் எங்கும் வக்கீல்!"** எனும் துணைத் தலையங்கமும் பெல்லாரி சபாபதி முதலியாரை ஆதரித்து எழுதப்பட்டது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

"இப்பொழுது புதிய நிபந்தனைகளின்படி இச் சென்னை சட்ட நிரூபண சபைக்கு மெம்பராக வேண்டுமென்று பிரயத்தனப்படும் சுதேசிகள் அநேகமாய் எங்கும் வக்கீல்களே! வடக்கே சுப்பாராவும் ஜெம்புலிங்க முதலியாரும் வக்கீல்களே. சேலம் ஜில்லா விஜயராகவாச் சாரியாரும், தஞ்சை ஜில்லா சாமிநாதய்யரும், கல்யாணசுந்தரமய்யரும் வக்கீல்களே. சென்னை முனிசிபாலிடியிலும் ரங்கய்ய நாயுடு வக்கீலே. அநந்தாச்சாரியாரும் வக்கீலே. இப்படி எங்கும் வக்கீல்களே அச்சபைக்கு நியமிக்கப்பட்டு வந்தால் கவுரவம் அச்சபைக்கு குறைவுபடும். ஆனால் வக்கீல்கள் அச்சபைக்கு நியமிக்கப்பட வேண்டியதும் அவசியமே! பார்லிமெண்டில் பாதிக்கு மேல் வக்கீல்களே. ஆனபோதிலும், அவர்கள் கருப்பை வெளுப்பென்றும் வெளுப்பைக் கருப்பென்றும் சொல்லத் தக்கவர்களென்று அவர்களுக்கு சாபமுள்ளதால் அவர்கள் பேச்சுக்குக் கொஞ்சம் கவுரவம் குறைவே. மேலும் கவர்ன்மெண்டார் இங்கு ஜனங்களுக்காகச் செய்யப்படும் வேலைகளையெல்லாம் வக்கீல்களே செய்து முடிக்கிறார்களென்று சொல்லி வருகிறார்கள். இச்சமயத்தில் அங்கு மிங்குமள்ள மற்ற தொழிலாளிகளை நமது தேசத்தில் சட்ட நிரூபண சபைக்கு நியமிக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான்

அச்சபை கவுரவப்படும்". (பக் 621; சுதேசமித்திரன் மே 5, 1893).

காங்கிரஸின் வருக்க உள்ளடக்கம் பற்றிய சிந்தனையை இயன்றளவு ஜி.சுப்பிரமணிய ஐயர் வெளிப்படுத்தியது, பாராட்டுதலுக்குரியது.

## காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக நியமிக்கப் படாததேன்?

காங்கிரஸ் மகாசபையின் கூட்டங்களில் எவ்வகைத் தீர்மானத்தின் மீதும் முன்னறிவிப்பின்றி தகுந்த புள்ளி விவரங்களுடன் பேசும் ஆற்றல் பெற்றிருந்தும், கட்சியை வளர்ப்பதில் சிறந்த செயல்வீரராக விளங்கியும், காங்கிரஸ் மகாசபையின் தலைவராக ஒருமுறைகூட ஜி.சுப்பிரமணிய ஐயர் நியமனம் பெறவில்லை.

இதன் காரணத்தை அகத்தெழுச்சியுடன் ஆய்ந்து வெளியிட்டார், குருமலை சுந்தரம்பிள்ளை. தமது நூலில் "ஜி.சுப்பிரமணிய ஐயரும் காங்கிரஸ் அக்கிராசனமும்" எனும் தனித்தலைப்பில் சாற்றியுள்ளதின் சில கருத்துகள் வருமாறு:

"இந்திய தேச பக்தர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐயர் பெற்றிருக்கும் ஸ்தானத்தை நோக்கினால் இவர் நான்காவது ஐந்தாவது காங்கிரசிலேயே அக்கிராசனம் பெற்றிருக்க வேண்டியவர்... ஐயரின் உரிமைகளைப் பற்றி ஒருவரும் நினையாதொழிந்தமைக்குக் காரணம் இன்னதென விளங்குகின்றது... சுருங்கக் கூறுமிடத்து நமது ஐயரிடம் பெருத்த செல்வமில்லாமையே இதற்குப் பொதுவான காரணமெனத் தெரிகிறது... சென்னையில் பெருத்த பொருள் படைத்தவர்களும், உயர்ந்த பதவியிலும், சர்க்காரில் செல்வாக்கு முடைவர்களும் எவர்களோ

அவர்களே எல்லோருக்கும் மேலாய் உயரே கிளம்பப் பார்க்கிறார்களேயன்றித் தங்கள் மாகாணத்தில் தொடக்கத்தில் தேசாபிமானப் பயிருக்கு விதை ஊன்றியவரும், ராஜாங்க விஷயங்களில் இணையற்ற பொதுக் கல்வியும் அறிவும் அனுபவமும் படைத்தவராகிய நமது ஐயரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்ற விரதம் பூண்டிருக்கிறார்கள்". (பக். 34–35 ஜி.சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்).

காங்கிரஸ் சபையின் சட்டதிட்ட அமைப்பு வழி பொதுமக்கள் பிரதிநிதிகள் தலைவரை தேர்ந்தெடுப்ப தற்கு வகை செய்யப்படவில்லை. ஆதிக்க சக்திகள் ஆட்டிப் படைக்கும் வழியில் காங்கிரஸ் தலைமைத் தேர்வும் அமைந்திருந்தது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் காங்கிரஸ் தலைவராக நியமனம் பெறாததற்கு மேலும் ஒரு முக்கிய காரணத்தை குருமலை சுந்தரம் பிள்ளை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"இராஜாங்க விஷயங்களில் மட்டும் உழைத்த ஸ்ரீ திலகரையும், ஆசார சீர்திருத்தங்களில் மட்டும் உழைத்த ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலுவைப் பார்க்கிலும் ஆசார சீர்திருத்தம், இராஜாங்க சீர்திருத்தம் இரண்டிலுமுழைத்த நமது ஐயர் அதிகப் பெயரையும், அதிகப் பொது ஜன மதிப்பையும் பெற்றிருக்க வேண்டியது நியாயமாயிருந்தும், அவருக்கு இராஜாங்க சப்ந்தமாய்க் கிடைத்த நற்பெயரும் கூட அவருடைய ஆசார சீர்திருத்தச் செயல்களால் மழுக்க மடைந்துவிட்டது. இதுவே சென்னைப் பெரிய மனிதர்கள் நமது ஐயர் மீது காட்டி வந்திருக்கும் வெறுப்பிற்கும் காரணமாயிருக்கலாம். ஆதலால் இராஜாங்க விஷயத்தில் உழைத்தற்காகக் கிடைத்த மதிப்பிலிருந்து ஆசாரசீர்திருத்த செயல்களால் உண்டான

வெறுப்பைக் கழித்து மிச்சமிருக்கும் மதிப்பையே ஜி.சுப்பிரமணிய ஐயர் இப்போது பெற்றிருக்கிறார்". (பக். 84; மேற்படி நூல்).

அரசியலில் பெறும் செல்வாக்கு எவ்வளவு கூட்டல்–கழித்தல்களைச் சார்ந்திருக்கிறது என்பதை ஜி.சுப்பிரமணிய ஐயரின் மூலம் விளக்கிவிட்டார், குருமலை சுந்தரம்பிள்ளை.

## மிதவாதியா ? தீவிரவாதியா ? (Moderate? or Extremist?)

1907–ல் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் தோன்றிய பிளவின் காரணமாக தேசிய இயக்கத்தில் மிதவாதம், தீவிரவாதம் என இரு அணிகள் பிரிந்தன. அரசியல் விமர்சனத்தின் சௌகரியத்திற்காக "moderates" என்றும் "Extremists" என்றும் பெயரிடப்பட்டனர். "Extremists" எனக்குறிப்பிடப்பட்ட தீவிர தேசியவாதிகள் தங்களை "Nationalists" என்றே அழைத்துக்கொண்டனர். இவர்கள் சார்ந்த கட்சி "New Party", 'புதிய கட்சி', என்றும் அழைக்கப்பட்டது.

பாரதியார் ஆசிரியராகவிருந்த "Bala Bharata"எனும் மாத இதழில் [நவம்பர், 1906–ல் பால பாரதா மண்டயம் எஸ்.என்.திருமலாசாரி அவர்களால் தொடங்கப்பட்டது]. சூரத் காங்கிரஸைப் பற்றிய பின்வரும் குறிப்பு "The Congress split and after"எனும் தலைப்பில் வெளிவந்தது.

"The young and tender shoot, the shoot of Nationalism has now emerged above the ground full of silent aspiration towards the high heavens and the first two leaves which it has put forth inclined seemingly towards opposite directions but conected, be it remembered at one germinal centre, should but gladden the hearts of those who are interested in the development of that priceless plant". (P.75; Bale Bharata-May 1903.)

விலைமதிப்பற்ற செடியின் மூலவிதை ஒன்றே யானாலும் எதிரும் புதிருமாகக் காணப்படும் இரு இலைகள் தோன்றியுள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது என இந்தக் குறிப்பு கூறினாலும், மிதவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை தீவிரவாதிகள் எழுச்சியுடன் நடத்தினர்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அரசியல் சிந்தனையில் சூரத் காங்கிரஸ் ஒரு திருப்பத்தைத் தந்தது.

## சூரத் காங்கிரஸில் ஜி.சுப்பிரமணிய ஐயர்

சூரத் காங்கிரசிற்கு முந்திய ஜி.சுப்பிரமணிய ஐயரின் மிதவாத அரசியல் சிந்தனைக்குத் தமிழகத்தில் எதிர்ப்பு காட்டினார், பாரதியார். இதன் விவரம் வருமாறு:

1907 டிசம்பர் 6-ம் தேதியன்று, வ.உ.சி. அவர்கள் தலைமையில் சென்னை கடற்கரையில் சூரத் காங்கிரசில் தீவிரவாத தேசிய அணியின் சார்பாக செல்லவிருக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஒரு கூட்டம் நடந்தது. ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், சூரத் காங்கிரசில் தீர்மானங்களை வலியுறுத்திப் பேச, கே.வெங்கட ரமணரால், சி.சுப்பிரமணிய பாரதி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, சி.செல்வராஜ் முதலியார், சக்கரை செட்டியார் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இதற்கான தீர்மானத்தை வ.உ.சி. அவர்களே முன் மொழிந்தார், அவையில் இருந்த சிலர் "ஜி.சுப்பிரமணிய ஐயர் பெயரும் சேர்க்கப்பட வேண்டும்" எனக் குரல் கொடுத்தனர். இந்தச் சமயத்தில் பாரதியார் எழுந்து நின்று எதிர்ப்பு தெரிவித்தார். முன்பு ஒரு கூட்டத்தில் "பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியர்கள் சுயராஜ்யம் அடைய வேண்டும்" என சுப்பிரமணிய ஐயர் பேசியதைச் சுட்டிக் காட்டி பாரதியார் ஜி.சுப்பிரமணிய ஐயரின் பெயர்

"நேஷனலிஸ்ட் பட்டியலில் இடம் பெறக்கூடாது எனக் கூறினார். (பக். 92; G.O. நெ.1542–(Confd' 1- 3.10.1911)

சூரத் காங்கிரசிற்கு ஜி.சுப்பிரமணிய ஐயர் சென்றதை வ.உ.சி.அவர்கள், **"எங்கள் சென்னைத் தலைவர் ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர்** அவர்களும் சென்னையில் இருந்து சூரத்துக்குச் சென்றார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். (பக். 17; வி.ஓ.சி. கண்ட பாரதி).

"சென்னை பிரதிநிதிகளின் கூடாரத்தில் ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர் அக்கிராசனாபதியாக ஓர் மீட்டிங் நடந்தது" என பாரதியாரும் "எங்கள் காங்கிரஸ் யாத்திரை" எனும் நூலில் தெரிவித்தார்.

சூரத் காங்கிரசிற்கு முன்பு, காங்கிரசிற்குள் இருந்த நேஷனலிஸ்ட்களைப்பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர் முடிவான ஒரு கருத்தைக் கொள்ளாமல். இருந்ததை பாரதியார் கேள்விக்குரியதாக்கினார்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மிதவாத தேசியத்தில் இருந்து தீவிரவாத தேசியத்திற்கு வந்து சேர்ந்ததை பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகையில் மிகத் தெளிவாக கண்டு கொள்கிறோம்.

அக்டோபர் 13: 1906–ஆம் 'இந்தியா' இதழில், **"புதிய கட்சியும் சென்னைப் பத்தரிகைகளும்"** எனும் தலைப்பில் வந்த விமர்சனத்தில் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கது.

"...'சுதேசமித்திரன்' பத்திராதிபர் இந்தப் புதிய கட்சி ஏற்பட்ட நாள் முதலாக இதைப்பற்றி ஒன்றும் எழுதாமல் சாமர்த்தியமாக இருந்து வருகிறார். இரண்டு தினங்களின் முன்பு இவ்விஷயத்தைப்பற்றி அப்பத்திரிகை லேசாக பிரஸ்தாபம் செய்திருப்பதில் புதிய கட்சியைப் பற்றி தனக்குள்ள அபிப்பிராயத்தை வெளியிடாமல் 'ஹிந்து', 'பேட்ரியட்' முதலிய சென்னைப் பத்திரிகைகளில் மட்டிலும் வந்ததைத் தொகுத்து கூறிவிட்டு மவுனமாக இருக்கிறது". (பக்.38–பாரதி தரிசனம் 1... 1975).

திரு.எஸ்.கஸ்தூரிரங்க ஐயங்கார் 'ஹிந்து'வும், திரு.கருணாகர மேனனின் 'இந்தியன் பேட்ரியட்'டும் மிதவாத தேசியத்தை ஆதரித்தன. தீவிரவாத தேசியத்தைக் கண்டித்தன. ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்தப் பத்திரிகைகளின் கருத்துக்களை சுதேசமித்தரனில் வெளியிட்டதையே பாரதியார் குறை கூறினார்.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்ட சுதந்திரத்தை கேட்காமல், கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பெற்ற சுயாட்சியைக் கேட்ட ஜி.சுப்பிரமணிய ஐயரை மீண்டும் பாரதி டிசம்பர் 22, 1906ஆம் இந்தியா இதழில் கண்டனம் செய்தார். 'அமிர்தரூபமான பிரிட்டிஷ் சகோதரர்களின் கீழிருக்கும் ஆனந்தத்தை சுதேசமித்திரன்' பத்திரிகைத் தலைவர் நெடுங்காலம் அனுபவித்துக் கொண்டிருக்கட்டும்" என ஜி.சுப்பிரமணிய ஐயரை நையாண்டி செய்தார்.

தீவிரவாத தேசியத்தை முதலில் ஆதரிக்கத் தயங்கிய சுப்பிரமணிய ஐயர் பிறகு ஆதரித்ததையும் பாரதியார் வரவேற்றார். ஜனவரி 19, 1907–ல் தமது 'இந்தியா'வில் பாரதியார் எழுதியதாவது:

"சில மாதங்களுக்கு முன்பெல்லாம் சுதேசமித்திரன் பத்திரிகை நிதானக் கட்சியின் பிரதிநிதியாகப் ('moderate'என அழைக்கப்பட்டோரின் கட்சியை பாரதியார் நிதானக் கட்சி எனக் குறிப்பிடுகின்றார்) பேசி வந்தது. இப்போது மித்திரன் பத்திராதிபர் கல்கத்தா வுக்குச் சென்று வந்த பிறகு ஒரு முக்கியமான வேறுபாடு காண்கிறோம். புதிய கட்சியைப் பற்றி நேரே புகழ்ந்து பேசாவிட்டாலும், அதன் நோக்கங்களெல்லாம் சரியானவையென்று அப்பத்திரிகை பேசத் தொடங்கி யிருக்கிறது. புதிய கட்சியின் பிரதமாசாரிய மூர்த்தியாகிய ஸ்ரீமான் பால கங்காதர திலகர் முதலியவர்களின்

கருத்துகளை மிகவும் சந்தோஷத்துடன் மேற்கோளெடுத்துக் காட்டி அப்பத்திரிகை போதனை புரிகின்றது. தமிழ்ப் பாஷையில் ஒரே தினப் பத்திரிகையாக உலவும் 'சுதேசமித்திரன்' நமது பக்கமாய் சிறிது சிறிதாய் சார்வடைந்து வருவது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்." (பக்கம் 43 – பாரதி தரிசனம் – 2).

பாரதியார் குறிப்பிடும் 'புதிய கட்சி'யின் தலைவர்களுள் ஒருவரான விபின் சந்திரபாலர் சென்னைக்கு 1907 மே மாதம் வந்து 3.5.1907 முதல் 8.5.1907 வரையில் திருவல்லிக்கேணி கடற்கரையில் சொற்பொழிவுகளை ஆற்றினார். முதல் நாள் சொற்பொழிவிற்கு ஜி.சுப்பிரமணிய ஐயர் தலைமைத் தாங்கினார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

நாவலர் விபின் சந்திரபால், ஜி.சுப்பிரமணிய ஐயரின் தலைமையில் 'The new movement" எனும் தலைப்பில் பேசினார். அவர் தமது பேச்சில் ஜி.சுப்பிரமணிய ஐயரைக் குறிப்பிட்டு பின்வருமாறு பேசினார்.

"...I put it to you, Sir, (Pointing to Mr.G.Subramania Aiyer) you presided on the last occasion (turning to the chairman) you are the master of the meeting to-day, and I put it to you all, gentleman, whether I mislead you (cries of No)" (P.58, Speeches of Sri.Bepin Chandra pal - 1907-Ganesh & Co., Madras.)

1907–ல் விபின் சந்திரபால் அவர்களின் சென்னை வருகையும், 1908–ல் அவர் சிறை மீண்ட நாள் கொண்டாட்டமும் தமிழக அரசியலில் புதியப் பாய்ச்சல்களை நிகழ்த்தின. குறிப்பாக தூத்துக்குடியை மையமாகக் கொண்ட தேசிய போர்க்களம் தோன்றவும், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் கடுஞ்சிறைவாசம் அனுபவிக்க வேண்டியதாயிற்று. விபின் சந்திரபாலின் சென்னைப் பேச்சுகளுக்காக அவர் மீது நடவடிக்கை

எடுக்க யோசித்து, பின்பு கைவிடப்பட்டது. (ஜி.ஓ. நெ.923 Jud'l-confdl' 4.7.1908)

விபின் சந்திரபாலின் கூட்டத்திற்கு ஜி.சுப்பிரமணிய ஐயர் தலைமையேற்றது அந்த நாளில் பரபரப்பான செய்தியாக விளங்கியது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் முழுவதுமாக புதிய கட்சி'யை ஆதரித்ததை பாரதியார் மிக்கத் திருப்தியுடன் மே 11–1907–ல் 'இந்தியா'வில், பின்வருமாறு குறிப்பிட்டார்:

"புதிய கட்சிக்கும், பழைய கட்சிக்கும் இடையில் அங்கு பாதி, இங்கு பாதியாக நின்ற சுதேசமித்திரன் பத்திரிகை இப்போது முற்றிலும் நமது பக்கத்தைச் சார்ந்துவிட்டது. (பக்.87–பாரதி தரிசனம் – 2).

**விபின் சந்திரபாலருக்கு**
**ஜி.சுப்பிரமணிய ஐயரின் பாராட்டுரை:**

'புதிய கட்சி'யின் தலைவர்களை பாரதி ஏற்றிப் போற்றியதைப் போலவே ஜி.சுப்பிரமணிய ஐயரும் பாராட்டினார்.

திருவல்லிக்கேணி தெற்குக் கடற்கரையில் 1908 மார்ச் 6–ல் விபின் சந்திரபால் விடுதலை பெற்ற நாள் கொண்டாடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பாரதியார் "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" எனும் பாடலைத் தமது பேச்சுக்கிடையில் இருமுறை பாடினார். இவரைத் தொடர்ந்து ஜி.சுப்பிரமணிய ஐயர் பேசினார். ஜி.சுப்பிரமணிய ஐயர் பேச எழுந்ததும் 'ஆங்கிலத்தில் பேசவும்' என சிலர் குரல் கொடுத்த போதும் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆங்கிலத்தில் பேச மறுத்து அதற்கான காரணத்தையும் குறிப்பிட்டுக் கூறியதாவது:

"இன்று நான் 'சுதேசிய ஸ்வராஜ்' எனும் பொருளில் பேசப் போகிறேன். நமது இந்தக் கொள்கைகளுக்கு

ஒவ்வாத அந்நிய மொழியில் பேசப்போவதில்லை. தமிழில்தான் பேசப்போகிறேன். (ஜி.ஓ.நெ.923; 4.7.1908).

ஜி.சுப்பிரமணிய ஐயர் தமது பேச்சில் இந்திய வரலாற்றுச் சிறப்புகளை எடுத்துரைத்து விட்டு தமக்கும் விபின் சந்திரபாலுக்குமுள்ள தொடர்பை பின்வருமாறு விளக்கினார்.

"விபின் சந்திரபாலரை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அறிவேன். கடந்த நான்கு அல்லது ஐந்தாண்டுகளாக அவர் தொண்டுகளைப் பார்க்கும் பொழுது அவர் ஓர் அவதார புருஷரோ என எண்ணத் தோன்றுகிறது. ஒரு புதிய சக்தியையே படைத்திருக்கிறார்". (மேற்படி அரசு ஆணை)

**ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு சுரேந்திரநாத் ஆர்யா, சக்கரை செட்டியார் பாராட்டு:**

'புதிய கட்சி'யின் தீவிர உறுப்பினர்களும் பாரதியாரின் நெருங்கிய தோழர்களுமாகிய சுரேந்திரநாத் ஆர்யாவும், வழக்கறிஞர் சக்கரை செட்டியாரும், ஜி.சுப்பிரமணிய ஐயரும், 'புதிய கட்சி'க்கு அளித்த ஆதரவைப் பாராட்டியுள்ளனர்.

திருவல்லிக்கேணி தெற்கு கடற்கரையில் 1908 மார்ச் 9–ல் ஆர்யா தெலுங்கில் பேசியபொழுது ஜி.சுப்பிரமணிய ஐயரை பின்வருமாறு பாராட்டினார்.

சூரத் காங்கிரசிற்குப் பிறகு மூத்த தலைவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் காட்டிய உற்சாகமும் ஊக்கமும் எங்களை ஒத்த இளைஞர்களை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியதில் வியப்பில்லை". (ஜி.ஓ.நெ.1542 conf'dl 13.10.1911)

பாரதியின் நண்பராக அரசியல் இயக்கத்தில் சேர்ந்த காலம் முதல் இடதுசாரி இயக்க மனப்பான்மை கொண்ட

சக்கரை செட்டியார், ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றி பின்வருமாறு புகழ்ந்தார்.

"Alas! when the New Party arouse, he was the one faithful old politician, who like Milton's angel remained faithful among the faithless. Until him gathered the fiery and impetuous spirits as into a father. He led us on through the cleverest vak l is Madras frowned and the Madras modarates who still remained true to the lost cause swept aside their garments, let the should be politically polluted. (*பக். 11: சுதேச கீதங்கள் – 2–ம் பாகம் 1922, செல்லம்மா பாரதி*).

**கோகலேவிற்கு எழுதிய கடிதத்தில்:**

*மிதவாதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிரிட்டிஷ் அதிகார வருக்கம் தீவிரவாதிகளை இனங்கண்டு அடக்குமுறைகளால் ஒடுக்கிய சூழ்ச்சியை தெள்ளத் தெளிவாக ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள்; கோபாலகிருஷ்ண கோகலேவிற்கு–மிதவாத தேசியத் தலைவர்–எழுதிய கடிதத்தில் அம்பலப்படுத்தியுள்ளார்.*

"...After crushing the New Party how long do you think would the bureaucracy hesitate to discover justification for crushing the old party too? The repression of the New Party would certainly cause resentment in the minds of some, at all events, of the old and these would soon develop sympathy with the views of - the latter. An extreme party would soon be formed, and the moderates would be called upon to discover and separate from their fellows, who would be denounced as seditious and disloyal. Let us unhderstand that the sympathy with the so called moderate party is only feighed. The bureaucracy has no sympathy whatever with the Indians, that looks to swaraj even of the colonial kind, as the goal of their political endeavours "THE HINDU" April 17-1908).

பிரிட்டிஷ் ஆட்சி, மிதவாதிகளிடம் காட்டும் பரிவு போலித்தனமானது. பிரிட்டிஷ் அதிகார வருக்கம் சமயம் வரும்பொழுது மிதவாதிகளையும் ஒழித்துக் கட்டுவார்கள் எனும் கருத்தை ஜி.சுப்பிரமணிய ஐயர் வெளியிட்டது கூர்ந்து நோக்கத்தக்கது.

மிதவாதிகளும், தீவிரவாதிகளும் ஒன்றுபட நடவடிக்கை எடுக்குமாறும், ஜி.சுப்பிரமணிய ஐயர் கோகலேவிற்கு வேண்டுகோள் விடுத்தார்.

1914-ல் அன்னிபெசண்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா'வில் தேசிய காங்கிரஸ் எனும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையின் கருத்தே, ஜி.சுப்பிரமணிய ஐயரின் முடிவான கருத்தாகும்.

காங்கிரசின் சட்ட விதிகள், "புதிய கட்சி" யாரும் இணைவதற்கான வகையில் திருத்தப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். "பழைய", "புதிய கட்சி" இரண்டுமே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் 'சுயராஜ்யம் அடைவதையே குறிக்கோள்களாகக் கொண்டன என்றும் இந்தக் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

"I would advocate the inroduction of such modifications of the rules of the contitution as would bring about a reconciliation of the so called moderates and Nationalists and thereby enable those patriotic and high minded Indians that have stood aloof from the benefit of their Co-operation and support within as well as without that body. This reconcilliation ought to be easy now in as much as the first condition of the constitution namely the achievment of Swaraj within the limits of the British Empire is the goal of the congress is admitted and agreed to by the so called Nationalists as well as Moderates". (P. 5, New India-November 21 - 1914).

*ஜி.சுப்பிரமணிய ஐயர், மிதவாதியா? தீவிர வாதியா எனும் கேள்விக்குரிய முடிவான பதில், தமிழ் நாட்டு அரசியலைப் பற்றி பாரதி எழுதிய ஆங்கிலக் கட்டுரையில் கிடைக்கின்றது.*

"The New political movement gained much support owing chiefly to the labours of the Tamil Journals SWADESAMITRAN and INDIA. The former which it still the leading Tamil daily of the presidency was, that time, edited by the veteran Journalist G.Subramania Iyer. It preached the new gospel of course, and was almost about to be prosecuted on that course. But could not cut itself altogether away from its old modarate moorings". (P. 16, The Hindu Weekly Review, December. 10, 1962).

**ஜி.சுப்பிரமணிய ஐயரின்**
**அரசியல் வாழ்க்கையின் முடிவு:**

*பாரதி மேலே சுட்டிக் காட்டியது போல புதிய கட்சியின் செய்திகளைப் பரப்பத் துணிந்த சுதேசமித்திரனின் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பழிவாங்க சென்னை அரசு முடிவு செய்தது.*

*13.1.1908 முதல் 25.6.1908 வரையில் சுதேசமித்திரனில் வெளி வந்த செய்திகள் பல ராஜத்துவேஷக் குற்றச் சாட்டிற்காகத் தொகுக்கப்பட்டன. தொழுநோயின் கடுமையான தாக்குதலினால் கொடுந்துன்பத்தை அனுபவித்து வந்த ஜி.சுப்பிரமணிய ஐயரின் மீது சென்னை அரசாங்கம் 124–ஏ, 153–ஏ, 505 எனும் கிரிமினல் சட்டப் பிரிவுக் கணைகளைத் தொடுத்தது.*

*தூத்துக்குடியில் வ.உ.சி.யின் "சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை" ஒழித்துக் கட்டத் தோன்றிய அடக்குமுறைகளையும், சூழ்ச்சிகளையும், சிதம்பரனார்*

மீது தொடுக்கப்பட்ட ராஜத்துவேஷ வழக்குப் பற்றியும், வெளி வந்த 16 செய்திகள் சுதேசமித்திரன் மீது ராஜத்துவேஷ வழக்கிற்காகத் தொகுக்கப்பட்டன. (G.O. நெ.1212; 2.9.1908).

தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் காந்தியடிகள் தலைமையில் நடத்திய அறப் போராட்டச் செய்திகள், நான்கிற்காக வெளியிட்டதும் ராஜத்துவேஷ சம்பந்தமான செய்திகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இவ்வாறு சேர்க்கப்பட்ட செய்திகளின் விவரங்கள் அரசாங்க அறிக்கைப்படி வருமாறு:

13.1.1908 Sufferings of our brothers in Transvail

23.1.1908 Indian coolies beaten to death by the police

22.2.1908 Attempt at Boycott at Transvail.

11.3.1908 Nepal, the Zenith of the civilization of the whites.

(மேற்கண்ட அரசு ஆணை)

இவ்வாறு 'அட்வகேட் ஜெனரல்' பார்வைக்கு வைக்கப்பட்ட செய்திகள் 80 ஆகும். இவைகளில் மூன்று குற்றச்சாட்டுகளாகவும், ஒன்பது ராஜத்துவேஷத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. இதன் பேரில் ஜி.சுப்பிரமணிய ஐயர் திருக்குற்றாலத்தில் உடல் நலமின்மையால் ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த பொழுது ஆகஸ்ட் 21, 1908-ல் கைது செய்யப்பட்டார். சென்னைக்கு கொண்டு வரப்பெற்று மூன்று வாரங்கள் சிறையில் வைக்கப்பட்டார்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் கைது செய்யப்பட்டதை அறிந்து அரசியல் தலைவர்கள் எல்லோரும் கொதித்தெழுந்து கண்டனம் செய்தனர்.

சென்னையில் அரசாங்கத்திடம் செல்வாக்கு பெற்ற மிதவாதத் தலைவர்கள் எல்லோரும் கொதித்தெழுந்து கண்டனம் செய்தனர்.

சென்னையில் அரசாங்கத்திடம் செல்வாக்கு பெற்ற மிதவாதத் தலைவர்கள் ஜி.சுப்பிரமணிய ஐயரின் விடுதலைக்கு முயற்சி செய்தனர்.

அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.சிவஸ்வாமி ஐயர் ஆகஸ்ட் 26, 1908 பிற்பகலில் ஜி.சுப்பிரமணிய ஐயரை சிறையில் சந்தித்தார். அச்சமயம் "பிரஸ்தாபக் கட்டுரைகளுக்குத் தாம் பொறுப்பல்ல" எனக் கூற ஜி.சுப்பிரமணிய ஐயர் மறுத்து விட்டார். அந்தக் கட்டுரைகள் ராஜத்துவேஷம் (Seditious) என்றோ, வகுப்புத்துவேஷம் (Classhatred) என்றோ ஜி.சுப்பிரமணிய ஐயர் ஒப்புக் கொள்ள மறுத்தார். இதற்கு மறுமொழியாக சிவஸ்வாமி ஐயர், "ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது முக்கியமல்ல; தமது நடத்தையைத் தற்காத்துக் கொள்ள கட்டுரைகளை நியாயபடுத்த முன்வராமல் இருக்கலாம்" என ஆலோசனை கூறினார்.

ஜி.சுப்பிரமணிய ஐயரின் கடுமையான உடல்நல பாதிப்பைக் கருத்தில் கொண்டு, சில நிபந்தனைகளின் பெயரில் அவர் மீது போடப்பட்ட வழக்கை விலக்கிக் கொள்வதென அரசு முடிவு செய்தது.

ஜி.சுப்பிரமணிய ஐயர் செப்டம்பர் 5, 1908–ல் விடுதலை செய்யப்பட்டார். இந்த விடுதலை முயற்சியில் வி.கிருஷ்ணசாமி ஐயரின் முன் முயற்சி பெரும் பங்கு வகித்தது.

**ஜி.சுப்பிரமணிய ஐயரின் விடுதலை பற்றி பாரதியார்:**

பாரதியார் ஜி.சுப்பிரமணிய ஐயரின் விடுதலையைப் பற்றி "ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயரின் கேஸ்" எனும் தலைப்பில் எழுதியதில் ஒரு பகுதி வருமாறு:

"ஸ்ரீ.ஜி.சுப்பிரமணிய ஐயரை கவர்ன்மெண்டார் விடுதலை செய்து விட்டார்கள். அதாவது ஆயிரக் கணக்கான பெருந்தொகைக்கு நன்னடத்தை ஜாமீன் வாங்கிக் கொண்டு அந்த வயோதிக தேசாபிமானியை நிஷ்காரணமாக அவமானப்படுத்திவிட்டு, அப்பால் வழக்கம் போலத் தீவாந்திரமேற்றுவதற்குப் பதிலாக அதனினும் கொடுமையாக இனி ஆயுள் இருக்குமளவும் நாட்டு விஷயங்களைப் பற்றி சர்க்கார் அதிருப்தி அடையும் வண்ணமாகப் பேச வேணும், எழுதவேணும் செய்வதில்லையென்று அவரிடம் உடன்படிக்கை வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதை ஓர் பெருங்கருணைச் செய்கையாக நாட்டிலே பல மூடர்கள் கொண்டாடுவது மட்டுமன்றி, கவர்ன்மெண்டாரும் அங்ஙனமாகவே கருதுவதாகத் தோன்றுகிறது. எனினும் ஸ்ரீமான் ஜி.சுப்பிரமணிய ஐயர் இதையோர் தயாளச் செய்கையாக கருதமாட்டாரென்று நம்புகிறோம்". (பக். 16; 'இந்தியா'– அக்டோபர் 10, 1908)

### சுப்பிரமணிய ஐயரின் விளக்கம்:

நிபந்தனைக்கு உட்பட்டு விடுதலை பெற்று வெளிவந்த ஜி.சுப்பிரமணிய ஐயரைக் குறை கூறியதற்குப் பதில் அளித்து 'இந்து'வின் நிருபரிடம் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதாவது:

"The world may misunderstand me. you know how helpless I am in my house having to depend upon the ministrations of half a dozen persons. If sir Arthur Lawyley's Government could have guaranteed that hanging would be the punishment I would have faced the trial with great cheer and a sense of relief. At this age and with this physical constitution how could I endure the discipline of hard labour?" (P. 143: A Hundred years of The Hindu)

கண்பார்வை மங்கிய நிலையிலும் பிறரைக் கொண்டு சுதேசமித்திரனுக்கு தாம் கூறுவதை எழுதச் சொன்னார்.

## காந்தியடிகள் சந்திப்பு

தென்னாப்பிரிக்காவிற்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற இந்தியர்கள்–அவர்களுள் பெரும்பான்மையோர் தமிழர்கள். இன ஒதுக்கல் சட்டத்தின் அடக்கு முறையால் துன்பப்பட்ட பொழுது, காந்தியடிகள் அறப் போராட்டத்தைத் தொடங்கினார். தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பிரச்னைகளுக்கு சுதேசமித்திரன் எண்ணற்றத் தலையங்கங்களை எழுதியும், செய்திகளை வெளியிட்டும், பொது மக்கள் கருத்தை உருவாக்கியது. தென்னாப் பிரிக்காத் தழிர்கள் சுதேசமித்திரனை தங்கள் பத்திரிகை யாகக் கொண்டாடினார்கள்.

தென்னாப்பிரிக்காத் தமிழர் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வந்த சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயரின் கண்ணீரைத் துடைக்க காந்தி அடிகளுக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.

1915 ஏப்ரலில் சென்னை வந்த காந்தியடிகள், ஜி.சுப்பிரமணிய அய்யரைச் சந்தித்தார். காந்தியடிகளின் புதிய சத்தியாக்ரஹ நெறியை தென்னாப்பிரிக்கா அறப்போராட்டத்தின் வாயிலாக அறிந்த ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்தச் சந்திப்பில் அதைக் குறிப்பிட்டு பாராட்டினார். இந்தச் சந்திப்பின் விவரம் வருமாறு:

"ஆனாலும் நானும் இருக்கிறேன், பாருங்கள். கடும் நோயினால் ஒன்றும் செய்யச் சக்தியற்றவனாகப் போய்விட்டேன். என்னால் நாட்டிற்கு என்ன பயன்...? என்று அவர் சொல்லிக் கொண்டு போன போது அவர் கண்ணில் நீர் மல்கத் தொடங்கிவிட்டது. காந்திஜி உணர்ச்சி வயப்பட்டவராய் அவர் அருகில் சென்றார்.

"வருந்தாதீர்கள். நீங்கள் நாட்டிற்குப் பெரும்பணி செய்திருக்கிறீர்கள். வருத்தப்படுவதற்கு எவ்வித காரணமும் இல்லை" என்று கூறிக்கொண்டே அவருடைய கண்ணீரைத் தமது துண்டால் துடைத்துவிட்டார்" (பக் 136–137; தமிழ் நாட்டில் காந்தி 1969–ஆ.ராமசாமி).

காந்தியடிகள் கூறியது, "உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை".

# பொருளாதாரச் சிந்தனைகள்

**காலனி ஆதிக்கச் சுரண்டல்:**

இந்திய மக்களைக் கொடுமையாகச் சுரண்டியதின் விளைவாக பிரிட்டிஷ் காலனியப் பேரரசு விரிவடைந்தது என்பதை இந்திய அரசியல் வரலாறு உணர்த்துகின்றது.

முதலாளித்துவம், காலனி ஆதிக்கத்தின் முன்னோடி முதலாளித்துவ நாடுகள் காலனிகளைப் பிடித்த முறையையும் வரலாற்றில் காண்கிறோம் "முதலில் மதபோதகர் வந்தார்; அவரைத் தொடர்ந்து வர்த்தகர் வந்தார். கடைசியாக பீரங்கிப் படகு வந்தது."

இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி யாதிக்கத்தின் முன்னோடியாக பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி காலெடுத்து வைத்தது. கி.பி.1600-ல் பிரிட்டிஷ் பேரரசியின் அனுமதி பெற்று இங்கிலாந்தின் நிதி முதலாளிகள், வியாபாரிகள், பிரபுக்கள் ஆகியோரின் கருவியாக நிறுவப்பட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்தின் கீழ இந்தியாவின் பெரும் பகுதி கொண்டு வரப்பட்டது.

ரஷ்ய சக்ரவர்த்தி மகா பீட்டர் தமது உயிலில் எழுதியது ஒன்று இங்கு நினைவுகூரத் தக்கது. "இந்தியாவின் வர்த்தகம், உலக வர்த்தகம் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். இந்திய வர்த்தகத்தை ஏகபோக உரிமையாக்கி ஆண்டனுபவிப்பவரே, ஐரோப்பாவின் சர்வாதிகாரியாக முடியும்." இவ்வாறு மகா பீட்டர் முன்னுணர்ந்து கூறியது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வரலாற்றில் உண்மையாகி விட்டது. "ஐரோப்பாவின் சர்வாதிகாரி" என்பதற்கு பதிலாக "சூரியன் மறையாத சாம்ராஜ்யம்" எனக் கொள்ள வேண்டும்.

இந்தியாவை ஐரோப்பிய சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டுவர பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னராக விளங்கிய ட்யூப்ளே (இவர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர் ஒருவரின் மகன்) எண்ணியதுண்டு. இந்தியாவில் ஆங்கிலமொழி கல்வி ஆதிக்கத்திற்கு உதவிய தாமஸ் பேரிங்டன் மெக்காலே, ட்யூப்ளேவின் கருத்தோட்டத்தை பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்:

"The man who first saw that it was possible to found an European empire on the ruins of mugal monarchy was Duplix. His restless capacisus, and inventive mind had formed this

scheme at a time when the ablest servants of the English company were busied only about invoices and bills of lading." (P. 19; Maculay Essay on Clive - edited by Vincent Smith - 1920).

பிரெஞ்சுக் கம்பெனி, பிரெஞ்சு அரசாங்கத்தின் படைப்பு; பிரிட்டிஷ் கம்பெனி தனியார் முயற்சியின் படைப்பு. ட்யூப்ளேவின் இந்திய விவகாரங்களைப் பற்றிய முயற்சிகளுக்கு பிரெஞ்சு அரசாங்கம் போதிய ஆதரவு அளிக்கவில்லை. ட்யூப்ளேவின் அரசியல் எதிரி ராபர்ட் கிளைவிற்கு பிரிட்டிஷ் கம்பெனியின் முழு ஆதரவு கடைத்தது. ஆகவே, ட்யூப்ளே தோற்றவிடத்தில் கிளைவ் வென்றார்

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு வர்த்தகத்திற்கு இடம் கொடுத்தால் நாட்டையே பிடித்துவிடுவார் என வங்காள நவாபு சிராஜ் உத்தௌலா தனது மகனுக்குக் கூறியதாக ஒரு செய்தி உள்ளது.

லண்டனில் இந்தியப் புரட்சி வீரர்களின் நலன்களுக்காக 'இந்தியா ஹவுஸ்' என்பதையும், இந்திய விடுதலை இயக்கத்திற்கு மேல் நாடுகளில் ஆதரவு திரட்ட "இந்தியன் சோஷாலஜிஸ்ட்" எனும் மாத இதழையும் நிறுவினார் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா எனும் தேசபக்தர். 'இந்தியன் சோஷாலஜிஸ்ட்" இதழில்–செப்டம்பர் 1908–ல் 'The Ethics of Dynamite and British Despotism" எனும் கட்டுரை முதல் பக்கத்தில் வெளிவந்தது. இந்தக் கட்டுரையில் சிராஜ் உத்தௌலா கூறியது மேற்கோளாக தரப்பட்டுள்ளது. பாரதியார் இந்தக் கட்டுரையின் சுருக்கத்தை தமிழில் தமது 'இந்தியா' பத்திரிகையில் (அக்டோபர் 17, 1908) தந்துள்ளார்.

"1756–ல் வங்காளத்து நவாபு தன் குமாரனுக்குக் கூறியது, ஆங்கிலேயனை நசுக்கிவிடு; முக்காலும்

சொன்னேன். உனது ராஜ்யத்தில் தொழிற் சாலை களையும் வைத்திருக்க அவர்களுக்கு இடம் கொடுப்பா யானால் அப்போது நீ ஆளும் பூமி வெகு சீக்கிரம் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும்"

சிராஜ் உத்தெளலா பிரிட்டிஷாரிடம் தோற்றார்; அவர் தீர்க்க தரிசனம் வென்றது.

பாரதியார் மேற்கண்ட கட்டுரையிலே கம்பெனி ஆட்சியின் கொடுஞ் சுரண்டலைப் பற்றியச் செய்தியையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"உள்நாட்டு வர்த்தகத்திலே ஆங்கிலேயர் பெற்ற அளவற்ற திரவியங்கள், இவ்வுலகத்தில் எந்த நாட்டிலும் எக்காலத்திலும் கண்டிராத அத்தனைக் கொடூரச் செய்கைகளினால் கிடைத்தன".

"வியாபாரிகளென்று வெளிவேஷம் பூண்டு நம் தேசம் முழுவதும் கலகமூட்டிய ஈஸ்டு இந்தியா கம்பெனி" என பாரதியார் சாடியிருக்கிறார். (இந்தியா ; 18.12.1909).

மெக்காலேயின் சொற்களில் கூறவேண்டுமானால் "treasure flowed to England in Oceans" (Quoted in "England"s Debt to India- Lajpat Rai-1917).

இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி அடித்த கொள்ளை, இங்கிலாந்தில் தொழிற் புரட்சிக்குத் தேவையான மூலதனத்தை குவித்து தந்தது. "பொழுதெல் லாம் எங்கள். செல்வங் கொள்ளை கொண்டு போகவோ?– நாங்கள் –சாகவோ?" –என 1908–ல் தேசியக் கவிஞர் பாரதியார் பாடியதை கம்பெனி ஆட்சிக் காலத்தில் சுரண்டலை–செல்வம் உறிஞ்சப்பட்டு வெளியேற்றப் பட்டதை – அறியக்கூடச் சக்தியற்றிருந்தனர், மக்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் இருந்த மாநில அரசியல் அமைப்புகள் இந்தியப் பெருஞ் செல்வம்

வெளியேற்றப்பட்டதை கிளர்ச்சி செய்வதற்குரியதாகக் கொள்ளவில்லை.

மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன், கம்பெனி ஆட்சியில் வேளாண்மை, வரி விதிப்புகளைப் பற்றி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது.

1. ஜமீன்தாரி, ரயத்வாரி அமைப்புகள் இரண்டுமே அநியாயத்திற்கும், அடக்கு முறைகளுக்கும் கருவிகளாகப் பயன்படுகின்றன.

2. குறிப்பாக ரயத்வாரித்திட்டம் உழவர்களை வறுமையில் ஆழ்த்துகிறது. முஸ்லீம் ஆட்சிக்கு முன்பிருந்த புராதன கிராமத்திட்டத்தை மீண்டும் நிலை நிறுத்த வேண்டும்.

3. வாணிபம், தொழில் மீதான வரிவிதிப்பை கண்டிக்கிறது.

4. நிலவரி வசூல் செய்வதில் கையாளப்படும் கொடிய சித்ரவதைகளை நிறுத்த வேண்டும்.

மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி நீடிப்பதை விரும்பாமல், பிரிட்டிஷ் பேரரசு ஆட்சியை விரும்பியது; இது குறிப்பிடத்தக்க செய்தியாகும். வர்த்தக முயற்சிகளில் நிகழ்ந்த போட்டிகளின் எதிரொலியே, இந்தக் கோரிக்கை. 1855 ஏப்ரலில் தயாரித்த தனது நான்காவது விண்ணப்பத்தில் கம்பெனி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருமாறு பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டது, மெட்ராஸ் நேடிவ் அசோசியேசன்.

சங்கத்தின் உறுப்பினர் எல்.வெங்கடேச நாயுடு என்பவர், "கம்பெனியின் ஆட்சியே எல்லாத் தீமைகளுக்கும் ஆதாரம்" எனக் குறிப்பிட்டு, சென்னை

மக்கள் கம்பெனி ஆட்சி ஒழிப்பை விரும்புகின்றனர் எனக் கூறினார். (பக் 158 கி.பி.1600 முதல் 1947 வரையில் – மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு – 1980; பெ.சு.மணி).

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் காலனி ஆதிக்க கொடுமைகளை அம்பலப்படுத்தி விமர்சனம் செய்தவர்களில் ரஷ்யாவின் புரட்சிகர ஜனநாயக வாதிகளை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இவர்களுள் புகழ் பெற்ற எழுத்தாளரான நிக்கோலாய் துப்ரலியூபொவ் (1839–1891) என்பவர் "ஸோவ்ரி மென்னிக்" Covri Mennick) எனும் பத்திரிகையில் –1857 செப்டம்பரில்– "கிழக்கிந்திய வரலாறு, அதன் தற்கால நிலையைப் பற்றிய ஒரு பார்வை" எனும் கட்டுரையை எழுதினார். "இந்தக் கட்டுரையில் காலனி ஆதிக்கத்தின் கொடுமையும், இந்தியாவில் கம்பெனி ஆட்சி பின்பற்றிய கொள்கையும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இந்தியாவை நாகரிகப்படுத்த வந்த சக்தியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னைப்பற்றி நிறத் திமிருடன் பேசியதை மறுத்தார். ராஜ்ய அதிகாரமும், கொள்ளை லாப சுயநோக்கும், இவை இரண்டும்தான் பிரிட்டிஷாரின் இறுதி லட்சியமாகும்". (P. 271, India and the Soviet Union; A symposium 1969).

1857–'58 ஆண்டின் இந்தியப் புரட்சியை காலனி ஆதிக்கத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ந்து கொண்டு வந்த போராட்டத்தின் மிக விரிவான வெளிப்பாடுகளில் ஒன்றாக கார்ல் மார்க்ஸ் கருதினார். இந்தியாவில் நடத்தப்பட்ட சித்ரவதைக் கொடுமை களைப் பற்றிய புலன்விசாரணை", "நெருங்கிவரும் இந்தியக் கடன்", "இந்தியாவில் ஆங்கிலேயரின் வருமானம்", "அயோத்தியை அபகரித்தல், "இந்தியாவில்

வரிகள்" எனும் கட்டுரைகளில் "வெறும் ராணுவக் கலகம்" எனும் பிரிட்டிஷாரின் பொய்ப் பிரசாரத்தை கார்ல் மார்க்ஸ் மறுத்தார். (பக்.562 – கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு–தமிழாக்கம், ஏ.சீனுவாசன்–1978).

1857 புரட்சி, தோற்கடிக்கப்பட்டாலும், காலனி யாதிக்கத்தின் மீது விழுந்த ஒரு வலுவான அடியாகும். கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக பிரிட்டனில் அதன் உள்நாட்டு முதலாளித்துவம், இந்தியாவுடன் ஏகபோக வர்த்தக உரிமை பெற்றிருந்ததைப் பொறுத்துக் கொள்ளாமல் அதுவும் கம்பெனியின் ஆட்சிப் பறிப்புக்கு ஆதரவாக செயல்பட்டது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் 2, 1858–ல் ஸ்டாலின் பிரபு என்பவரால் கொண்டு வரப்பட்ட இந்திய மசோதா நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்குக் கட்டுப்பட்ட பிரிட்டிஷ் ஆட்சியின்நேரடி நிருவாகத்திற்கு இந்தியா கொண்டு வரப்பட்டது; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஓர் உறுப்பு நாடாகியது.

ஆட்சி மாறினாலும், சுரண்டல் நிற்கவில்லை.

## 1858-க்குப் பிறகு

இந்தியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியைப் பற்றியும் வற்றடிக்கும் வழிமுறையைப் பற்றியும் (Drain Theory) இந்திய தேசிய இயக்கத் தலைவர்களும், இந்திய தேசிய இயக்கத்தின்பால் நல்லெண்ணம் கொண்ட பிரிட்டிஷ் அறிஞர்களும் ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டனர்– ஹ்யூம், ஸர் ஹென்றி காட்டன், ஓடானல், வெட்டர்பர்ன், வில்லியம் டிக்பி, கோர்ஹார்டி, ராபர்ட்சன், ஹைண்ட்மான் முதலான வெள்ளையர்கள் பிரிட்டிஷ் ஆட்சி சுயநலங்

கருதி அக்கிரமமாக ஆண்டு வருவதை எடுத்துரைத் தார்கள்.

"மாரென்ஸ்" என்ற பார்லிமெண்ட் மெம்பர் எழுதியிருக்கும் "ஆசியாவில் நமது ராஜ்யம்" (Empire in Asia) என்ற புத்தகத்தையும், காட்டன் எழுதியிருக்கும் நவீன பாரதம்" (நியூ இந்தியா). டிக்பி எழுதியிருக்கும், "இந்தியாவின் செழிப்பு" (Prosperous India) ஹைண்ட்மான் எழுதிய "இந்தியாவின் வறுமை" (Bank ruputcy of India), என்ற புத்தகத்தையும் படித்துப் பார்த்தால் ஒவ்வொரு இந்திய தேசாபிமானியின் மனமும் அனலில் இட்ட புழுப்போலத் துடிக்கும்படியாக இருக்கும்". இவ்வாறு பாரதியார் புகழ்ந்துள்ளார். (பக்.16; இந்தியா, அக்டோபர் 17, 1908).

## ஹ்யூம் (1829 - 1912):

ஏப்ரல் 8, 1892-ல் "காங்கிரசின் தந்தை" ஹ்யூம் லண்டனில் இருந்த பொழுது, அங்கிருந்த பத்திரிகைகளுக்குச் சுற்றுக் கடிதப்பிரதிகளை அனுப்பினார். இந்தப் பத்தரிகைகளில் வெளியான சுற்றுக் கடிதத்தின் பின்வரும் வரிகள் நெருப்பைக் கக்கின:

"The people, that is, the Indian people, are very patient, very mild. So were the people of France only 10 years before they murdered their sovereign and practically the bulk of the better classes. It was hunger and missry that turned the sheep into wolves". (P.45, Quoted; "Main Stream" January 1972).

கல்கத்தாவில் இருந்து வெளிவந்த அமிர்தபஜார் பத்திரிகையில் ஹ்யூமின் சுற்றுக்கடிதம் வெளியிடப்பட்ட சந்தர்ப்பக் காரணம் பின்வருமாறு விளக்கப்பட்டது.

"...appeard Just before the anniversary meeting of the socialists in Europe-a gathering which is naturally creating a very

great uneasiness throughout the length and breadth of the European continent".

*இந்த மேற்கோளை எடுத்தாண்டு "மெயின் ஸ்"ட்ரீம்" இதழில் எழுதிய கட்டுரையாளர், சின்மோகன் செஹ்னாவிஸ்,* "Throughout the length and Breadth of the European continent"*எனும் சொற்றொடருக்கு "ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள்" எனப் பொருள் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.*

## ஹென்ரி காட்டன் (1845-1915)

*1904–ல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்கு தலைமை வகித்தார் ஹென்ரி காட்டன். பிரிட்டிஷ் அரசுத் துறையில் பணியாற்றிய இவர் இந்திய தேசிய இயக்கத்தினிடம் பரிவு கொண்டவர். "அமெரிக்க ஐக்கிய நாடுகள் இருப்பது போல் பாரத ஐக்கிய நாடுகள் ஏற்படவேண்டும்" எனும் தமது கொள்கையை தமது தலைமையுரையில் குறிப்பிட்டுவிட்டு இந்தியச் செல்வம் பிரிட்டிஷ் ஆட்சியால் உறிஞ்சப்பட்டு வெளியேறுவதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.*

*"வருஷந்தோறும் இந்நாட்டினின்றும் ஆங்கிலேயர் மீளாத பெருந்தொகையை வற்றடித்துக் கொண்டு செல்கிறார்கள். அதிலிருந்தே இக்கொடிய வறுமை நாட்டில் உண்டாயிற்று. தேசத்து வியாபாரங்களெல்லாம் ஆங்கிலேய முதலாளிகளுக்குக் கீழ் பட்டுப்போயின". (பக்கம் 436; காங்கிரஸ் மகாசபை சரித்திரம், சுதேசமித்திரன் வெளியீடு–1920).*

*அஸ்ஸாமில் கமிஷனராக பணியாற்றியபொழுது, அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கூலி உயர்விற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார், ஹென்ரி காட்டன். கர்சன் பிரபுவின் செல்வாக்கை பயன்*

படுத்திக் கொண்டு தோட்ட முதலாளிகள், இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதை இரண்டாண்டு காலம் தள்ளிப் போட முயற்சித்த பொழுது, கர்சனிடம் தமது எதிர்ப்பை தெரிவித்தார், காட்டன். தேசிய பத்திரிகைகளின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

## வில்லியம் டிக்பி (1849-1904)

ஜி.சுப்பிரமணிய ஐயரின் நண்பரான இவர் (Prosperous India) 'இந்தியாவின் செழிப்பு' (1901) எனும் நையாண்டித்தனம் மிக்கத் தலைப்பைக் கொடுத்து பிரட்டிஷ் ஆட்சியால் விளைந்த வறுமையை மிகவிரிவாக எடுத்துரைத்துள்ளார்.

சென்னை நகரப் பொது வாழ்க்கையில் மிக்க ஆர்வம் காட்டியவர் டிக்பி. 'மெட்ராஸ் டைம்ஸ்' எனும் இதழின் ஆசிரியராக 1877-79-ல் இருந்தார். சென்னையில் ஏற்பட்ட பஞ்சத்தின் பொழுது 1878-79 நிவாரணப் பணியில் ஈடுபட்டார். காங்கிரஸ் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். 1885-ல் "India for Indians" எனும் வெளியீட்டைக் கொணர்ந்தார் டிக்பி.

டிக்பியின் 'Prosperous India' இந்திய தேசிய பொருளாதார வரலாற்று நூல்களில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

### ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு டிக்பியின் பாராட்டு:

டிசம்பர் 1, 1892-ல் பச்சையப்பன் கல்லூரியில், இலக்கியச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயர், டிக்பியின் தலைமையில், "The Ideal Man" எனும் தலைப்பில் பேசினார். தலைமையுரையில் டிக்பி கூறியதாவது:

"The last occasion he had to speak in that hall was some long time ago, when he spoke on a political subject which at that time exercised the public mind consideraly. He spoke on the abolition of import duties on cotton when the selfish interest of Manchester demanded the sacrifice of the best interest of the country. They were going to listen that night to an address on 'Ideal man'. If anyone in that part of India was entitled to be heard with respect and attention on the ideal man it was Mr.G.Subramanya Iyer. By experience, by honesty and integrity and by practising himself high ideals in his service to the country, he was entitled to give valuable counsel by the subject". (The Hindu, December 2, 1892).

"இந்தியாவின் எப்பகுதியைச் சார்ந்த எவராவது மிக்க கவனத்துடனும், மதிப்புடனும் 'இலட்சிய மனித பற்றிய உண்மையைக் கேட்க விரும்பினால், அந்த லட்சிய மனிதர் ஜி.சுப்பிரமணிய ஐயராவார். அநுபவம், நேர்மை, ஒழுக்கம், சொல்வேறு செயல் வேறில்லாமல் உயர்ந்த இலட்சியத்துடன் தேசத்தொண்டாற்றும் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஓர் இலட்சிய மனதராவார்" என்று டிக்பி தமது தலைமையுரையில் சாற்றினார்.

## ஹைண்ட்மன் (1842-1921)

ஹென்ரி மேயர்ஸ் ஹைண்ட்மன் இங்கிலாந்து சோஷலிஸ்டுகளில் ஒருவர். 1881-ல் சோஷல் டெமாகிரேடிக் பெடரேஷனை அமைத்தார். 1896-ல் Economics of Socialism எனும் நூலை எழுதினார். லண்டனில் ஷியாம்ஜி கிருஷ்ண வர்மாவின் நெருங்கிய தோழராய் விளங்கினார். இந்திய விடுதலை இயக்கத்தையும், ஐரிஷ் விடுதலை இயக்கத்தையும் தீவிரமாக ஆதரித்தவர். 'ஜஸ்டிஸ்' எனும் பத்திரிகையின் ஆசிரியர். இந்தப் பத்திரிகை இந்திய தேசிய இயக்கத்தை

ஆதரித்து பிரிட்டிஷ் ஆட்சியைக் கடுமையாகக் கண்டித்ததால் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. மே 23, 1908 ஜஸ்டிஸ் இதழில் "We shall welcome with rejoicing the day when Hindustan is relieved for ever from our hide ous despotism" என எழுதினார். (பக். 247 Footnote, The Swadeshi movement in Bengal 1903-1908, II Editon 1977, Sumit Sarkar)

லண்டனில் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் "இந்தியா ஹவுஸை' திறந்து வைத்து ஜூலை 1905-ல் ஹைண்ட்மன் பேசியபொழுது, "As things stand loyalty to Great Britain means treachery to India என முழங்கினார். 1998-ல் "Bank ruptcy to India" எனும் நூலில் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியச் செல்வத்தை வெளியேற்றி இந்தியாவை ஓட்டாண்டியாக்குவதை விளக்கியுள்ளார், ஹைண்ட்மன்.

1907-ல் ஜெர்மனியில் ஸ்டட்கார்ட்டில் நடந்த "இண்டர் நேஷனல் சோஷலிஸ்ட் காங்கிரசில்", "The ruin of India by Britain Rule" எனும் பெயரில் ஓர் அறிக்கையை வைத்தார் ஹைண்ட்மன் (P.4; East India Association Pamphlets No. 29)

ஹைண்ட்மன் தமது சுயசரிதையிலும் பிரிட்டிஷாரின் இந்தியச் செல்வத்தை வற்றடிக்கும் வழிமுறையைப் பின் வருமாறு எழுதியுள்ளார்.

"We drain out of India upwards of 30,000,00 a year (1) without any commercial return whatever, and this terrible (2)extortion of wealth by way of economic tribute is the (3) chief cause of the impoverishment of the 200,000,000 Inhabitants of British territory and (4) the consequence famine and plague which they suffer from"

இவ்வாறு பிரிட்டிஷ் அரசியல்வாதிகளும் பொருளாதார அறிஞர்களும் இந்தியாவில்

"பொழுதெல்லாம் கொள்ளை கொண்டு போகும் செல்வத்தைப்" பற்றி பிரசாரம் செய்துள்ளனர்.

இந்திய தேசியவாதிகளில் "தாதாபாய் நவ்ரோஜியின் வழிகாட்டுதலின் பேரில் ரானடே, ஜோஷி, கோகலே ஜி.எஸ்.ஐயர், வாச்சா, ஆர்.சி.தத்" முதலானோர் தேசிய பொருளாதாரச் சிந்தனையின் செழுமைக்கு உரிய கருத்துக்களை வழங்கினர் என ஜி.சுப்பிரமணிய ஐயர் பெயரையும் சேர்த்து ஆய்வாளர் விபின் சந்திரர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாதாபாய் நவ்ரோஜியின் "வறுமையும் இந்தியாவில் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" (Poverty and un-British rule in India-1901) எனும் நூல் அன்னாளைய தேசியப் பொருளாதாரச் சிந்தனையாளர்களுக்குக் கைவிளக்காய்ப் பயன்பட்டது.

**பாரதியார் பாராட்டினார்:**

தாதாபாய் நவ்ரோஜியின் பொருளாதார நூலை பாரதியார் பாராட்டினார். நூலின் உள்ளே காணப்படும் பிரிட்டிஷ் விசுவாசமும், ஆங்கிலக் கல்வியின் வழிபாட்டுணர்ச்சியும் பாரதிக்கு உடன்பாடல்ல. ஆயினும் தேசிய 'பொருளாதாரத்தை விண்டுரைத்த இந்தியரின் முதல் நூல் என்பதினால் பாரதியார் பாராட்டினார். இந்த நூலை தமிழரும், அறிய வேண்டுமென்பதற்காக தமது 'இந்தியா' இதழில் மார்கழி 8, 1907) நூலின் தமிழாக்கத்தை வெளியிடத் தொடங்கினார். இந்த நூலை மிதவாத தேசியத் தலைவரான வி.கிருஷ்ணசாமி ஐயர் படித்ததுண்டா? என பெருமிதத்துடன் கேட்டார்.

"காங்கிரஸ் சபையின் பிராணாதாரமான ஸ்ரீ தாதா பாய் நவ்ரோஜியின் முக்கிய கிரந்தமாகிய 'இந்தியாவின்

அடிமையும், இந்தியாவில் பிரிட்டிஷாருக்குத் தகாத ஆட்சியும்" என்ற புத்தகம் படித்திருக்கிறீரா? தற்காலத்தில் நடைபெறும் அரசாட்சி முறை இன்னும் 50 வருஷ காலம் நடக்குமானால் ஹிந்து ஜாதியே நாசமாய்விடுமென்றும், ஆதலால் இந்த அரசாட்சி முறைமையைச் செம்மைப் படுத்தியே தீரவேண்டுமென்றும் அந்தப் புத்தகத்தில் ருஜுப்படுத்தப்பட்டிருக்கிற செய்தி உமக்குத் தெரியுமா?" ('விஜயா' - தமிழ் தினசரி, புதுச்சேரி - அக்டோபர் 5, 1909)

, ஜி.சு.அவர்கள், தாதாபாய் நவ்ரோஜி, டிக்பி நூல்கள் இரண்டையும் மிக விரிவாக 'இந்தியன் ரெவ்யூ' (ஜூலை 1902) எனும் ஆங்கில இதழில் விமர்சனம் செய்துள்ளார்.

## ஜி.சுப்பிரமணிய ஐயரின் பொருளாதார நூல்:

கிடைத்துள்ள பாரதி எழுத்துகளில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் "பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் சில பொருளாதார அம்சங்கள்" (Some economic aspects of British rule in India) எனும் நூலைப் பற்றிய செய்தியை அறிய முடியவில்லை.

பம்பாய் மாநிலத்தில் மகா கோவிந்தரானடே, ஜோஷி, கோகலே, பஞ்சாபில் லாலா லஜபத்ராய், வங்கத்தில் தாதாபாய் நவ்ரோஜி, ரமேஷ் சந்திரதத் ஆகியோர் பொருளாதார நூல்களைப் படைத்ததைப் போல சென்னை மாநிலத்திற்கு ஒரே பிரதிநிதியாயிருந்து ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் முற்கூறிய பொருளாதார நூலைப் படைத்தார். இந்த அரிய பொருளாதார ஆய்வு நூல் உருவாகியதற்கு அவருடைய **"யுனைடெட் இந்தியா"** எனும் ஆங்கில வார இதழ் பயன்பட்டது.

பொருளாதாரச் செய்திகளை விவாதிப்பதற்காக மட்டும் ஒரு பத்திரிகையை 1902-ல் நடத்த

ஜி.சுப்பிரமணிய ஐயர் முற்பட்டார் என்றால் பொருளாதாரச் சிந்தனையில் அவருக்கிருந்த தனி ஈடுபாட்டை அறியலாம்.

*1903–ல் வெளிவந்த* "Some economic aspects of British Rule in India" *எனும் நூலின் மொத்த பக்கங்கள் 400. பிற்சேர்க்கையில் இந்தியாவைப் பற்றி இங்கிலாந்து நாட்டு பொருளியல் அறிஞர்களின் கருத்துக்களைத் தந்துள்ளார்.*

*நூலின் முன்னுரையில் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியுள்ளதின் ஒரு பகுதி வருமாறு:*

... ...Since I gave up my connection with the Hindu, I have been able to make a special study of Indian financial and economic questions and my impression has been strengthened that the time has come when our public men should distinguish between the different branches of politics and devote themselves to their study with a due sense of proportion as to their relative importance... ...

... ...Most of my views are those that are held by my educated countrymen in general, and some of the have been expressed by me in the columns of my weekly united India... .... The invaluable book of Mr.Dadabhai Naoroji's "poverty and Un-British Rule in India" and Mr.William Digby's equally invaluable book 'prosperous British India' are a storehouse of information indispensable every citizen, and my book is by no means in tended to supersede them" (P.vii)

*ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இந்த நூலை இருபத்திரண்டு அத்தியாயங்களில் அமைத்துள்ளார்; சமகால பொருளாதாரக் கண்ணோட்டங்கள் அனைத்தையும் விவாதித்திருக்கிறார். அவர் வகுத்துக் கொண்ட இருபத்திரண்டு அத்தியாயங்கள் வருமாறு:*

1. The present economic situation
2. Lend Revenue and famine
3. Industrial pursuits-A preliminary survey necessary
4. Protection of Indian Industry
5. Exploitation by Capital Foreign
6. The Hoarded wealth of India
7. Organization of credit.
8. How India's Foreign Trade is financed
9. Artizens
10. Our Labouring classes
11. The Agricultural Labourer
12. Wages
13. Free trade and labour
14. Railways
15. When India should borrow
16. The Foreign Trade of India in ancient times
17. The Foreign Trade of India in medieval times
18. The Foreign trade of India during the time of the East India Company
19. The Foreign trade of India-since the abolition of the East India Company.
20. Mr.Chamberlaine fiscal reform and India
21. Exports and imports of India-Are they evident prosper ity?
22. The condition of India at the establishment British Rule

பொருளாதார விஞ்ஞானம் பற்றிய ஆங்கில நாட்டு ஆசிரியர்களின்அளவு கோல்களை அப்படியே இந்தியப்

பொருளாதார ஆய்விற்கும் பயன்படுத்தலாகாது என ஸ்ரீ.ஜி.சு.கூறினார்.

இவ்வளவு விரிவான பொருளியல் சிந்தனைகளை கொண்டுள்ள இந்த நூலின் அருமை-பெருமைகளை பொருளியல் ஆய்வாளர்கள் நீண்டகாலம் கருதாமல் விட்டிருந்தனர்.

பேராசிரியர் **விபின் சந்திரர்** அவர்கள் "The Rise and Growth of economic Nationalisam in India-1968 "People publishing House-New Delhi)" எனும் நூலில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரிய நூலுக்கு உரிய இடம் அளித்து ஆய்ந்து பாராட்டியுள்ளார். இதற்காக அவரை நான் புதுதில்லி நேரு நினைவு நூலகத்தில் சந்தித்தபொழுது மனதாரப் பாராட்டி நன்றி கூறினேன். அவரும் "ஸ்ரீ ஜி.சு.வை பற்றி நீங்கள் திட்ட ஆய்வு (Project) செய்ய முயற்சிக்கவும் நான் உதவுவேன்" என்று கூறினார்.

## தொடர்ந்து போராடினார்:

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'இந்து' பத்திரிகையை கைவாளாகக் கொண்டு சமூக சீர்திருத்தம், அரசியல் போர்க்களங்களில் சுழன்று-சுழன்று போராடியதோடு ஓய்ந்திடவில்லை. எந்த ஒரு இயக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக பங்கேற்றவர்கள், அதை அடைந்ததும் சுயநலவாதிகளாய் மாறி அடுத்த முற்போக்கு முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடுவது வழக்கம்.

ராஜாஜி அவர்கள் இந்த வழக்கத்தைப் பற்றி காங்கிரஸ் பொன் விழா பற்றியக் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கல்வி கற்ற இந்தியர்கள், கிளர்ச்சியின் பலன்களை அனுபவிக்கலாயினர். ஆயினும் இதில் விந்தையான நிலைமை காணப்பட்டது. இந்த இயக்கத்தினால் சொந்த

நன்மைகளை அடைந்தவர்களும், இதே போன்ற பதவிகளை எதிர்பார்த்து, தங்கள் பிள்ளைகள் மருமகன்களுக்குக் கல்வி புகட்டியவர்களும் ஒரு வர்க்கமாக, இத்தருணத்தில் காங்கிரசின் எதிரிகளாயினர். எல்லா பரிணாம இயக்கத்திலும் இவ்வாறு நடப்பது வழக்கம். ஒரு குறித்த நடவடிக்கையில் வளம் பெற்றவர்கள், அடுத்த முன்னேற்றத்தை எதிர்ப்பது வழக்கம். அடுத்த தேசிய போராட்டங்களின்றும் இடைஞ்சல் இல்லாமல் தாங்கள் தத்தம் இடங்களில் நிம்மதியாக இருக்க விட்டு விடுவதையே விரும்பினர்".

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'இந்திய உத்தியோகங்கள் எல்லாம் இந்தியர்களுக்கே' என குரல் கொடுத்து தனது முன்னேற்றத்தை அத்துடன் இணைத்துக் கொண்டவர் அல்லர்.

உத்தியோகங்களை இந்தியர் மயமாக்குவதில் மட்டும் இந்தியாவின் முன்னேற்றம் அடங்கவிடல்லை. தொழில் வர்த்தக முயற்சிகளில் சுதேசியம் பின்பற்றப் படவேண்டும் எனும் பொருளாதார உணர்வில் முன்னேற்றம் அடங்கியுள்ளது என ஜி.சுப்பிரமணிய ஐயர் ஏற்றுக் கொண்டு மேலே தொடர்ந்தார்.

**காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க்குரல்:**

இங்கு ஒரு செய்தியை நினைவு கூர்தல் பொருத்தமாக இருக்கும்.

1887-ல் சென்னையில் நடந்த காங்கிரசில் கும்பகோணம் கைவினைஞர்களின் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்ட **திரு மூக்கன் ஆசாரி** என்பவர் காங்கிரசின் தொழிற்கல்வியைப் பற்றிய தீர்மானத்தை ஆதரித்து தமிழில் பேசினார். **காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்க்குரல், இவரது குரலே.**

துரதிர்ஷ்டவசமாக இவரது தமிழ்ப்பேச்சின் மூலம் கிடைக்கவில்லை; ஆங்கில மொழியாக்கமே கிடைத்துள்ளது. (இவரைப்பற்றிய மேல் விவரங்களை பெ.சு. மணியின் "காங்கிரஸ் வினா–விடை–மூலமும் ஆய்வும்" –1979: என்னும் நூலில் காண்க).

காங்கிரசின் தந்தை ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், மூக்கன் ஆசாரியின் உரையை "Very Sensible speech" என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு.மூக்கன் ஆசாரி உத்தியோக மயமாக்கும் கொள்கை மட்டுமே முன்னேற்றத்தின் அடையாள மாகாது, என்பதை வலியுறுத்திப் பேசினார். அதன் ஒரு பகுதி வருமாறு:

"நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் இதய பூர்வமாய் பாடுபடுகிறது என்பதில் ஐயமில்லை. கனவான்களே! புகழொளி மிக்க ராஜ தந்திரி ராஜா சர்.டி.மாதவராவ் அவர்கள், நடுநிலைமையுடன் பணியாற்றும் நீதிபதி திரு.முத்துசாமி ஐயர் போன்ற பதவிகளை அலங்கரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

ஆனால், இதுமட்டுமே நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிப்படுத்தும் என நாம் எதிர்பார்ப்பது முற்றிலும் பொருந்தாது. தொழில் துறை முற்றிலும் இல்லாத நிலையில் வர்த்தகமோ, விவசாயமோ நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிப்படுத்தாது" (பக். 88–89 காங்கிரஸ் வினா–விடை மூலமும் ஆய்வும்)

தொழில் வளர்ச்சியில் 1887ல் காங்கிரஸ் கொடுத்த குரலை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செவிகள் கேட்க மறுத்தன. சுதேசிய உணர்வு மலரத் தொடங்கியதும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தொடர்ந்து கேட்க மறுத்ததும், சுதேசியத்துடன் சுயராஜ்யக் கோரிக்கையும் இணைந்தது.

*பிரிட்டிஷ் வர்த்தகத்தின் ஏகபோக நலன்களுக்கு எதிரான சுதேசியத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எதிர்த்ததில் வியப்பில்லை.*

**வ.உ.சி. பார்வையில்:**

சுதேசிய நோக்கில் பொருளாதாரக் கொள்கைகளை மேடைப் பேச்சுகளில் தெளிவாக விளக்குவதில் வ.உ.சி. கையாண்ட உத்திகளில் ஒன்றை திரு.பி.ஸ்ரீ.ஆசார்யா ஒரு கட்டுரையில், பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

*"பாதி மனிதனும் பாதி சிங்கமுமாகத் தோன்றிய நரசிங்கம் போல பாதி அரசனும் பாதி வணிகனுமாக இருந்து வெள்ளையன் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுகின்றான்". (பக்.5; செப்டம்பர் 5, 1972 சுதேசமித்திரன்; "வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளை").*

**ஜி.சுப்பிரமணிய ஐயர் கண்ட சுதேசியம்:**

'இந்தியன் பேட்ரியட்' ஆசிரியராகவிருந்த சி.கருணாகர மேனன், ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றிய ஓர் ஆங்கில நூலுக்கு விரிவாக எழுதிய முன்னுரையில், "சுதேசிய சபதங்கள் பற்றிய குரல்கள் எழாத காலத்திற்கு முன்பே அவர் சுதேசியாகத் திகழ்ந்தார். ஜி.சுப்பிரமணிய ஐயர் இதுகாறும் பிரசாரம் செய்து வந்ததற்கு ஒரு புதிய வேகம் வங்கப் பிரிவினையை ஒட்டித் தோன்றிய இயக்கத்தால் கிடைத்தது" எனக் குறப்பிட்டுள்ளார்.

*1907-ல் வடஆற்காடு மாவட்ட மாநாட்டில் ஜி.சுப்பிரமணிய ஐயர் தலைமையேற்று பேசியபொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்:*

*நமது பஹிஷ்கார இயக்கத்தின் பொருளும் நோக்கமும் சிலரால் தப்பர்த்தம் செய்து கொள்ளப்படுகிறது. அது நமது சக்தியையும், காலதேச வர்த்தமானங்களையும்*

அனுசரித்து மேற்கொள்ளப்படும் ஒரு வழிமுறையேயன்றி தார்மீக அல்லது மதச் சார்புடையதன்று". (P-82; G.Subramania Iyer - his life and Career; 1909)

இதே மாநாட்டில் தொடர்ந்து பேசியபொழுது பஹிஷ்கார இயக்கத்தைக் கண்டித்தவர்களுக்குப் பதில் அளித்தார்.

"பஹிஷ்கார இயக்கத்தைக் கண்டிக்கிறவர்கள் நீங்கள் அந்நிய நாட்டுத் துணியை விலக்கினால் அந்நிய நாட்டு நூலையும் விலக்க வேண்டும். வெளி நாட்டிலிருந்து வருகின்ற சர்க்கரை, பாண்டங்கள் அந்நியர் போடும் ரயில் பாதைகள், செய்யும் மருந்துகள் முதலியவற்றையும் விலக்க வேண்டுமென்று வாதிக்கின்றனர். இவ்வாதம் முற்றிலும் தவறு. நமது பஹிஷ்காரத்துக்கு ஒரு குறிப்பிட்ட லட்சியமுண்டு. அதை அடைய அது உற்றதாயிருக்கிறது. தேசாபிமானிகள் யாவரும் அதனை மேற்கொள்ள வேண்டும். நாம் இறக்குமதி செய்யும் ஒவ்வொரு சாமானுக்கும் நம்மிடம் பிரதி (Substitute) இல்லை; எனினும் சிலவற்றிற்கென்னமோ பிரதி செய்ய முடிகிறது. அதைத் தேச மாதாவுக்கு நமது திருப்பணியாகச் செய்து முடிப்போம். நமது கிராமங்களில் உற்பத்தியான பொருட்கள் சற்று அதிக விலையாகவே இருக்கலாம். அந்நியச் சரக்கைப் போல் பார்வையாகவும், செளகரிய மாகவும் இல்லாமற் போகலாம். எனினும் பட்டினிக் கிடக்கிற கோடிக்கணக்கான சகோதரர்களுக்காக நாம் கந்தைகளையும் அணிவோமே அன்றி அந்நிய ஆடைகளில் நாகரிகர்களாக விளங்க மாட்டோம். ஆங்கிலேயர் தயாரித்த காலணிகளையும், தொப்பி களையும் பயன்படுத்தாமல் வெறுங்காலுடன், வெறுந்தலையுடன் தெருவில் நடந்து செல்வோம்."

## 1907-க்கு முன்பே

1903-ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் சுதேசியத்தை – சுதேசிய சபதம் ஒலிக்கத் தொடங்காத காலத்தில் – விரதமாக ஏற்க பின்வருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

"அன்னிய தேசங்களின்று இறக்குமதியாகி வரும் எந்தத் துணிகளையும் இந்திய புருஷராவது, இந்திய ஸ்திரிகளாவது உடுக்கக் கூடாது. உடுப்பதில்லை என்று விரதம் செய்து கொள்ள வேண்டும்." (பக். 27; ஜப்பான் சரித்திரச் சுருக்கம்; 1903).

சென்னை மித வாதத் தலைவர்கள்–ஜி.சுப்பிரமணிய ஐயரின் நெருங்கிய நண்பர் திரு.என்.சுப்பாராவ் பந்துலு உட்பட பஹிஷ்கார இயக்கம், சீற்றம் – வெறுப்பின் ஆயுதம் என வாதித்தனர். ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இதற்கு பதில் அளித்தார். பஹிஷ்கார இயக்கம் இந்து சமூக அமைப்பிற்கு மிகவும் நெருக்கமானது என விளக்கி, ஒத்துழையாமையே இதன் ஆதாரம், சீற்றமோ–வெறுப்போ இல்லை எனக் கூறினார். ('ஹிந்து' ஜூன் 18, 1907).

சுப்பாராவ் முதலியோர் பஹிஷ்கார இயக்கத்தில் தார்மீகச் சிந்தனையைப் போட்டுக் குழப்பியதை பாரதியார் பின்வருமாறு அம்பலப்படுத்தினார்:

"எதனிடமும் விரோதம் செலுத்துதல் ஹிந்து தர்மத்திற்கு அடுத்ததில்லை. எல்லோரிடமும் ஒன்று போல தயவும் கருணையும் பாராட்ட வேண்டும் என்பது நமது சாஸ்திரக் கருத்தாகும். ஆதலால் "அன்னிய வஸ்து பஹிஷ்காரம் கூடாது" என்று மிஸ்டர் N.சுப்பாராவ்... என்ற மகரிஷிகளெல்லாம் ஒன்று போலவே தர்ம பாடம் சொல்லத் தலைப்பட்டார்கள்... இவர்கள் தமது பயத்தையும், கோழைத் தன்மையையும் மறைப்பதற்காக

இந்த வேதாந்த வேஷம் போடுகிறார்களென்பது எவருக்கும் தெளிவாகத் தெரியக்கூடும்... எல்லா ஜந்துக்களிடமும் கருணை செலுத்த வேண்டுமென்ற கொள்கையுடையவர்கள் இந்தியா தேசத்து லக்ஷக்கணக்கான தொழிலாளிகள் வயிற்றுக்கில்லாமல், எறும்புகளைப் போல் மடிவதிலே சிறிது கருணை பாராட்டக் கூடாதா?" (பக். 29-30; பாரதி தரிசனம் 2).

தஞ்சை மாவட்ட மாநாட்டில் 1907 ஜூலையில் "ஒரே கேள்விக்கு சுதேசியம் என்பது உடன்பாட்டு நிலையிலும், பஹிஷ்காரம் என்பது எதிர்நிலையிலும் கூறப்படும் பதிலாகும். இரண்டும் பிரிக்க முடியாத ஒரு முழுமையாகும்" எனக் கூறினார் ஜி.சுப்பிரமணிய ஐயர். இதே பேச்சில் சென்னை மாநிலத்தில் இந்தியன் பாங்கு அமைப்பும், சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியும், சுதேசிய முயற்சிகள் பலவற்றுள், சிறந்த எடுத்துக் காட்டுகளாகும் என்றும் ஜி.சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டார்.

சுதேசி இயக்கத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் பங்கைப் போற்றி வங்க சுதேசி இயக்கத் தலைவர்களில் ஒருவரான அரவிந்தர் பின்வருமாறு பாராட்டினார்:

"Boycott foreign goods, and boycott those who use foreign goods"-the advice of Mr.G.Subramania Iyer to his country men in Madras-must be accepted by all who are in earnest (Bande Mataram 23.4.1967).

### காந்தியடிகளுக்கு முன்பே...

வடஆற்காடு மாவட்ட அரசியல் மாநாட்டில் 1907-ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பஹிஷ்கார இயக்கத்தைப் பற்றி பேசும்பொழுது, பிரிட்டிஷ் ஆட்சியில் கௌரவ பதவிகளையும்-பட்டங்களையும் துறக்குமாறு வலியுறுத்

தினார். (பக். 141–A Hundred years of The Hindu) காந்தியடிகள் 1921–ல் தமது ஒத்துழையாமைத் திட்டத்தில் கூறியதை, ஜி.சுப்பிரமணிய ஐயர் 1907லேயே குறிப்பிட்டார் என்பது பாராட்டுதலுக்குரியதல்லவா?

இந்து பத்திரிகை ஜி.சுப்பிரமணிய ஐயரின் இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து எழுதியதாவது:

"We regret we are unable to agree with this view. Boycott of honorary offices, in our opinion, stands upon an entirely different footing from that of foreign goods".

பஹிஷ்கார இயக்கம், பொருளாதார சம்பந்தமானது. கௌரவ பதவிகள், அரசியல் அனுபவமும், சமூகத் தொண்டும் புரிவதற்கான வாய்ப்புகளை அளிப்பன. ஆகவே இரண்டையும் இணைக்கத் தேவையில்லை என்பது 'இந்து'வின் வாதம்.

## சென்னை சுதேசிய நிதியும் தொழிற் சங்கமும்

சுதேசி இயக்கத்தின் பிரசார அளவில் நிற்காமல், ஆக்க வழியில் செயலாற்றவும் ஜி.சுப்பிரமணிய ஐயர் வகுத்த திட்டங்களில் "சென்னை சுதேசிய நிதி–தொழிற் சங்கம்" அமைப்பும் ஒன்றாகும். இதன் நோக்கங்களைப் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர் வெளியிட்ட அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. நமது தேசத்தின் ஆதிகாலம் முதல் நடந்து வந்த கைத்தொழில்கள் அழிந்து மறைந்து போகாமல், நிலை நிறுத்தி விருத்திக்குக் கொண்டு வருவது.

2. பிரசங்கங்கள் செய்தல், துண்டுப் பத்திரிகைகள் பிரசுரம் செய்தல் முதலிய பலவழிகளாலும் ஜனங்களுக்குத் தொழிற் படிப்பு சம்பந்தமாக அறிவைப் பரவச் செய்வது.

3. இந்தியாவின் இதர தேசங்களிலும், வாலிபர்கள் சென்று தொழிற் படிப்பு பெற பண உதவி செய்வது.

4. அப்படி அவர்கள் கற்று வந்தவுடன் கற்று வந்த தொழில்களை நடத்தும்படி மூலதனம் கொடுத்து தொழில் நடத்தச் செய்வதில் உதவி புரிவது.

5. இந்திய தேசத்துக் கைத் தொழில், வியாபாரம் இவைகளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்களைச் சேகரித்து தெரிவித்தல்.

அறிக்கையின் இறுதியில் பின்வரும் வேண்டுகோளையும் உருக்கமுடன் விடுத்தார்:

வருஷமெல்லாம் பசிப்பிணியால் வருந்துவதே நிலையாகக் கொண்ட லட்சக்கணக்கான நம் ஏழைகளின் மீது நம் தேசத்து எல்லா வகுப்பாரும் தயவு பாராட்டி தம்தம் சக்திக்குத் தகுந்தபடி சிறிது தொகையேனும் சமர்ப்பித்து புண்ணியம் பெறுவார்கள் என்று நம்பி இப்படி வினயத்துடன் வேண்டிக் கொள்கிறோம். வந்தே மாதரம்" (பக். 212; விவேகபாநு, மாத இதழ் மதுரை, தொகுப்பு 5–1906).

சுதேசி இயக்கத்தை ஆலை முதலாளிகள் தங்கள் சுய நலத்திற்கு பயன்படுத்திக் கொண்டார்கள். காந்தியடிகளின் சுய சரிதையில் 'அறிவூட்டிய சம்பாஷணை'யில் வரும் பின்வரும் பகுதி கவனிக்கத்தக்கது.

"வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியின் போது ஆலை முதலாளிகளாகிய நாங்கள் சுதேசி இயக்கத்தை எங்கள் சொந்த லாபத்திற்கு முற்றும் பயன்படுத்திக் கொண்டோம் என்பதும் உங்களுக்குத் தெரியும். அந்த இயக்கம் உச்ச நிலையில் இருந்த சமயம் துணியின் விலையை நாங்கள் உயர்த்தினோம். அதையும் விட மோசமான காரியங்களைச் செய்தோம்."

ஓர் ஆலை முதலாளி, காந்தியடிகளிடம் உரையாடிய பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜி.சு.அவர்களின் "சென்னை சுதேசிய நிதியும் தொழிற் சங்கமும்" எனும் அமைப்பு, தகுதி பெற்றோர்க்கு மூலதன உதவியும் அளித்து, பெரும் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் துணை போகாமல் விளங்கியது.

1906 மார்ச்சில் தொடங்கப்பட்டது இந்த அமைப்பு. 1905-ல் சுதேச நிதி (Nationl Fund) என்ற பெயரில் தொடங்கப் பெற்ற அமைப்பு; அரசியல் சார்பற்றது என அறிவித்துக் கொண்டது. சென்னை மிதவாதத் தலைவரான வி.கிருஷ்ணசாமி ஐயரின் குழுவினர் ஆதரவும் கிட்டியது.

வீடு வீடாகச் சென்றும், தீபாவளி பண்டிகைகளிலும் நிதி திரட்டும் பணியில் இந்த அமைப்பு ஈடுபட்டது. இந்த வகையில் மாணவர்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது.

இவ்வாறு, பொது மக்கட் தொடர்பின் காரணமாக "சமயலறைக்கு வெளியே எந்த விஷயமும் தெரியாத மாதர்கள் கூட பொதுநல சம்பந்தமான காரியங்களைப் பற்றி பேசத் தொடங்கி விட்டார்கள்" என பாரதியார் குறிப்பிட்டார்.

இளைஞர்களுக்குத் தொழிற் கல்வியும் மூலதனமும் அளித்து தொழில் வளர்ச்சிக்கு ஆக்க வழியில் திட்டம் அமைத்துக் கொடுத்தார் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

1910-ல் இந்த அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் சில சாதனைகள் பின் வருமாறு குறிப்பிடப்பட்டன.

"It has educated till now thirteen students in potteery, Leather manufactures, Tanning, sericulture, paper making,

dyeing, Calico-printing, straw board and card board manufacture, spinning, weaving and soap making an it is now educating ten students in Madras, Bombay and France, in Dyeing, knitting, Spinning, Mechanical Engineering, Electrical Engineering and other textile Industries".

## வற்றடிக்கும் கொள்கை (Drain Theory)

இந்திய தேசிய பொருளாதாரச் சிந்தனையில் (Drain Theory) தொடக்கக் காலத்தில் மிக ஆழமாக விவாதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவின் செல்வம் உறிஞ்சப்பட்டு சென்றதை வற்றடிக்கும் கொள்கை என்பர். காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்பே இந்த வற்றடிக்கும் வழிமுறையைப் பற்றி விவாதம் எழுந்தது. 1867-ல் தாதாபாய் நவ்ரோஜி லண்டனில் பேசும்பொழுது "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை, இந்தியச் செல்வ வெளியேற்றம்" என மனம் நொந்தார்.

காங்கிரசின் ஆரம்பகாலக் கூட்டங்களில் இந்தியாவின் வறுமைபற்றி ஆண்டுதோறும் ஒரு புலம்பல் இருந்தாலும், 1896-ல் இந்த வறுமைக்குக் காரணம் வற்றடிக்கும் கொள்கையே என்பதை முதன் முதலில் துணிந்து ஒரு தீர்மானத்தின் வாயிலாக வெளியிட்டது. கல்கத்தாவில் ஜி.சுப்பிரமணிய ஐயரும் கலந்து கொண்ட இந்த காங்கிரசில், வறுமையும் - பஞ்சமும் பற்றிய பன்னிரண்டாவது தீர்மானம் கூறியதாவது:

"இந்தியா முழுவதிலும் கொடிய பஞ்சம் வந்து சூழ்ந்திருப்பதைக் கண்டு இந்த ஜனசபை வியாகூலப்படுகிறது. இதற்கும் சமீப வருஷங்களில் நடந்த மற்ற பஞ்சங்களுக்கும் ஜனங்களின் பெரிய வறுமையே காரணம். அந்த வறுமைக்குக் காரணம் யாதெனில் பல வருஷங்களாக இந்த நாட்டின் செல்வத்தை

இங்கிலாந்துக்கு வற்றடித்துக் கொண்டு போவதும், மிதமிஞ்சிய தீர்வை வசூலும், தீர்வைத் திட்டமுமேயாம்". (பக். 280; காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்; சுதேசமித்திரன் வெளியீடு).

## ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார்:

ஜப்பான் சரித்திரச் சுருக்கம் எனும் தமது நூலில் ஜி.சுப்பிரமணிய ஐயர், வற்றடிக்கும் கொள்கையைப் பற்றி பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"தினத்துக்குத் தினம் நமது தேசத்துச் சொத்துக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. வியாபாரம், தொழில் இவைகளால் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, போவதுமன்றி, ஆங்கிலேயர் நமது சுரங்கங்களைக் கிண்டிப் பொன், இரும்பு, நிலக்கரி, காரீயம், அப்பிராகம் முதலிய சொத்துக்களைக் கட்டி கட்டியாகக் கப்பலேற்றிக் கொண்டு போகின்றார்கள். நிலத்தில் உண்டாகிற பயிரானால், இவ்வருஷத்து விளைச்சல் போனாலும் அடுத்த வருஷம் மறுபடியும் விதை விதைத்துச் சாகுபடி செய்தால் அப்போதும் விளையும். அன்னியர் பாதி கொண்டு போனாலும் பாதியாவது நமக்கு மிகும். சுரங்கங்களிலுள்ள வஸ்துக்களைக் கட்டிகட்டியாகக் கொண்டு போனார்களானால் எப்படி இவைகளை சுரங்கங்களில் மறுபடியும் உண்டாகும்? உண்டாகா; உண்டாகாமல் சுமார் 10 வருஷத்தில் நமது பொன் சுரங்கங்களில் பொன்னே அற்றுப் போய் கல்லும் மண்ணும் தான் காணப்படும்." (பக்.22–23).

"மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமற் போவானா?" எனும் பௌராணிக வாதம் புரிவோரை நோக்கி ஜி.சுப்பிரமணிய ஐயர் நையாண்டியாக கேட்ட கேள்வியிலேயும் வற்றடிக்கும் கொள்கையை நினைப்பூட்டுகிறார்.

*"நமது தேசப் பொருள்களை அன்னியர் கப்பல் கப்பலாக வாரிக் கொண்டு போக நம்முள் புத்திமான்கள் புராணம் படிப்போருக்குத் தங்கத் தோடாப் போடுவதிற்கவலையையும், பணத்தையும் காலத்தையும் செலவு செய்தால், சில நாளில் பௌராணிகருக்கு வெகுமதி செய்யப் பணந்தான் அகப்படுமோ?" (பக். 14; ஜப்பான் சரித்திரச் சுருக்கம்).*

*இந்தியாவிலும், அயர்லாந்திலும் அடித்த கொள்ளையே பிரிட்டனின் செழிப்பிற்கு மூலாதாரமாயிற்று என ஜி.சுப்பிரமணிய ஐயர் தமது ஆய்வு நூலிலும் சாற்றியுள்ளார்:*

"Indian Treasure was carried away by British adventurers and it cre1ted a class of capitalists with large accumulations of Indian money. This money stimulated the credit of this class,. Imparted mobility to their energy and enterprise... ... ... By the beginning of the 19th century, the foundaton of British property had been well laid on the speliation of India and Ireland" (P. 243; Some economic aspects of British rule in India)

*1902-ல் வடார்காடு மாவட்ட அரசியல் மாநாட்டில், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, பிரிட்டனின் வர்த்தக தலத்திற்கு அரசியலைப் பயன்படுத்தியதை எடுத்துக் கூறினார். இந்த நாட்டின் மூலாதாரச் செல்வம் இந்த நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு பயன்பட வேண்டும்; அந்நிய நாடுகளுக்காக அல்ல என்றும் கூறினார்.*

**அந்நிய முதலாளித்துவம்:**

*பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தியாவை ஒரு விவசாய நாடாகவே வைத்து, தொழில்களைத் தொடங்க இடம் தராமல் பார்த்துக் கொண்டது என ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியுள்ளார். அந்நிய*

முதலாளித்துவம், தனது சொந்த நாட்டில் உற்பத்திக்கு உதவும் மூலப் பொருள்களை மட்டும் அடிமைப்படுத்திய நாட்டில் பெற்று, உருவாக்கிய பொருட்களை அடிமைப் படுத்திய நாட்டிலேயே கொள்ளை லாபத்திற்கு விற்பதை ஜி.சுப்பிரமணிய ஐயரின் சுதேசமித்திரன் 1887-லேயே எடுத்துக் காட்டியுள்ளது.

## "ஆங்கிலேயருக்கு இந்து தேசம் பெரிய கடையா?"

*"1887ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் தேதி இங்கிலாந்தில் பார்லிமெண்ட் மெம்பரில் ஒருவரான ஸர் ரிச்சர்டு டெம்பிள் என்பவர் இந்தியாவைப்பற்றி பிரசங்கம் புரிந்தபோது, இங்கிலாந்துச் சரக்குகள் யாவும் விலைப்படுவதற்கு நமது இந்து தேசம் பெருத்த கடையாகச் சொன்னார்... ... நம்மையெல்லாம் குமாஸ்தாக்களாக வைத்து நம்மைக் கொண்டு பஞ்சு, தோல், நீலம், செம்மரம் முதலிய காரண வஸ்துவை தருவித்துக் காரியமாக்க, ஒன்றுக்குப் பத்துவிலையாக நமக்கே கொடுத்து விற்கச் செய்கின்றனர்... பஞ்சு முதலிய காரணச் சரக்கை அவர்க்குக் கொடுத்துவிட்டுக் காரியப்பட்டு வந்தபிறகு ஒன்றுக்குப் பத்து இருபது விலை கொடுத்து அவரிடத்திலேயே வாங்கி, போட்டியின் பேரில் அற்ப லாபத்திற்கு விற்று அத்தேசத்தாரைச் செல்வராக்கி நாம் ஏழைகளாயிருப்பது பிரத்தியக்ஷந்தானே. ஆங்கிலேய எஜமான்களுக்கு இந்துக்களும், மகம்மதியர்களும், இந்து கிறித்துவர்களும் கூலியாட்களாய் விட்டார்களல்லவா? (பக். 45-46 குமரி மலர், மார்ச் 1970).*

*அந்நிய முதலாளித்துவம், இந்திய நாட்டு மூலப் பொருட்களைக் கொண்டு கொழுத்து வளர்வதைத் தடுக்க 1901-ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதாவது:*

"I am no aware of any instance of a country, either in modern or in ancient times when a number of foreign capitalists,

with all the political and social advantages of their being of the ruling race, have helped in bringing about the industrial prosperity of the people ruled... I do not hesitate to say that only in this way. that is, by educating and training our own people so as to enable them to take into their own hands the manufactural wealth can be created". (Quoted P.97-The Rise and Growth of Economic Natioalisam in India; 1977; Bipan Chandra)

*அந்நிய மூலதனம் இந்தியாவில் பெருகப் பெருக அந்நிய முதலாளித்துவத்தின் செல்வாக்கு ஓங்கி, இந்திய தேசிய காங்கிரசின் வளர்ச்சிக்கு எதிராக "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஆபத்து" எனும் பெருங்குரலை நிச்சயமாக எழுப்பும் என ஜி.சுப்பிரமணிய ஐயர் 1889-ல் இந்து பத்திரிகையில் குறிப்பிட்டார்.* (P. 111. Nationalisam and Colonialism in Modern India 1981; Bipan Chandra)

*ஜி.சுப்பிரமணிய ஐயர் மேலும் ஓரிடத்தில் அந்நிய முதலாளித்துவத்திற்கு உதவும் பிரிட்டிஷ் ஆட்சியின் கொள்கையைப் பற்றி கூறியதாவது:*

*"கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக இந்தியாவின் செல்வம் பிரிட்டிஷ் ஆட்சியால் உறிஞ்சப்பட்டுள்ளது; மூலதனம் இங்கு வளர்வது மிகவும் அரிதாகவும், மெதுவாகவும் இருந்தது. இந்திய உற்பத்தியாளர்களை ஒழித்துக்கட்டி, அவர்கள் அழிவின் மேல் தங்களுடைய சொந்தத் தொழிலை வளர்த்துக் கொள்வதுதான் இந்தியாவில் இங்கிலாந்தின் திட்டமிடப்பட்ட கொள்கையாக இருக்கிறது".* (P. 125 Some economic aspects of British Rule in India)

*"அந்நிய முதலாளித்துவத்தின் பாதுகாப்பிற்காக ஆங்கில ஆதிக்கமா?" எனும் கேள்வியை எழுப்பி அன்னிபெசண்ட் அம்மையார் 1917-ல், கல்கத்தாவில்*

காங்கிரஸ் தலைமையுரையில், பின்வருமாறு, பதில் அளித்தார். "ஆங்கிலேயர்கள் ஏராளமான மூலதனத்தைப் போட்டு வைத்திருப்பதால், இங்கு ஆங்கில ஆதிக்கம் இருந்தே தீர வேண்டும் என்று வூதிப்பது பிசகு. இந்தியாவில் அவர்களுடைய மூலதனமாக இருக்கும் 36 கோடி பவுன்களின் பாதுகாப்பிற்காக இங்கு ஆங்கில ஆதிக்கம் அவசியமானால், அவர்கள் அமெரிக்காவில் போட்டு வைத்திருக்கிற 69 கோடி பவுன்களைப் பாதுகாக்க 'ஆங்கில ஆதிக்கம்' அங்கு மாத்திரம் வேண்டாமா? அமெரிக்காவில் சுதந்திர ஆட்சி நடப்பதற்கு இஷ்டப்படுகிறவர்கள் இந்தியாவில் அது ஏற்படக்கூடாதென்று ஆட்சேபிப்பதன் கருத்து என்ன?" (பக். 237; காங்கிரஸ் மகாசபை சரித்திரம் சுதேசமித்திரன் வெளியீடு)

## தொழில் மயமாக்க வேண்டும்

இந்திய நாடு விவசாய நாடாகவே மட்டும் விளங்கினால் போதாது, தொழில் மயமாக்கப்பட வேண்டும் என்பது ஜி.சுப்பிரமணிய ஐயரின் உறுதியான கருத்து. விவசாயச் சார்பற்ற தொழில்கள் (Non Agricultural Industries) வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும் என வலியுறுத்தினார் ஜி.சுப்பிரமணிய ஐயர். தமது கருத்திற்கு ஆதரவாக ருஷ்ய நாட்டு நிதி மந்திரியின் கருத்தை எடுத்து ஆண்டார் ஜி.சுப்பிரமணிய ஐயர். ஒருநாடு முழுக்க–முழுக்க விவசாய நாடாக மட்டும் இருக்கும் வரையில் அவ்வப்பொழுது வரும் பஞ்சமும்–வறுமையின் தாக்குதல்களில் இருந்து விடுபட முடியாது. "இந்த வகையில், இந்தியா, ரஷ்யாவைக் காட்டிலும், மோசமாய் இருக்கிறது– பத்தில் எட்டு பங்கு மக்கட் தொகையினர் விவசாயத்தை நம்பியே உள்ளனர். எஞ்சியிருப்பவர்கள் கூலி வேலை செய்பவர்களாகவும், பயனற்றத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளார்கள். இந்த ஆழமான

முரண்பாடு தீர்க்கப்படாத வரையில் விவசாயிகளுக்கோ மற்ற வருக்கத்தாருக்கோ வளம் பொங்கும் நாள் வராது. தற்சமயம் உள்ள வறுமையின் அபாய அளவு குறையாது. ஆகையால் இந்தியாவின் செழிப்பிற்கு தொழில் மயமாக்குவதுதான் மிக முக்கியமானதாகும்" என ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதை பேராசிரியர் பிபன் சந்திரா தமது நூலில் எடுத்து காட்டி உள்ளார். "இந்தியா கிராமங்களில் இருக்கிறது" எனக்கூறி தொழில் மயமாக்கப் படுவதை ஆதரிக்காமல் இருப்பது நாட்டு வளர்ச்சிக்கு நல்லதல்ல எனும் கருத்தை அன்றே ஜி.சுப்பிரமணிய ஐயர் வலியுறுத்தினார். சுதந்திர பாரதத்தில் நேருஜி அவர்கள் விவசாய நாடான இந்தியாவில் தொழில் மயமாக்கப்படும் கொள்கைக்கு ஏற்றமளித்தது ஜி.சுப்பிரமணிய ஐயரின் கனவை நனவாக்கியது.

## தொழிலாளர் நலன்

பொருளாதார தேசியத்தின் வரலாற்றை நுண்மான் நுழை புலத்தோடு ஆராய்ந்துள்ள பேராசிரியர் பிபன் சந்திரா "ஜி.சுப்பிரமணிய ஐயர் தான் தொழிலாளர் ஆதரவுக் கண்ணோட்டத்தோடு பார்த்த முதல் தேசியத் தலைவர்" என சுட்டிக் காட்டியுள்ளார். ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு இந்தக் கண்ணோட்டம் அவர் இந்து பத்திரிகையில் இருந்து விலகிய பிறகு வந்ததென்றும் பிபன் சந்திரா குறிபிடுகிறார். (பக்: 387)

விவசாயத்துறையின் தொழிலாளரைப் பற்றியும் ஆராய்ந்த முதல் தேசியத் தலைவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் தான் என்பதையம் பிபன் சந்திரா தமது நூலில் கூறியுள்ளார். (பக்: 389)

பிபன் சந்திரா ஜி.சுப்பிரமணிய ஐயரின் தொழிலாளர் ஆதரவுக் கண்ணோட்டத்தை பின்வருமாறு விளக்கி யுள்ளார்:

"He noted that the labour problem was beginning to arise in India just as it had earlier arised in the west.This was, he said, also evident from the frequent strikes which had occurred of late in Calcutta, Bombay and Madras. In his opinion the fundamental factor in the situation was condition of the labouring classes and the poverty and misery that characteristic their lot: Their condition was made much worse by the fact that their ignorance and lack of education and intelligence made them helpless whatever their interests get into a conflict with those of their powerful and educated employers. But he predicted, this state of affairs won't last for long for a day would come when the Indian labourers would also rise up and demand and win political rights, the right to combine, and higher wages."

"தொழிலாளர்களின் அறியாமையைப் பயன்படுத்தும் முதலாளிகள் போக்கு நீடிக்காது. தொழிலாளர்கள் எழுச்சியுற்று தங்கள் அரசியல் உரிமைகள்,சம்பள உயர்வுகள், சங்கம் வைக்கப் போகும் நாள் தொலைவில் இல்லை என ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதில் தொழிலாளர் ஆதரவுக் குரல் ஒலிக்கிறதன்றோ!

"பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் சில பொருளாதார அம்சங்கள்" எனும் நூலில் "தமது தொழிலாளர் வருக்கங்கள்" எனத் தனி அத்தியாயத்தையே எழுதியுள்ளார், ஜி.சுப்பிரமணிய ஐயர்.

நவீன காலத் தொழிலாளர்களின், நலன்களை, அரசாங்கம், இந்திய தேசிய காங்கிரஸ், மற்றும் எண்ணற்ற அரசியல் அமைப்புகள், மாநாடுகள் புறக்கணிக்கின்றன என ஜி.சுப்பிரமணிய ஐயர் கண்டித்தார். இது சம்பந்தமாக அவர் எழுதியதாவது:

"இந்த துரதிர்ஷ்டம் வாய்ந்த பிரிவினரின் நிலைமையைப் பற்றி நமது மனச்சான்று தடுமாறவில்லை. நாமும் நமது ஆட்சியாளர்களும் இரக்கமற்றவர்களாகி விட்டோம். இவர்களின் வறுமையும், அசுத்தமும், தாழ்ச்சியும் நமக்கு பழக்கமாகி விட்டது. பல நூற்றாண்டுகளாக மேல்தட்டு வருக்கங்கள் இவர்களைப் புறக்கணித்து ஒடுக்கியதன் விளைவே, இவையாகும்." (பக். *228-9;* Some economic aspects of British Rule in India-1903)

முதலாளிகளின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக தொழிலாளர்கள் எதிர்த்து தங்கள் நலன்களைக் காத்துக் கொள்ள ஒன்றுபட்டு சங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜி.சுப்பிரமணிய ஐயர் விரும்பினார். (பக்.227 மேற்படி நூல்). மேலை நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு பெரும் சக்தியாக விளங்குவதையும் ஊன்றிச் சிந்திக்கத் தூண்டினார். நிலப்பிரபுக்களின் நிர்ப்பந்தத்திற்கு விட்டுக்கொடுத்து விவசாயத் தொழிலாளருக்கு கேடு சூழ இடம் தரலாகாது என அரசாங்கத்தை எச்சரித்தார். (பக். 208 மேற்படி நூல்).

1908-ல் தூத்துக்குடியில் வ.உ.சி.யும் சுப்பிரமணிய சிவாவும் நடத்திய "கோரல் மில்ஸ்" போராட்டத்தை ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆதரித்து சுதேசமித்திரனில் எழுதினார். இங்கு தொழிலாளர் போராட்டம் வென்றது. தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட்டது. இதைப் பாராட்டி ஜி.சுப்பிரமணிய ஐயர் "நம் தொழிலாளிகள்" எனும் தலையங்கத்தில் சுதேசமித்திரனில் பின்வருமாறு எழுதினார்.

"தூத்துக்குடி வேலைக்காரர்களைப் போல ஆங்காங்கே நம்மவர் வேலை நிறுத்தம் செய்து நியாயத்தைப் பெறுவது தேசாபிமானிகள் எல்லோருக்கும் மகா சந்தோஷத்தையும் திருப்தியையும் கொடுக்கத் தக்கது. (பக். 59 குமரி மலர் அக்டோபர் 1972).

இதே தலையங்கத்தில் தொழிலாளர்களைப் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதியதாவது:

"புழுவுங்கூட மிதிபட்டால் தலையைத் தூக்கிக் கடிக்க பார்க்குமல்லவா? அப்படியே புழுக்கள் போல் பிறர் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருந்த நமது ஏழைத் தொழிலாளிகள் இப்போது தன்னினைவு வந்து தங்களை மிதிக்கிறவர்களைத் திருப்பிக் கடிக்கக் கற்றுக்கொள்வதைப் பார்க்க யார்தான் சந்தோஷப்பட மாட்டார்கள்... ...

மைசூர் கோலார் பொன் வேலைகளில் பத்தாயிரக் கணக்கான நம்மவர் வேலை செய்கிறார்கள். வெள்ளையர்க்கு லாபம் கோடிக் கணக்காய்க் கிடைக்கின்றது. அப்படிக் கிடைக்கும் லாபத்தில் மூன்றிலொரு பாகத்தை அந்த லாபத்துக்குக் காரணமாகிய தொழிலாளிகளுக்கு ஏன் கொடுக்கக் கூடாது? தொழிற்காரர் தொழில் செய்யாவிட்டால் முதலாளிகளுக்கு லாபம் எப்படி கிடைக்கும்?... ...

இங்கிலாந்து முதலான நாடுகளில் இப்படியே கணக்குப் பார்த்துக் கூலி விகிதங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. முதலாளிகள் இந்த விஷத்தில் கூலிக்காரரை ஏமாற்றுவதாக தெரிந்தால் வேலையாட்கள் ஒன்றாய்ச் சேர்ந்து "வேலை நிறுத்தம் செய்து விடுவார்கள்".

தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யும் காலத்தில் "ஸ்தலவாசிகளான பெரிய மனுஷர், கூடிய சகாயத்தை செய்யக் கடவார்கள். செய்யாவிட்டால் அவர்கள் தேச விரோதிகளே ஆவார்கள்" என்றும் சினமொழி செப்பினார் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

ரஷ்யாவில் ஜார்மன்னனின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து தொழிலாளர்கள், மற்ற சமூகப் பிரிவினர்க

ளுடன் சேர்ந்து நடத்திய போராட்டத்தை மறைமுக மாகக் குறிப்பிட்டு ஜி.சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு கூறனார்.

"இந்த நிமிஷத்தில் ருஷியாவில் தேசப் பெருமைக்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள், சில பெண்களும், பிள்ளைகளும் உயிரை இழந்து கொண்டிருக்கிறார்கள்" (24.3.1908 சுதேசமித்திரன் தலையங்கம்; மறு வெளியீடு, குமரி மலர் அக்டோபர் 1972)

## பொருளாதார விஷயங்களில் அரசாங்கத்தின் தலையீடு

பிரிட்டிஷ் ஆட்சி, பிரிட்டிஷ் வர்த்தக நலன்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தை அளித்துவிட்டு, சட்டம் ஒழுங்கு முறைகளை காப்பாற்றுவது தான் எங்கள் பொறுப்பு என்பதை இந்திய தேசிய பொருளாதார அறிஞர்கள் கண்டித்தனர்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள், இந்திய பொருளாதார விஷயங்களில் பிரிட்டிஷ் அரசு தலையிட வேண்டும். அவ்வாறு தலையிடுவது முற்றிலும் நியாயமே எனக் கூறினார். தனிநபர், சமுதாயத்தை விட உயர்ந்தவன் அல்ல என்பதும் ஜி.சுப்பிரரமணிய ஐயரின் கருத்தாகும். ஜி.சுப்பிரமணிய ஐயரின் இந்தக் கொள்கையைக் குறப்பிட்டு பொருளாதார அறிஞர் பிபன் சந்திரா எழுதியிருப்பதாவது:

"In order to justify the right of the state to interfere in economic affairs, Ranade and G.Subramania Iyer also attacked the doctrine of the social supermacy of the individual and his self-interest that lay at the heart of the concepts like the 'economic man' and self-regulating economy, and profounded in its place the doctrine of the privacy of collective welfare over individual interests".(P. 717 The rise and growth of Economic Nationalism in India)

ஆடம் ஸ்மித்தின் தனி நபர் ஆதரவுப் போக்கைக் கண்டித்து செய்யப்பட்ட விமர்சனத்தில் ஜி.சுப்பிரமணியர் "தனி மனிதன்-சமுதாய மனிதன்" பற்றிய உறவை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். "ஆடம் ஸ்மித், வருணிக்கும் பொருளாதார தனி மனிதன் சொந்த லாபத்திற்காக பாடுபடும் செருக்கு உள்ளவன். தனி மனிதன், தன்னைச் சுற்றியுள்ளோரிடம், அவனுடைய தேசத்தினிடம், அதற்கு மேல் மானுட சமுதாயத்துடன் பரிவை வளர்த்துக் கொள்பவனாக இருக்க வேண்டும்". இவ்வாறு ஜி.சுப்பிரமணிய ஐயர் தமது பொருளாதார நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்பான ஜி.சுப்பிரமணிய ரின் பின்வரும் கருத்தும் அவர் கொண்ட கொள்கையை விளக்குகின்றது.

"... the immediate private interest of the separate members of the community will not lead to the highest good of the whole, and is frequently opposed to it... On the maintenance of the unity and progress of the nation depend the sec;urity, well being and civilization of the indiidual and private economic interests, like all others must be sub-ordinated to the completion and strengthning of the Nationality". (P 130, Some economic aspects of the British Rule in India).

'தொழில் துறையல் அமைதி' எனும் குரல் கொடுத்து தொழிலாளர் பிரச்னையில் அரசு தலையீட்டை வெறுக்கும் முதலாளித்துவ மன்ப்பான்மை, ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு உடன்பாடன்று.

"முதலாளி, தொழிலாளி போராட்டம் சமபலம் வாய்ந்ததன்று. இந்தப் போராட்டத்தில் பலவீனமான பகுதியினரான தொழிலாளர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே தொழிலாளர் சார்பில் அரசாங்கம் தலையிட வேண்டும்" என்று

*ஜி.சுப்பிரமணிய ஐயர் வலியுறுத்தினார்.* (P. 719- the Rise and Growth of Economic Nationalism in India)

*பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் தலையீடு வேண்டும் என தேசிய பொருளாதார அறிஞர்கள் தத்துவார்த்த அளவில் கூறுவதை, தொழில் துறைக்கு அரசு உதவ வேண்டும் என அவர்கள் கோருவதோடுச் சேர்த்து குழப்பக் கூடாது என பிபன் சந்திரா சுட்டிக் காட்டுகிறார். (பக். 719 மேற்படி நூல்)*

## வெல்பி கமிஷன்

*ஜி.சுப்பிரமணிய ஐயரின் அரசியல் வாழ்க்கையில் இலண்டன் சென்று வெல்பி கமிஷன் முன் சாட்சியம் கூறியது அரிய பெருமையாகக் கருதப்படுகிறது. ஜி.சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் விருதை சிவஞான யோகிகள் யாத்தளித்த வாழ்த்துப்பாவில் 'வெல்பி கமிஷன்' சாட்சியம் பின்வருமாறு, புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.*

நிலவு மிந்தியச் செலவு தீர்மானிக்க
மல்கு சிறப்பின் வெல்பிக் கமிஷன்
முன் சொற்பொழிவில் வன்மையனா மண்
பகர் சுரேந்திநாத் பானர்ஜி வெம்பைத்
தடமிகு டின்ஷா டெல்ஜிவாச்சா
இந்தியர் தமக்கொரு தந்தையெனத் தகும்.
கோபால கிருஷ்ண கோகலே தம்மொடு
பன்னூற்றிமை யின்பஞ்செல்வம்
கைத்தொழில் செட்டு வெற்றி மன்னுரிமை
கட்டுத் தன்னில மாதலினிலந்தன்
என்னப் படுபுரி துன்னிக் கலங்காக்
கரியாய் நின்ற பொற்களிறே வாழ்க!

மே 24, 1985 ல் –வெல்பி பிரபுவின் தலைமையில் ஒரு 'ராயல் கமிஷன்' அமைக்கப்பட்டது. இந்தியாவின் இராணுவ–நிருவாகச் செலவினங்களைப் பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டது. இந்தக் கமிஷன் முன் சாட்சியம் கூற, தாதாபாய் நவ்ரோஜியின் பரிந்துரையின் பேரில், ஜி.சுப்பிரமணிய ஐயர் சென்னை மகா ஜன சபையின் பிரதிநிதியாக 1897–ல் சென்றார்.

வெல்பி கமிஷன் முன் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதைப் பற்றி அவரே "நான் இங்கிலாந்துக்குப் போனது" எனும் கட்டுரையில் எழுதியுள்ளார். இந்தக் கட்டுரை சென்னையில் இருந்து வெளியான புகழ் பெற்ற 'விவேக சிந்தாமணி' எனும் மாத இதழில் (அக்டோபர் 1897–ல்) வெளி வந்தது. அதன் ஒரு பகுதி வருமாறு:

"... இதுவயையில் கவர்ன்மெண்டார் வரிகளை உயர்த்தியும், கடன் வாங்கியும் தங்கள் வரும்படியை அதிகம் செய்து கொண்டு ஜனங்களுக்கு நன்மை விளையாத விதங்களாய் சைனியம் பெருக்கிலும், யுத்தத்திலும், புது தேசங்களை ஜெயிப்பதிலும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்தை அதிகப் படுத்துவதிலும் செலவு செய்து ஜனங்களுக்கு நேரான நன்மை உண்டு பண்ணும்படியான வித்தை, .போலீஸ், ரோட்டுகள், இவை முதலான விஷயங்களில் மட்டிட்டுக் கொண்டு வந்தார்கள். இனி வரிகளை ஜாஸ்தி செய்யக் கூடாது. சைனியம் முதலானவைகளில் செலவைக் குறைக்க வேண்டும். வரிகள் போடுவதிலும் செய்வதிலும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கலந்து அதற்கொத்தபடி செய்ய வேண்டும். சட்ட நிரூபண சபை மெம்பர்களுக்கு ராஜ்யத்தின் வரவு செலவிலும் தங்கள் அபிப்பிராயத்தைத் தீர்மானமாய் வெளியிடச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றும், இன்னும் அநேக

விஷயங்களைச் சொன்னோம். நாங்கள் சொன்னதில் அந்தக் கமிஷன் மெம்பர்களில்... மூன்று பேரைத் தவிர மற்றவர்களுக்குத் திருப்தியில்லாமல் அனேக குறுக்குக் கேள்விகள் கேட்டார்கள். எப்படியாவது எங்களைக் கேள்விகள் போட்டு மடக்கி எங்களுடைய அபிப்பிராயங் களை மதிப்புக் குறைக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்து. ஆயினும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குக் கூடிய வரையில் சரியான பதில்களைச் சொன்னோம். விசேஷமாய் கவர்ன்மெண்டாரிடத்திலுள்ள குறை களையே சொல்லும்படி நேரிட்டதால், இங்கிருக்கும் ஆங்கிலேயர்களுக்கு எங்கள் நால்வரிடத்திலும் அதிகக் கோபம்".

வெல்பி கமிஷன் 1895-ல் அமைக்கப்பட்ட தென்றாலும் 1897-ல் தான் அது விசாரணையில் இறங்கியது. 1896-ல் காங்கிரசில் இது சம்பந்தமாக பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ராஜாங்கத்தின் செலவினங்களை வேருடன் சோதனை செய்வதுமன்றி, உத்தியோகஸ்தரும் ஆங்கிலோ இந்தியருமல்லாத பிறரிடமிருந்து ஸாக்ஷ்யம் விசாரிப்பதற் குரிய ஸௌகர்யங்கள் ஏற்படுத்தி நடத்தினாலொழிய செலவு விசாரணைக் கூட்டத்தார் நடத்தும் விசாரணையால் ஜனங்களுக்கும் திருப்தியில்லாமல் ராஜாங்கத்துக்கும் பயன்படாமல் போய் விடுமென்றும், இந்தக் கூட்டத்தின் விசரணைகளைப் பஹிரங்கமாக நடத்தினால் அதிகப் பயன்கள் விளையலாமென்றும் இந்த ஜன சபை தெரிவித்துக் கொள்ளுகிறது".

டபிள்யூ. எஸ்.கெய்ன், தாதாபாய் நவ்ரோஜி, வில்லியம் வெட்டர்பர்ன் மூவரும் கமிஷனின் உத்தியோகச் சார்பான உறுப்பினர்கள். ஜி.சுப்பிரமணிய ஐயர், கோகலே, எஸ்.என்.பானர்ஜி, வாச்சா நால்வரும்

உத்தியோகச் சார்பற்ற சாட்சியாளர்கள். இது தவிர பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இருந்தனர்.

போலீஸ் நிருவாகம், புகை வண்டிப் பாதை அமைப்பு (Railway Construction), உயர்மட்ட மற்றும் மாநில அரசுகளிடையே நிதிப் பங்கீடு, இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு வெளியேறும் செல்வம், அதிகப்படியான இராணுவச் செலவு முதலானவைகளைப் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர் தமது கருத்துக்களைக் கூறினார்.

## புகை வண்டிப் பாதை, சுரண்டல் பாதையே

பிரிட்டிஷ் ஆட்சியின் நன்கொடைகளுள் ஒன்று, புகை வண்டிப் பாதை அமைப்பு என்று பெருமையாகக் குறிப்பிடுவதை ஜி.சுப்பிரமணிய ஐயர் ஒரு கோணத்தில் இருந்து மறுத்தார்.

அந்நிய அரசியல் ஆதிக்கமுள்ள நிலையில் அந்நிய ரயில்வே கம்பெனிகள் புகை வண்டிப் பாதை அமைப்பிற்கு ஏராளமானத் தொகையை வெளிநாட்டில் கடனாகப் பெற்று அதற்கு அநியாய வட்டியைம் தருகிறது. இந்தச் சுமையெல்லாம் இந்திய மக்கள் மீது ஏற்றப்படுகின்றது. இந்தக் கருத்தை தமது பொருளாதார நூலில் பின் வருமாறு வலியுறுத்தியுள்ளார்.

"Every mile of fresh railway constructed in India, be it remembered, brings profit to so many Englishman that influential men are never wanting to keep ceaselessly egging on the Indian authorities to undertake fresh works every year" (P.272-3)

வெல்பி கமிஷன் தலைவர் மீண்டும் மீண்டும் பிறநாடுகள் ரயில்வேவிற்காக கடன் வாங்கவில்லையா? எனக் கேட்டதாகவும் அதற்கு தாம், பின்வருமாறு பதிலளித்ததாகவும் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'இந்தியா' எனும் லண்டன் ஆங்கில இதழில் ஜூலை 19, 1897-ல் எழுதியுள்ளார்.

"சைனா, ஜப்பான் முதலான நாடுகள் அயல்நாடுகளில் இருந்து பெருமளவு கடன் பெற்று அதிக அளவு வட்டி கட்டவில்லையா எனக் கேட்கப்பட்டது. இந்த நாடுகளுக்கும் சரி, இந்தியாவிற்கும் சரி அந்நிய நாடுகளுக்குப் பணம் கட்டுவது என்பது தீமையேயாகும். ஆனால் இந்த நாடுகள் சுயாட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ளன. இதனால் உள்நாட்டு பண வெளியேற்றம் பிற வழிகளில் நிகழவில்லை. ஆனால், இந்தியாவில் நிலைமை என்ன? 30 மில்லியன் ஸ்டர்லிங் ஆண்டு தோறும் அயல்நாடுகளில் உறிஞ்சப்படுகிறது. இந்திய நாட்டு மக்கள் வறுமையில் ஆழ, வரி விதிப்பின் சுமை வேறு அழுத்துகின்றது. இங்குள்ளது போன்ற அரசியல், பொருளாதார பிரச்னைகள் சுயாட்சி பெற்ற நாடுகளில் இல்லை. ஆண்டுதோறும் மூன்று மில்லியன் ரயில்வே செலவினங்களுக்காக வட்டியாக கட்டப்படுகிறது என்பது சிறிய விஷயமல்ல. இந்தியாவின் செல்வம் பல வழிகளில் வெளியேறவில்லை யென்றால், அயல்நாட்டு மூலதனத்திற்கு வட்டி கட்டுவது என்பது வேறு விஷயம். வெல்பி பிரபு, ஆஸ்திரேலியாவைப் பற்றி குறிப்பிடுகிறார். அங்கு கொழுத்த சம்பளம் பெறும் அந்நிய அதிகாரிகள் அதிகம் இல்லை. இதற்கு மாறாக, இந்தியாவில் இரண்டாயிரத்து அறுநூறு ஐரோப்பிய அதிகாரிகள், ஆண்டு தோறும் சுமார் 80 லட்சம் பவுன்களை சம்பளத் தொகையாகப் பெறுகின்றனர்.

இந்தியாவின் மூலை முடுக்குகளில் ரயில்வே ஊடுருவுகின்றது. உள்நாட்டுத் தொழில்களை நசுக்குகிறது... ஐரோப்பாவில் இருந்து இயந்திரத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் 'ரயில்வே' மூலம் இந்தியக் கிராமங்களில் நுழைகின்றன. தேச கைத்தொழில்களின் சவப்பெட்டியின் மீது ஆணி அடிக்கப்படுகின்றது."

## விவசாயக் கூலி

விவசாய விளைபொருட்களின் ஏற்றத்தில் இடைத் தரகர்கள் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறுகின்றனர்; விவசாயிகள் பயன்பெறுவதில்லை என்பதையும் வெல்பி கமிஷனில் கூறி, விவசாயக் கூலி உயர்த்தப்படவும் வழியில்லாமல் இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டினார்.

## இராணுவச் செலவினங்கள்

"பிரிட்டிஷ் அரசு அவ்வப்பொழுது போர்களில் ஈடுபடுவது, இந்தியாவிற்குள் அமைதி ஒழுங்கு முறையை நிலை நிறுத்துவதற்காக அல்ல. ஆசியாவில் தனது மேலாதிக்கத்தையும், மறைமுகமாக உலகிலும் காண்பிப்பதற்காகவே போர்களில் ஈடுபடுகிறது. ஆகவே இதற்கான இராணுவச் செலவுகளை பிரிட்டிஷ் அரசே ஏற்பதுதான் முறையாகும். இந்திய அரசு ஏற்க வேண்டும் என்பது முறையாகாது." இவ்வாறு இராணுவச் செலவினங்களைப் பற்றிய தமது கருத்தை வெல்பி கமிஷனிடம் தெரிவித்தார்.

1902-ல் அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட, பின்வரும் 'ராணுவச் செலவு' எனும் ஏழாவது தீர்மானம் ஜி.சுப்பிரமணிய ஐயரின் கருத்தை எதிரொலித்தது.

"உள்நாட்டுப் பகைவரிடமிருந்தேனும், பக்கத்து நாடுகளினின்று படை எடுத்து வரகூடிய போர் கூட்டத்தாரிடம் இருந்தேனும், பாரத தேசத்தைப் பத்திரமாகக் காக்க வேண்டுமென்ற கருத்தன்றிப் (பொதுப் படையாகக்) கீழ்த்திசையில் பிரிட்டிஷ் அதிகாரத்தின் தலைமையைக் காக்கும் பொருட்டு கோட்டைகள் கட்டுவதற்கும் ஆயுதங்கள் சேகரிப்பதற்கும் இந்தியாவின்

பணம் கோடிக்கணக்காகச் செலவிடப்பட்டு வருகிறது. இக்காரியங்கள் இந்தியாவின் எல்லைக்கப்புறம் நெடுந்தூரம் செல்லும் நோக்கத்தையுடையன. இவற்றைத் தூண்டும் கொள்கை ஸாம்ராஜ்யக் கொள்கையாம். ஆதலால் ஸ்வதேசப்படை மட்டுமேயன்றி, ப்ரித்தானிய ஸைந்யம் முழுவதிலும் மூன்றிலொரு பங்கு தொகையுள்ள பிரிட்டிஷ் படையும் உட்பட்டதாகிய பாரத சேனையின் செலவுகள் மிதமிஞ்சின; அநியாயமாவன. இந்தியாவைப் போலவே இங்கிலாந்தின் ஸம்ரக்ஷணையின் கீழே இங்கிலாந்துக்குக் கடமைப்பட்டு வாழும் குடியேற்ற நாடுகள் சாம்ராஜ்யத்தின் ராணுவச் செலவுக்கு யாதொருதவியும் செய்யவில்லை யென்ற விஷயம் இங்கு கருதத் தக்கது". (பக். 427; காங்கிரஸ் மகாசபை சரித்திரம், சுதேசமித்திரன் வெளியீடு.)

வெல்பி கமிஷன் அறிக்கை, 1900-ல் வெளியிடப் பட்டது. பிரிட்டன், இந்தியாவிற்கு இடையே உள்ள நிதியுறவுகளைப் பற்றி முழு அளவில் திருப்தி தெரிவித்தது. பிரிட்டிஷ் கருவூலத்திலிருந்து, இந்தியக் கருவூலத்திற்கு ஆண்டுதோறும் 2,57,000/- பவுன் கொடுக்க வழி செய்தது வெல்பி கமிஷன். தாதாபாய் நவ்ரோஜி, கெய்ன் வெட்டப்ர்ன் மூவரும் பெரும்பான்மையோர் முடிவை மறுத்து தனிக் குறிப்பெழுதினர்.

1900-ல் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் வெல்பி கமிஷன் அறிவித்த சிறிதளவு உதவிக்கு நன்றி கூறி பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

"இந்தியாவில் செலவு விஷயமாக ராஜ விசாரணைக் கூட்டத்தாரின் பெரும்பகுதியார் செய்த சிபார்சுகளின்படி பிரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்து இந்தியாவின் பொக்கிஷத்திற்கு கொடுப்பதாக வாக்களித்திருப்பது பற்றி இந்த ஜன சபை நன்றி தெரிவிப்பதுடன் அவ்விசாரணைக்

கூட்டத்தால் அங்கீகரிக்கபடும் அளவேனும் இந்தியாவுக்கு நியாயம் செலுத்த விரும்பினால், இந்தக் கணக்கில் சென்ற பல வருஷங்களாக இந்தியாவுக்கு சேர வேண்டிய பாக்கிகளையும் கொடுத்துவிட வேண்டு மென்று இந்த ஜன சபை பார்லிமெண்ட் சபையை வேண்டுகிறது."

## இந்திய செலாவணி விஷயம் (Indian Currency)

இந்திய செலாவணியைப் பற்றி, 1898–ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன் முதல் பகுதி வருமாறு:

"இங்கிலாந்தில் செலவு செய்யும் பொருட்டாக இங்கிருந்து பணத்தை வற்றடித்துக் கொண்டு போவதே பரிவர்த்தன நஷ்டத்துக்கு முக்கிய காரணமாதலால், அந்த நஷ்டத்தை ஈடுசெய்யும் பொருட்டாக இன்னும் பெருநஷ்டம் தோன்றும்படி நாணயத்தை மாற்றுதல், செலாவணியைக் குறுக்குதல் முதலிய செயற்கை உபாயங்களால் இன்றும் பாரத தேசத்துப் பொருளாதாரங்களில் அதிக முட்டுப்பாடும் நமது தேசத்து வியாபாரத்துக்கு அதிக நஷ்டம் நேருமேயன்றி வேறு பயன் விளையாதென்று இந்த சபை அபிப்பிராயப்படுகிறது".

இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவர் திரு.வாச்சா அவர்கள். இவர் பேசியதாவது; "சண்டையாலும் கொள்ளை நோயாலும், பஞ்சத்தாலும் நாட்டில் அபரிமித மான பண வறட்சி உண்டாக்க, நாணயச் செலாவணி வேற்றுமைகளால் உண்டானதாக நினைத்தல் தவறு. அந்தத் தவறுதலான எண்ணத்தால் 1893 ஆம் வருஷத்தில் "நாணயச் சட்டதிருத்தம்" ஏற்படுத்தியது பரிவர்த்தனக் கிரயத்தை ஸ்திரமாக்க முயற்சிகள் செய்ததும் விழலாகும்".

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து பேசிய ஜி.சுப்பிரமணிய ஐயர் நாணயச் செலாவணியைப் பற்றிய தமது கருத்தை பின்வருமாறு வெளியிட்டார்.

"தீர்வைகள் வெள்ளியில் விதிக்கப்படுவதனால் ரூபாய்க்கு ஏற்பட்ட பொய்க் கிரயத்தை உத்தேசித்துக் குடியானவன் தன்து விளைவில் முன்னிலும் 100-க்கு 60 மடங்கு அதிகமாக விற்றுத் தீர்வை கொடுக்கும்படி நேரிட்டிருக்கிறது. ஆங்கிலேயர் கைம்முதற்பணம் இத்தேசத்துக்கு மேன்மேலும் வருவதை சிலர் அனுகூலமாக கருதுகிறார்கள். அஃது அங்ஙனம் கருதத் தக்கதன்று. அதனால் இந்நாட்டிலிருந்து அதிகப்பணம் வற்றடிக்கப்படுகிறது. நமது தேசத்து முதல்போட்டு வியாபாரம் செய்வதில் ஏற்படும் லாபமே உண்மையான லாபமாகும்".

## விவசாயிகளும் நிலத்தீர்வையும்:

1896-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசில் நிலத் தீர்வையை அடிக்கடி உயர்த்தும் வழக்கத்தைக் கண்டனம் செய்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து ஜி.சுப்பிரமணிய ஐயர் பேசியதாவது:

"சாசுவத நிலவரித்திட்டத்தை நாடுமுற்றிலும் வழக்கத்தின் கீழே கொண்டு வருவதாக வாக்குறுதி செய்தும் அவ்வாக்குறுதியை ராஜாங்கத்தார் இன்னும் நிறைவேற்றவில்லை".

ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆதரித்த நிலவரித் திட்டம் சம்பந்தமான தீர்மானம் வருமாறு:

"நிலவரித் திட்டத்தைச் சில வருஷங்களுக்கொரு முறை மாற்றுகிற முறையை வழங்கும் மாகாணங்களில் இதுவரை நடந்ததிலும் அதிகச் சுருக்கமான கால இடைகளில் மாற்று வருவதை பலமாகக் கண்டனம் செய்வதுமன்றி, அத்திட்டம் ஒரு முறை ஏற்பட்டால் பிறகு (குறைந்த பக்ஷம்

60 வருஷங்களுக்குப் பின்) நீண்ட காலத்திற்கப்பாலேதான் மாற்றத்தகுமென்று இந்த ஜனசபை தெரிவித்துக் கொள்ளுகிறது.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து மேலும் பரிவுணர்ச்சி பொங்க ஜி.சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு பேசினார்.

"ஆம்; விவசாயி பொறுமை மிக்க ஜீவன். தனது தோள்களில் துன்பச் சுமைகளைத் தாங்கும் ஜீவன். கனவான்களே! என்னுடைய மாநிலத்தில் ஏழை விவசாயிகளிடம் அரசாங்கம் மிகவும் எதிர்பார்க்கின்றது. பெருளாதார நெருக்கடிகள் தோன்றும் பொழுதெல்லாம் விவசாயியின் தோள்களில் சுமை மேலும் ஏற்றப்படுகிறது. விவசாயி, இந்திய நிதியமைப்பின் முதுகெலும்பு என்று சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவன் எவ்வளவு காலம்தான், இந்தச் சுமையைச் சுமப்பான்?"

இதுவரை ஜி.சுப்பிரமணிய ஐயரின் பொருளாதாரச் சிந்தனைகளில் அவர் காலத்தில் அவர் முற்போக்கு மனப்பான்மையை இயன்றளவு வெளிப்படுத்தியதைக் கண்டோம்.

# சமூக சீர்திருத்தச் சிந்தனைகள்

## வெடிப்புறப் பேசுதல்

புத்தர் முதல் ராஜா ராம் மோகன்ராய் வரையில் இந்தியச் சமூக அமைப்பில் சமூக சீர்திருத்தப் பிரசாரம் ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழக பக்தி இயக்கங்களும், வடநாட்டு பக்தி இயக்கங்களும், ஆன்மிக-சமய பிரசாரங்களுக்கிடையே ஓரளவு சமூக சீர்திருத்தத்திற்காக "வெடிப்புறப் பேசுதல்" எனும் பிரசார முயற்சியை சித்தர்கள் தொடங்கி வைத்தனர். **"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்"** எனும் **பாம்பாட்டி** சித்தரின் ஆவேசக் குரலும், **"சாதியாவது ஏதடா?"** எனும் சிவவாக்கியரின் சீற்றமும், கபிலர் அகவலும் இவையொத்த இன்னோரன்ன பிற சித்தர் சாதி எதிர்ப்புக் குரல்களும் "வெடிப்புற பேசுதல்" எனும் பிரசார முறையின் தொடக்கங்களே ஆகும்.

1926-ல் கௌஹாத்தியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்த திரு.எஸ்.சீனுவாச ஐயங்கார் தமது தலைமையுரையில் கபிலர் அகவலில் இருந்து, சமூக சீர்திருத்த உரையில், மேற்கோள் காட்டி பேசியது குறிப்பிடத்தக்கது.

கபிலர் அகவலை பிற்கால சமூக சீர்திருத்த இயக்கங்கள் பயன்படுத்தியதற்கு முன்பே சமூக சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் தேசிய இயக்கம் பயன்படுத்தியது என்பதற்கு, திரு.எஸ்.சீனுவாச ஐயங்காரின் பேச்சு ஒரு சான்றாகும்.

"என்னுடைய' மாகாணத்தில் பிரபல்யமாக விருக்கும் கபிலர் அகவலில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:-

"பெற்ற பெருமையும் பேதமாய்த் தோன்றல் போல்

மாந்தளிர் பேதமாம் வடிவெவர் கண்டுளார்".

"சேற்றிற் பிறந்த செங்கழு நீர் போலப்

பிரமற்கு கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்

வசிட்டருக்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்

சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரர்

பராசரருக்கு மீன் வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும் (இந்நால்வரும்).

வேதங்களோதி மேன்மைப்பட்டு மாதவராகி வழங்கினவரன்றோ?" (பக். 725; காங்கிரஸ் மகாசபை சரித்திரம்; சுதேசமித்திரன் வெளியீடு)-சாதி எதிர்ப்பிற்கு போர் முரசு கொட்டிய கபில முனிவரும், அகப்பேய்ச் சித்தரும் பிராமண குலத்தில் பிறந்து சமூக சீர்திருத்தம் பிரசாரம் செய்வார்கள் எனும் கூற்றை தாழ்த்தப்பட்ட கிழச் சாம்பான் வாயிலாக பாரதியார் கூறுவதைக் கேட்போம்! "தெற்கு தேசத்தில் பிராமண குலத்தில் கபில முனிவரும், அகப்பய்ச் சித்தரும் திரும்பி அவதாரம் செய்வார்கள். அவர்கள் ஊருராகப் போய் ஜனங்களுக்கு தர்மத்தை சொல்லி ஜாதி வழக்கையெல்லாம் தீர்த்து வைப்பார்கள்".

தேசிய இயக்கத்தோடு, தேசிய சமூக மாநாடுகளையும் இணைத்து சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்ட மகா கோவிந்த ரானடே அவர்கள் 1894-ல் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பேசியபொழுது சமூக சீர்திருத்த வளர்ச்சியின் ஆதி மூலஸ்தானம்" சென்னை மாநிலம் என பின்வருமாறு குறிப்பிட்டு பாராட்டினார்.

"கனவான்களே! இந்து தேசத்திலே சென்னை ராஜதானி என்று வழங்கும் தென் தேசமானது சென்ற ஆயிரம் வருஷங்களாக விசேஷமான சமய ஜனாசாரச் சன்மார்க்க விருத்திக்கு ஆதி மூலஸ்தானமாகிப் பிரபலம் அடைந்து இருக்கிறது. உங்களுடைய திராவிட நாகரிகம் சில காலம் ஆரிய (ஆசார) வெள்ளத்திலமிழ்ந்தும், சுவரூப மாறாதிருக்கப் போதிய வலிமையுடையதாயிருக்கிறது. இவ்வாறாக வடக்கேயுள்ள எங்களைக் காட்டிலும் நீங்கள் விசேஷ அனுகூல்முடையவர்களாயிருக்கிறீர்கள். இதே அனுகூல ஸ்திதியை உங்கள் சைவ-வைணவ சமயாசாரியார்கள் உங்களுக்குப் பயன்படும்படி மிகவும் உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். அந்தப் பயன நாங்களடையவில்லை... இத்தென் தேசத்துத் தத்துவ ஞான சிரேஷ்டர்களுடைய ஒளியைப் பெற்றே வட தேசத்து விளங்கிய ராமானந்தர், சைதன்யர், நானக் என்ற பெரியார் தங்கள் தங்கள் மதக் கோட்பாடுகளைத் தத்தம் தேசத்திற் பரவச் செய்தார்கள்". (பக். 362-363; விவேக சிந்தாமணி தொகுதி நான்கு; பகுதி 12).

## கிறிஸ்துவ மிஷனரிகளால் ஏற்பட்ட தாக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திட்டமிட்ட அமைப்பை உருவாக்கிக் கொண்டு கிறிஸ்தவ மிஷனரிகள் இந்தியாவில் ஆங்காங்கே சமய உணர்வோடு சமூக உணர்வையும் தட்டியெழுப்பினர். 1815-ல் பிரிட்டிஷ் கிறிஸ்துவ மிஷனரிகள் மட்டும் இதியாவில் செயலாற்ற பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி தன் அதிகார

வரம்பிற்குள் அனுமதித்தது. 1818–ல் சென்னையில் "சென்னை சமயத்துண்டுப் பிரசுர சங்கம் (Madras Religious Tract Society) கிறிஸ்துவ சமயப் பிரசாரத்திற்காக அமைக்கப்பட்டது. 1838–ல் உலகத்தின் எப்பகுதியில் இருந்தும் கிறிஸ்துவ மிஷனரிகள் வருவதற்குரிய அனுமதியை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வழங்கியது.

இந்து மதத்தின் சாதி அமைப்பும், வருண அமைப்பும் ஒதுக்கிய, ஒடுக்கியப் பிரிவினரிடையே கிறிஸ்துவச் சமய மிஷனரிகள் சிலர் செய்த பிரசாரம், இந்து மதத்தின் படித்த புதிய மேல்தட்டு வருக்கத்தில் புதிய சிந்தனைப் போக்கைத் தூண்டியது. கிறஸ்துவ மிஷனரிகள் இந்துமத விரோதப் பிரசாரத்திற்கும், மதமாற்ற நடவடிக்கைகளுக்கும், பிரிட்டிஷ் அதிகார வருக்கம் மறைமுகமாக ஆதரவு அளித்ததாகவும் இந்து சமூக மேல் தட்டு வருக்கம் கருதியது.

## ஹிந்து லிட்டரரி சொஸைடி (Hindu Literary Society)

இலக்கியச் சங்கங்கள் அரசியல், சமூக பிரச்னைகளை விவாதித்ததை முன்பே கண்டோம். சென்னையில் 1830–ல் தோன்றிய, ஹிந்து லிட்டரரி சொஸைடி இவ்வகையில் முன்னோடியாகத் திகழ்ந்தது. இதன் தலைவர் காவேரி வெங்கட நரசிம்மய்யா, செயலாளர் திரு.சீனுவாச பிள்ளை, உறுப்பினர்களுள் எம்.வெங்கடராயலு நாயுடு, காஜுலு லட்சுமி நரசு செட்டி முக்கியமானவர்கள். சீனுவாசபிள்ளையும், காஜுலு லட்சுமி நரசு செட்டியும் சென்னை பொது வாழ்க்கைப் பிரமுகர்களாகப் பெயர் பெற்றனர். "பாரிஸ்டர்" ப.வ.இராமசாமி ராஜு" என்பவர் 1887–ல் எழுதிய ஒரு நூலில் 19ஆம் நூற்றாண்டில் 'தமிழ் பிரபுக்களாக' விளங்கியவர்களில் பின்வரும் பட்டியலைத் தந்துள்ளார்.

கோமளீசுவரன் கோவில் சீனிவாசப்பிள்ளை, தஞ்சாவூர் இராமாஞ்சுலு நாயகர், மணலி சின்னையா முதலியார், ஏனிசுலு வீராசாமி ஐயர், லட்சுமி நரசிம்மலு செட்டியார்.

சீனுவாச பிள்ளை மேலை நாட்டு கல்வி முறை, சிந்தனைப் போக்கு முதலியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டவர்; பெரும் செல்வந்தர்; சென்னை அட்வகேட் ஜெனரல் ஜார்ஜ் நார்ட்டனின் நெருங்கிய நண்பர். இவருடைய நெருங்கிய நண்பர் திரு.எம்.வெங்கடராயுலு நாயுடு, 1853–ல் தமது சொந்தப் பத்திரிகையான 'ரைசிங் சன்' (The Rising Sun) என்பதில் சமூகப் பிரச்னைகளைப் பற்றி எழுதினார்.

காஜுலு லட்சுமி நரசு செட்டி, சீனிவாச பிள்ளையைக் காட்டிலும் அரசியல் உணர்வு மிக்கவர். 1844–ல் கிரெசெண்ட்" (The Cresent) எனும் பத்திரிகையை இரு ஆங்கிலேயர்களுக்கு மிகுந்த ஊதியத்தைக் கொடுத்து நடத்தியவர். கிறிஸ்துவ மிஷனரி பிரசாரத்தை எதிர்ப்பதில் முன் நின்றவர். அக்டோபர் 4, 1846–ல் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்களிடம் "Memorial on Missonary Activities" எனும் விண்ணப்பத்தை சமர்ப்பித்தார். சென்னையில் செப்டம்பர் 7, 1846–ல் லட்சுமி நரசு தலைமையில் நடைபெற்ற இந்துக்களின் கூட்டத்தில் ஒருமனதாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பம், அது. (பக்.86 The Freedom Struggle in Andhra Pradesh; Volume.I)

## முதலில் வேண்டுவது அரசியல் சீர்திருத்தமா? சமூக சீர்திருத்தமா?

திரு.சீனுவாசபிள்ளை, லட்சுமி நரசு ஆகியோரிடையே இந்து சமூக சீர்திருத்த வழிமுறைகளைப் பற்றி கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

சமூக சீர்திருத்தப் பணிகளுக்கு பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒத்துழைப்பை நாடிப் பெறவேண்டும்; 'கம்பெனி' ஆட்சியை மனப்பூர்வமாக ஆதரித்து சமூக சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்; ஐரோப்பிய, பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள், வர்த்தகர்கள், கிறிஸ்துவ மிஷனரிகள் ஆகியோருடன் இணக்கமாகப் பழகி சமூக சீர்திருத்தத்தில் மேற்கத்தியப் பாணியைப் புகுத்த விரும்பினார் திரு.சீனுவாச பிள்ளை.

சமூக சீர்திருத்தம் எதுவும் வெளியில் இருந்து திணிக்கப்படக்கூடாது; உள்ளிருந்து இயற்கையான வளர்ச்சி பெற வேண்டும்; அதிகார வருக்கத்தைக் கண்மூடிக் கொண்டு ஆதரிக்கக்கூடாது: அரசியல் கோரிக்கைகளுக்காக போராடவும் வேண்டும் என்பன லட்சுமி நரசுவின் கொள்கைகள்.

இவ்வாறு, காங்கிரசில், 1885-ல் இருந்து காணப்பட்ட, முதலில் வேண்டுவது அரசியல் சீர்திருத்தமா? அல்லது சமூக சீர்திருத்தமா?" எனும் கேள்வி சீனுவாச பிள்ளை-லட்சுமி நரசு காலத்திலேயே தோன்றிவிட்டது.

பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திர ஸென் 1864-ல் சென்னை வந்தபொழுது, லட்சுமி நரசு, சாதிபாகுபாடு, பொருளற்றது, தீமை பயப்பது எனக்குறிப்பிட்டு பேசினார். கேசவ சந்திர ஸென்னின் நாட்குறிப்பிலே இந்தச் செய்தி பதிவாகியுள்ளது. சென்னையில் பிரம்ம சமாஜத்தினர் சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இவர்களுள் வழக்கறிஞர்களான ராஜகோபாலாசார்லு, சேலம் சுப்பராயலு செட்டியார், ஸ்ரீதரலு நாயுடு, நாடகாசிரியர் காசி விசுவநாத முதலியார், புரசைவாக்கம் துரைசாமி ஐயங்கார் முதலானோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இவர்களுள் துரைசாமி ஐயங்கார், சிறந்த தமிழறிஞர். தமிழகத்தில் பிரம்ம சமாஜத்தைப் பரவ உடல், பொருள்,

ஆவி மூன்றையும் தியாகம் செய்த ஸ்ரீதரலு நாயுடுவின் நெருங்கியத் தோழர். 'தத்துவபோதினி' எனும் இதழை நாயுடு தொடர்ந்து நடத்த உதவியவர். அனைத்திற்கும் மேலாக பிரம்ம சமாஜக் கோட்பாட்டிற்கு இணங்க பூணுலைத் துறந்த முதல் பிராமணர்.

## "டிரிப்ளிகேன் லிட்டரரி சொஸைடி"

சென்னை மாநிலத்தில் சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபாடு கொண்ட அமைப்புகளில் "டிரிப்ளிகேன் லிட்டரரி சொஸைடி" ஹிந்து லிட்டரரி சொஸைட்டிக்கு அடுத்தபடியாக மிக முக்கியமானதாகும். ஜி.சுப்பிரமணிய ஐயர், அனந்தா சாருலு, ரகுநாதரர்வ், போன்ற சீர்திருத்தவாதிகள் இந்து இலக்கியச் சங்கத்தின் தூண்களாக விளங்கியவர்களில் சிலர் ஆவார்.

1890–ல் "திருமண வயது சம்மத மசோதாவை" (Ags of consent Bill) திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம் துணிச்சலுடன் வரவேற்றது. வயது வரம்பை பதினான்காக உயர்த்த வேண்டுமெனக் கோரியது.

திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் சமூகச் சீர்திருத்த ஆர்வம் கொண்ட இளைஞர்கள் பலர் இருந்ததையும், இவர்கள் சுவாமி விவேகானந்தரை வரவேற்றதையும், அங்கு சுவாமி விவேகானந்தர் சமூக சீர்திருத்தம் பற்றி குறிப்பிட்டதையும் 1893–ல் "இந்தியன் சோஷல் ரிபார்மர்" எனும் சென்னை ஏடு வெளியிட்ட செய்திகளில் அறியலாம். திவான் பகதூர் ரகுநாதராவ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுவாமி விவேகானந்தர் பேசியதின் சுருக்கம் வருமாறு:

"சாதி முறை ஒரு சமூக அமைப்பாகும். சமய அமைப்பு அன்று; ... இந்து சமயத்திற்கு இனிமேல் சாதி அமைப்பு எனும் ஆதாரக் கம்பம் தேவையில்லை. ஒரு பிராமணன்

யாருடனும்–பறையர் உட்பட–கலந்து உணவருந்தலாம்; வங்காளத்தை விட இங்கு சாதி வேறுபாடு அதிகமாக உள்ளது... முதலில் பிராமணர்களுக்கிடையே உள்ள பிரிவுகள் அகன்று ஒன்று சேரவேண்டும். அடுத்து பிராமண, க்ஷத்திரியர், வைசியர் எனப்படும் இரு பிறப்பாளர் ஒன்று சேர வேண்டும். இதற்குப் பிறகு இரு பிறப்பாளர்களும் சூத்திரர்களும் ஒன்று சேர வேண்டும்". (பக். 298 பிரபுத்த பாரதா – ஆகஸ்ட் 1974).

திருவல்லிக்கேணி இலக்கியச் சங்க சீர்திருத்த வாதிகளுக்கு சுவாமி விவேகானந்தர் அருளிய ஓர் அறிவுரையைப் பற்றிய ஒரு செய்தி வருமாறு:

"The Swami held several conversation at the literary Society of Triplicane... Many of its young members belonged to the Social Reform movement in Madras. But he saw that they were working from the wrong point of view, that of sweeping condemnation. In his repeated talks the Swami emphatically urged upon them the necessity of critically analysing foreign ideals. He said that they should invoke the aid of all that was great and glorious in the past, otherwise the very foundations of the national structure would be undermined. He told them that he was not an enemy of Social reform, in the country. He yearned for reforms, but they must come within.. and must be constructive and not destructive". (P. 299-Above Magazine).

சமூக சீர்திருத்தத்தில் தேசிய நோக்குடன்–அதாவது கடந்த கால மகத்தான–புகழார்ந்த வரலாற்று அம்சங்களை அடித்தளமாக்கிக் கொண்டு–பிரசாரம் செய்ய வேண்டும் எனும் ஒரு வழிமுறையை சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார்.

மேலைநாட்டு சிந்தனையின் தாக்கத்தால் ஊக்கம் பெற்றவர்கள் பண்டைய பாரத நாகரிகத்தில் பரிவு காட்டாதது ஒரு குறையாகக் கருதப்பட்டது.

## ஓர் ஒப்பீடு

சுவாமி விவேகானந்தர் 1897-ல் சென்னை வந்த பொழுது, வங்க-சென்னை சமூக சீர்திருத்த இயக்கங்களை ஒப்பிட்டு பின்வருமாறு பேசினார்:

"ஒரு சமயம் ஒரு முகமாகவும், மற்றொரு சமயம் அதற்கு நேரெதிர் முகமாகவும் மாறி மாறி இயங்குவிக்கும் வங்காளச் சீர்திருத்தங்களை போன்றவை சென்னையில் ஏற்படுத்தப்படவில்லை. இங்கே மிகவும் மெதுவான, ஆனால் ஸ்திரமான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. சீர்திருத்தத்தில் வளர்ச்சி தோன்றுகிறதே அன்றிப் பிற்போக்கில்லை. ஒருவாறு வங்காள சீர்திருத்தங்களால் பழைய பழக்க வழக்கங்கள் பிசகானவையென்று கருதிப் புறக்கணிக்கப்பட்டிருக்க ஈண்டு மதராஸிலோ எல்லா சீர்திருத்தங்களிலும், கொஞ்சம் கொஞ்சம் விருத்தி ஏற்பட்டிருக்கிறது". (பக். 124, விவேகானந்தரின் ஞான தீபம்-சுடர் 6.)

சென்னையில் சுவாமி விவேகானந்தர் பிப்ரவரி இரண்டாம் வாரம் 1897-ல் பேசிய 'எனது போர் முறை' எனும், முற்கூறிய கருத்தடங்கிய, பேச்சினை பூனாவில் இருந்து வெளிவந்த திலகரின் 'மராட்டா' பத்திரிகை தனது 1897-மார்ச் 7 ஆம் தேதி இதழில் பின் வருமாறு குறிப்பிட்டது.

"வங்காளச் சீர்திருத்தக்காரர்களை விட அவர்கள் புத்திசாலித்தனமான வழிகளைப் பின்பற்றுகிறார்கள்" என்று சென்னைச் சீர்திருத்தவாதிகளைப் பாராட்டிப் பேசினார் சுவாமி விவேகானந்தர். சென்னையில் இயற்கையான, மெதுவான வளர்ச்சியை சீர்திருத்தம் எனக்கருதுகிறார்கள்; வெறும் வன்முறை எதிர்ப்பாக கொள்ளவில்லை." (பக். 250, தமிழர் கண்ட விவேகானந்தர் 1974-பெ.சு.மணி).

## கருத்துப் போர்:

'எனது போர் முறை' சொற்பொழிவில் சுவாமி விவேகானந்தர் சென்னை சமூகச் சீர்திருத்தக்காரர்களை குறை கூறியும் பேசினார். மூன்று குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்.

## முதல் குற்றச்சாட்டு

"இச் சீர்திருத்தக்காரர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். இவர்களுள் எவரையும் விட நான் ஒரு பெரிய சீர்திருத்தக் காரனாவேன். ஏனெனில், இவர்கள் விரும்பும் சீர்திருத்தங்ளெல்லாம் மிகவும் அற்ப அளவேயுடையனவா யிருக்க, நான் விரும்புவது அடிமுதல் உச்சிவரையில் சீராகக்கூடிய ஒரு பெரிய சீர்திருத்தமாகும். அனுசரிக்கும் முறையில்தான் வித்தியாசமிருக்கிறது. அவர்களுடையது அழிவு முறை, என்னுடையதோ அமைப்பு முறை."

## இரண்டாம் குற்றச்சாட்டு

"சிறுவர்களே! ஏ மீசை முளைத்த சிசுக்களே! ஒருநாளும் இச் சென்னையை விட்டு வெளிப் போகாத நீங்கள், எழுந்து நின்று, பாரம்பரியமாய் வந்த ஆயிரக்கணக்கான ஆசாரங்களைக் கொண்டுள்ள இம் முப்பது முக்கோடி ஜனங்களுக்கும் புதிய விதிகளை நிர்ணயிக்கப் புறப்பட்டு விட்டீர்கள்! உங்களுக்கு வெட்கமில்லையா?".

## மூன்றாம் குற்றச்சாட்டு

"சீர்திருத்தம் வேண்டுவோர் எங்கே? அதைக் கோரும் ஜனங்கள் யார்? முதலில் அவர்களைத் தயாராக்குங்கள். எப்போதும் காணாத கொடுங்கோன்மை, **"சிறுபான்மை யோரின் கொடுங்கோன்மையே"**. ஒரு சிலர் சில விஷயங்களைச் குறையெனக் கூறி விடுவதால், முழு

*சமூகமும் அவர்கள் சொற்படி நடக்க முடியாது. இதுவே இந்தியாவில் காரியங்கள் நடைபெறாததற்கு காரணம். ஆகையால் இச்சமூக சீர்திருத்தங்களுக்குக் கூட ஜனங்களைப் படிப்பிக்க வேண்டியது முதற்கடமை யாகின்றது. சென்ற நூறு வருஷங்களில் அனுஷ்டானத் திற்குக் கொண்டு வரப்பட்ட எல்லாச் சீர்திருத்தங்களும் வெறும் அலங்காரமாகவே இருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் முதலிரண்டு உயர் ஜாதி ஜனங்களுக் கானவையே ஒழிய ஏனையோர்க்கு ஒரு சிறிதும் சம்பந்தங் கொண்டவையல்ல".*

*சுவாமி விவேகானந்தர், "சிறுவர்களான சீர்திருத்தக் காரர்கள்", "அழிவு முறை", "சிறுபான்மையோர் கொடுங்கோன்மை" என விமர்சனம் செய்ததற்கு "இந்தியன் சோஷல் ரிபார்மர்" தனது பிப்ரவரி 7, 1897-ஆம் இதழில் பதிலளித்தது.*

## முதல் குற்றச்சாட்டுக்கு பதில்:

*"தமது பணிக்காக இளைஞர்களை நம்பியிருப்பதாக உலகமறிய அவர் கூறினார்... மற்றும் சுவாமிஜி அவர்களே ஓர் இளைஞர் அல்லவா?... இந்து மத மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர்கள் சிலர், சுவாமிஜியை "இளஞ்சிறுவன்", "இளைய துறவி" என்று அழைப்பதை நாம் கேட்கவில்லையா? இளமை ஒரு குற்றமானால் சுவாமிஜியும் சமூக சீர்திருத்தக்காரர்களோடு சேர்ந்து விடுகிறார்.*

## இரண்டாம் குற்றச்சாட்டுக்கு பதில்

*"அழிவு முறை என்பதைப் பற்றி சுவாமிஜி எதைக் குறிப்பிடுகிறார்" என்று சீர்திருத்தச் சபையில் விளக்கம் பெற நம்முடன் கேட்டார்கள். 'யாரையும் குறிப்பிட்டுப் பேச வேண்டாம்' என பதில் அளித்தார். இந்த நீதியை*

நாமும் பொது விதியாக ஒப்புக் கொள்கிறோம். ஆனால் சுவாமிஜி சென்னையில் நன்கறிந்த தனி நபர்கள் எவ்வளவு பேரைப் பெயரிட்டுப் பேசியிருக்கிறார்".

## மூன்றாம் குற்றச்சாட்டுக்கு பதில்

"சிறுபான்மையோர் கொடுங்கோன்மை' எப்படியிருக்க முடியும்? சமூக சீர்திருத்தவாதிகள் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இல்லை; அவர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் கூடக் கிடையாது; சொல்லப்போனால் புரோகிதர்கள்கூட இல்லை. பிரபலமானதால் அது எடுத்துக் காட்டப்பட வேண்டும். இது கொடுங்கோன்மை யென்றால், மக்களிடையே அறிவு வளர-வளர இத்தகைய கொடுங்கோன்மையும் வளரும். சமூக சீர்திருத்தக் கட்சி, அடிக்கடி தலைமுடி நரைத்தவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் காரியத்திற்கு பொருந்தியிருந்தால் அதன் உற்ற நண்பர்களாக அவர்கள் நடிப்பார்கள்".

சுவாமி விவேகானந்தர் விமர்சனங்களை திசை திருப்பி "மெட்ராஸ் டைம்ஸ்", அவர் சமூக சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு காட்டுகிறார் என வருணித்தது. 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' இதை மறுத்துக் கூறியதாவது:

"இதைவிட உண்மைக்குப் புறம்பானது ஒன்றுமில்லை... எங்களில் பலரை விட அவர் தீவிரமானவர். அவரைப் போன்ற பெரிய ஆதரவாளரை அவ்வருடன் கருத்து வேறுபாடு கொண்ட நாம் நல்ல நண்பருடன் மாறுபடுகிறோம் என்று கருதுகிறோம்".

மேலே காணும் கருத்துப் போரில் 'மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்மர் அசோசியசன்', இதன் பிரசார ஏடான இந்தியன் சோஷல் ரிபார்மர்' இரண்டும் தொடர்புடையன. இவ்விரண்டின் தோற்றத்திற்கு மூல

கர்த்தா ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள். சுவாமிஜியின் சென்னைப் பேச்சுக்களின் பொழுது, ஜி.சுப்பிரமணிய ஐயர் லண்டனில் வெல்பி கமிஷன் முன் சாட்சியம் அளிக்கச் சென்றிருந்தார்.

## இந்து பத்திரிகையில் சமூக சர்திருத்தப் பிரசாரம்

ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்தப் புயல் வேகப் பிரசாரம் இந்து பத்திரிகையின் தொடக்கக் காலத்தில் இருந்தே- 1878 முதல் தொடங்கி விட்டது.

'இந்து' பத்தரிகையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி கொண்டு வரப்பட்ட "A Hundred years of the Hindu. எனும் நூலில் 'Battle for social Reform" எனும் தனிச் சிறப்பு வாய்ந்த தனித்தலைப்பில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்த வாள்வீச்சுக் கலையின் முழு வெளிப் பாட்டையும் காண்கிறோம்.

'இந்து' பத்திரிகை ஆசிரியராக, ஜி.சுப்பிரமணிய ஐயர் தொடுத்த சமூக சீர்திருத்தப் பிரசாரத்தைப் பற்றி முற்கூறிய நூல் கூறுவதாவது:

"In his crusade against the social evils of Hindu Society the Editor of the Hindu G.Subramania Iyer, was much far ahead of his times and the fact that many of the reforms for which he fought through the columns of his paper and on the platform are still far from achieved events-day shows the deep rooted strength of the forces against which he had to carry on his campaign". (P. 67).

இந்து சமூக அமைப்பின் தீமைகளை எதிர்த்துப் போராடியதில் 'இந்து' இதழாசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர் காலத்தில் மிகவும் முற்பட்டவராக இருந்தார். இதழ் வாயிலாகவும், மேடைப்பேச்சு வாயிலாகவும் அவர் போராடிய சீர்திருத்தங்களில் பல இன்று கூட

சாதிக்கப்படவில்லை எனும் உண்மை எதைக் காட்டுகிறது எத்தகைய வலிமைவாய்ந்த, ஆழமாக வேர்விட்ட எதிர்ப்புச் சக்திகளை அவருடைய பிரசாரம் எதிர் கொண்டது என்பதைக் காட்டுகிறது.

இந்து வாசகர்கள் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்தப் பிரசார வேகத்தை தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவர்கள்; இதனால் பத்திரிகையின் விற்பனையில் சரிவு ஏற்பட்டுவிடுமே என அஞ்சினார் பத்திரிகையின் மேலாளரான முடும்பை வீரராகவாசாரியார். விதவை மறுமணம், குழந்தை மண ஒழிப்பு, சாதி ஒழிப்பு, தேவதாசி நடன ஒழிப்பு, திருமண வயதை உயர்த்தல், பறையர்கள் முன்னேற்றம் (இப்பொழுது ஆதி திராவிடர்கள்) முதலான கருத்துகளில் கனல் தெறித்தன; மு.வீரராகவா சாரியார் அலறிப்புடைத்துக் கொண்டு நிறுத்தச் சொன்னார். ஆனால் ஜி.சுப்பிரமணிய ஐயர் செவி சாய்க்கவில்லை. 'இந்து'வில் இருந்து வெளியேறி னாலும் வெளியேறுவேன், சமூக சீரிதிருத்தப் பிரசாரத்தை நிறுத்த மாட்டேன் என்பதில் உறுதி காட்டினார் ஜி.சுப்பிரமணிய ஐயர். இதனால் இந்துவோடு இருந்த இருபதாண்டு கால உறவு முறிந்தது; 1892-ல் வெளியேறினார்.

## சாதி அமைப்பு - ஜி.சுப்பிரமணிய ஐயரின் கருத்து

மேலை நாட்டு சமூக அமைப்பில் பிறப்பையொட்டி உயர்வு தாழ்வில்லை என்றும், இந்து மத சாதி அமைப்பில் தான் இந்த விநோதமான தீமை உள்ளது என ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறும்பொழுது பின்வருமாறு ஒப்பிட்டு எழுதினார்.

"The Social system of the west recognises no such standard of social position as birth. A cobbler's son by this attainments, moral character and wealth, can ascend to a social po-

sition as honoured and honourable as that of the Prince of Wales himself. But let the praiah get up all the vedas by heart, let him be even so well behaved and wealthy, he cannot claim equality with the vilest Brahmin, the notorious expert at forgery, the inverterate drunked in the name of civilisation. This is the peculiar evil of the Hindu caste system". (P. 75-A Hundred years of the Hindu)

*மேலைநாட்டு சமூக அமைப்பு பிறப்பை யொட்டிய உயர்வு – தாழ்வை ஏற்பதில்லை. செருப்பு தைப்பவர் ஒருவரின் மகன் ஒழுக்கத்தாலும் செல்வத்தாலும் சிறப்பெய்தினாலும், வேல்ஸ் இளவரசரின் சமூகப் பெருமிதத்தை யொத்தச் சிறப்பையடைய முடியும். ஆனால், பறையன் ஒருவர் வேதங்கள் அனைத்தையும் கற்று சீலமுற்ற வாழ்க்கையும், செல்வத்தையும் பெற்றாலும் கூட, அவர் கயவனான, பேர் பெற்ற மோசடிக்காரர்களை, திருத்த முடியாத குடிகாரனான ஒருபிராம்மணனுக்கு சமமாக இருக்க இயலாது எனும் தீமை மிக்க இந்து சாதி அமைப்பு விதிக்கும் விநோதம் உள்ளது."*

## ஜி.சுப்பிரமணிய ஐயர் பாதையில் பாரதி:

*1893–ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் மேலே காட்டிய உதாரணத்தை பாரதியார் 1904–ல் இந்து இதழிற்கு எழுதியக் கடிதத்தில் எதிரொலித்தார். இந்தக் கடிதம் திரு.சங்கரன் நாயரின் சமூக சீர்திருத்த சம்பந்தமான கருத்தை ஆதரித்து எழுதப்பட்டக் கடிதம். இந்திய சட்டமன்றங்களில் இந்தியர்களுக்கு இடம் தர வேண்டும் எனும் கோரிக்கை முன் நின்ற காலத்தில் சங்கரன் நாயர், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோட்பாடுகள் ஏற்கப்படாத வரையில் சட்டமன்ற பதவிகளை கோருவது முறை யாகாது என்று கோரினார். பிரிட்டிஷ் ஆட்சி இந்தக் கோட்பாடுகளை அடித்தளமாகக்*

கொண்ட்து எனக்குறிப்பிட்டார். அரசியல் சீர்திருத்தத்திற்கு முன், சமூக சீர்திருத்தத்திற்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும் எனும் கொள்கைக்கு ஏற்ப சங்கரன் நாயர் கருத்து தெரிவித்தார். சங்கரன் நாயரின் இந்தக் கருத்து 'இந்து வாசகர்களின் எதிர்ப்பை எதிர்கொண்டதில் வியப்பில்லை. பாரதியார் சங்சரன் நாயரின் கருத்தை ஆதரித்து எழுதிய கடிதத்தில் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரின் கண்ணோட்டத்தைத் தழுவினார்: பாரதியார் கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

"What the eminent social refromer means to say is simply this. There can be no political emancipation with out the feeling of nationality. There can be no feeling of nationality when the caste system is prevalent, the wonderful systm which makes a paraiah philantrropist inferior to a Brahmin go-between is it doubted in any quarter that in England a cobbler boy with necessery merit finds his path clear to the premiership? And is it not treason in India to believe that a Sudra not to speak of a panchama with an unparalleled knowledge of Sanskrit scripture and with exceptional goodness and piety can never aspire to the see the Sringeri?" (P. 77-A Hundred years of the Hindu).

"புகழ்பெற்ற சமூக சீர்திருத்தக்காரர் உரைக்க விரும்புவது, இதுதான் – அரசியல் விடுதலையில்லாமல், நாட்டுரிமை உணர்வு இல்லை – சாதி அமைப்பு இருக்கும் பொழுது நாட்டுரிமை உணர்வு இல்லை. இந்த விநோதமான சாதி அமைப்பில் பிறர் நலம் பேணும் பறையர் ஒருவர் இடைப்பட்ட ஒரு பிராம்மணனுக்குத் தாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இங்கிலாந்தில் செருப்பு தைப்பவரின் மகன் தேவையானத் தகுதி பெற்று பிரதம மந்திரி பொறுப்பை அடைய முடியும் என்பதில்

ஐயமுண்டோ? பஞ்சமனை விட்டு விடுவோம், சம்சுகிருத சாத்தரங்களில் இணையற்ற புலமையும் சமயப் பற்றும் வாய்மையும் வாய்ந்த ஒரு சூத்திரன் சிருங்கேரி சங்கராச்சியாரைப் பார்க்க விரும்பினால்அது இந்திாவில் துதோகக் குற்றமாகக் கருதப்படுவதில்லையா?

## தேசிய சமூக மாநாடுகள் (National Social Confferences)

1885–ல் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை எனும் பெயரில் ஓர் அமைப்பு தோன்றும் போது, சமூக சீர்திருத்தம் பற்றி அதன் நிலை என்ன? எனும் கேள்வியும் எழுந்தது. "எல்லோருக்கும் பொதுவான ராஜ்ய திருத்த விஷயத்தை மாத்திரம்" கவனிக்க வேண்டும் என காங்கிரசின் சில தலைவர்கள் வற்புறுத்தினர். ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபடும்பொழுது, சமூக சீர்திருத்தத்தின் பெயரால் கருத்து வேற்றுமைகள் மேலோங்கினால் தேசிய இயக்கம் பலவீனப்படும் எனக் கருதினர். சமூக சீர்திருத்த மனப்பான்மை கொண்டவர் கள், முதல் நாள் காங்கிரஸ் மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த நாள் தனியாக சமூக சீர்திருத்த மாநாட்டை நடத்துவதென்று முடிவு செய்தனர். இந்த மாநாட்டிற்கு வைக்கப்பட்ட பெயரே "தேசிய சமூக மாநாடு" என்பதாகும். இதன் முதல் மாநாடு சென்னையில் 1887–ல் தொடங்கியது என்பது குறப்பிடத் தக்கதாகும். இவ்வகையில் மகாகோவிந்த ரானடே எடுத்த முயற்சிக்கு ஜி.சுப்பிரமணிய ஐயர் தோளோடு தோள் நின்றார். அரசியல் உரிமைகள் பெறுவதற்கு சமூக உரிமைகளைப் பெற வேண்டும் என ரானடே வற்புறுத்தினார்.

"ரானடே–காந்தி–ஜின்னா" எனும் நூலில் டாக்டர் அம்பேத்கர் ரானடேவின் சமூக சீர்திருத்தக் கொள்கையைக் குறிப்பிட்டு எழுதியதாவது:

"தன்னுடைய விரோதிகள் அரசியல் தீவிரவாதிக ளாகவும், சமூக மிதவாதிகளாகவும் (Political Radicals, Social Torries) விளங்குகின்றனர் என அவர் கூறினார். அவர் (ரானடே) மேலும் கூறியதாவது, "தங்களுடைய சொந்த மூடநம்பிக்கைகளிலும், சமூகக் கொடுமைகளிலும் தளையிடப் பெற்று முடங்கிய ஒருவன் ஆட்சியாளரிட மிருந்து உரிமைகளையும், சலுகைகளையும் பெறப் போராட வருவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?"

தேசிய வாதிகளின் இரட்டைக்குழல் துப்பாக்கியாக தேசிய காங்கிரஸ் மகாசபையும், தேசிய சமூக மாநாடும் இயங்கின. டாக்டர் அம்பேத்கர் இந்த இரண்டு அமைப்புகளின் பணிகளை பின்வருமாறு பாராட்டினார்:

"இந்திய அரசியல் அமைப்பில் உள்ள ஊழல்களை தேசிய காங்கிரஸ் சுட்டிக் காட்டி வந்தது; சமூக அமைப்பில் உள்ள ஊழல்களை சீர்திருத்த மாநாடு விளக்கி வந்தது. கொஞ்ச காலத்துக்கு தேசிய காங்கிரசும், சீர்திருத்த மாநாடும் தேச முன்னேற்ற முயற்சியின் இரு பிரிவுகளாக மதிக்கப்பட்டு வந்தன. அவ்விரண்டு ஸ்தாபனங்களின் மாநாடுகளும் ஒரே இடத்தில் அடுத்தடுத்து நடைபெற்று வந்தன" (பக். 25; சாதியை ஒழிக்க வழி; குடியரசு பதிப்பகம்– மூன்றாம் பதிப்பு; 1960).

காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான பி.அனந்தா சாருலு ஓர் அறிக்கையில் பின்வரும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளைக் குறிப்பிட்டார். இளவயது திருமணத்திற்கு எதிர்ப்பு, விதவை மறுமணத்திற்கு ஆதரவு, அந்நிய தேச யாத்திரை செல்ல தனி நபர் உரிமை, சொத்தில் பெண்களுக்கு உரிமை, பெண் கல்வி.

காங்கிரஸ் நடைபெற்ற இடத்திலேயே, தேசிய சமூக மாநாடும் நடைபெற்று வந்த வழக்கம் எட்டு ஆண்டுகள் வரையில்தான் நீடித்தது.

## திலகரின் எதிர்ப்பு:

அரசியலில் தீவிரவாதியாகப் புகழ்பெற்ற பாலகங்காதர திலகர் சமூக சீர்திருத்தத்தில் மிதவாதியாகத்தான் இருந்தார். 1895-ல் பூனாவில் காங்கிரஸ் நடைபெற்ற பொழுது, தொடர்ந்து தேசிய மாநாடு நடைபெற திலகர் அனுமதிக்க மறுத்தார். திலகரின் ஒத்துழையாமைப் போக்கை ஜி.சுப்பிரமணிய ஐயர் கண்டனம் செய்தார். அக்டோபர் 26, 1895-ல் இந்து இதழில், The poona opposition to the social conference" எனும் தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதினார். அதன் இறுதியில் ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதியுள்ளதாவது:

"We are too well aware of the commonsense of the Poona people to believe that by with holding the congress pavilion from the Social Reform people they mean to crush the latter movement. The idea is too absurd. On the otherhand the contemplated action of the Poona Politicians will only add strength to that movement which many people consider as more important than the congress itself".

காங்கிரசைவிட தேசிய சமூக மாநாட்டையே மக்கள் முக்கியமெனக் கருதுவார்கள் என ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

## மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேஷன்

9.11.1892-ல் இந்த அசோசியேசனில் முதல் அமைப்புக் கூட்டம் சீர்திருத்தச் செம்மல் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் வீட்டில் நடைபெற்றது. தொடக்கத்தில் எட்டு உறுப்பினர்களையும், ஓர் ஆதரவாளரையும் கொண்டது இந்த சமூக சீர்திருத்த அமைப்பு. ஓர் ஆண்டிற்குள் நாற்பத்தைந்து உறுப்பினர்களையும் பதின்மூன்று ஆதரவாளர்களையும் பெற்று வளர்ந்தது. வீரேசலிங்கம்

பந்துலு, சங்கரன் நாயர், நீதிபதி எஸ்.சுப்பிரமணிய ஐயர் இந்த அமைப்பிற்கு பெருமை சேர்த்தனர்.

**இந்தச் சங்கத்தின் கொள்கைகள் வருமாறு:**

*1. பெண்கல்வி, திருமணச் சீர்திருத்தம், குடும்பத்தில் சீர்திருத்தம், பழக்க வழக்கங்களில் சீர்திருத்தம், சாதிகளை ஒன்றாக்குதல்.*

*சீர்திருத்தச் செம்மல் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் அனைத்தையும் இந்த அமைப்பு கொண்டதாக கூற முடியாது. இந்தச் சங்கத்தின் வழிமுறைகளாவன: சொற்பொழிவுகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், கிளை அமைப்புகள் நிறுவுதல், சீர்திருத்தத்தை செயலில் காட்டுபவர்களுக்கு உதவுதல், சொந்த வாழ்க்கையில் முன்னுதாரணமாய் விளங்குதல், சங்கத்தின் தலைமை அலுவலகம், 18, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணியில் இருந்தது. செப்டம்பர் 1, 1890–ல் இந்தியன் சோஷல் ரிபார்மரின் முதல் இதழ், இந்தச் சங்கத்தின் பிரசார ஏடாக வெளிவந்தது. இதன் ஆசிரியர் திரு.காமாட்சி நடராசன், பி.ஏ., முதல் இதழில் ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதிய* "Trumphet Blast on behalf of social reform" *எனும் கட்டுரையில் இந்தியாவின் வீழ்ச்சியும், பத்திரிகையின் குறிக்கோளும் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

"Thousands of years ago the Aryan race of India raised itself to a pedestal of moral and material pre-eminance from which it looked down upon other races and condescended to impart to them a part of its own wisdom and knowledge. But soon it was hurled down from that position. It developed institutions and customs inconsistent with national solidarity and power; the race became degenarate and emasculated priests and idlers got the upper hand, the ignorance seized all, and

then nation was content with the lot of slaves first to its own priestly class and then to successsive foreign invaders. For nearly two thousand years the Hindu nation has remained in this inglorious serfdom. First it surrendered its moral liberty by handing itself hand cuffed and chained to priestly tyranny: It then surrendered its political indipendence... of all the countries in the world India is the only one which distinguished by its caste distinctions, by its marriage customs, by the ignorance of its woman, by the prohibition it has imposed on foreign travel, and by the exctraordinary absence of national homogeneity, of national interest and self respect... ... the battle of social reform will come to be fought with increased strength and in a more systematic manners. To help in the fighting of the battle is the object of this journal. it will wage uncmpromising war against all superstition and social abuses. It will seek to unite the educated and intelligent Indians to greater exertion in the sphere of Social Reform".

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ய இனம், அறம், பொருள் றைகளில் சிறப்புற்றிருந்தது. அந்த உயரத்தில் அமர்ந்து பிற இனங்களுக்கு தமது அறிவாற்றல் உபதேசம் செய்தது. ஆனால், மிக விரைவிலேயே சீரழித்து! குரு பீடத்தில் இருந்து வீழ்ந்தது. தேச ஒற்றுமைக்கும் வலிமைக்கும் பொருந்தாத நிறுவனங்களை பழக்க வழக்கங்களை வளர்த்தெடுத்தது. இனச் சிறப்புகள் ஒழிந்தன.

ஆண்மையற்ற புரோகிதர்கள், சோம்பேறிகள் காயங்கள் ஓங்கின. அறியாமை அனைத்தையும் வசப்படுத்தியது. ஏராளமான அடிமைகளைக் கொண்ட தேசமாகியது. முதலில் புரோகித வர்க்கத்திற்கு அடிமைப்பட்டது. அடுத்து தொடர்ந்தாற்போன்று வந்த அந்நிய

படையெடுப்பாளர்களுக்கு அடிமைப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு இந்து தேசம் கேவலமான அடிமைத்தனத்தில் ஆழ்ந்தது. முதலில் தனது தார்மீக சுதந்திரத்தை இழந்தது. கை விலங்கிடப்பெற்று புரோகிதக் கொடுங்கோன்மையுடன் பிணைக்கப்பெற்றது. அடுத்து அரசியல் உரிமையை பறிகொடுத்தது. உலக நாடுகளில் இந்தயாவில் மட்டுமே சாதி வேறுபாடுகள் நிலவுகின்றன. திருமண வழக்கங்கள் பெண்களின் அறியாமை, வெளிநாடுகளுக்குச் செல்லத் தடைகள், தேசிய நலன்கள், ஒற்றும, சுயமரியாதை ஆகியவற்றை இழத்தல், இன்ன பிறயாவும் சீரழிவிற்கு காரணங்களாயின. கூடுதலான வலிமையுடன், திட்டமிட்ட வழிமுறைகளில் ச்மூகசீர்திருத்தப் போராட்டத்தை நிகழத்த வேண்டும். இதுவே இந்தப் பத்திரிகையின் குறிக்கோள். அனைத்து மூடநம்பிக்கைகளையு சமூக இழிவுகளையும் சமரசமற்று போரிட்டு ஒழிக்கவேண்டும்."

இந்தியன் சோஷல் ரிபார்மரின் ஆசிரியர் காமாட்சி நடராஜன், ஜி.சுப்பிரமணிய ஐயரின் தலைமையில் இதழியலில் பயிற்சி பெற்றவர். இந்தியன் சோஷல் ரிபார்மர் 1900 முதல் பம்பாயில் இருந்து காமாட்சி நடராசன் ஆசிரியர் பொறுப்பில் வெளிவரத் தொடங்கியது. "அரசியலில் மிதவாதம், சமூக சீர்திருத்தத்தில் தீவிரவாதம்" என்பது பம்பாயில் இருந்து வெளிவரத் தொடங்கிய இந்திய சோஷல் ரிபார்மரின் கொள்கையாக அமைந்தது.

## ஜி.சுப்பிரமணிய ஐயரின் சிறப்புச் சொற்பொழிவு

மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேசனின் ஐந்தாம் ஆண்டு விழா டிசம்பர் 22, 1897-ல் சென்னையில் ஆந்திர தேசத்து புகழ் பூத்த சமூக

சீர்திருத்த மாவீரர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலுவின் தலைமையில் நடைபெற்றது. ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "Principles of social Reform" எனும் தலைப்பில் அரிய ஆய்வுச் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இங்கு ஒரு செய்தியை மிக்க வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆந்திர வீரர் வீரேசலிங்கம் பந்துலு மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேசனின் தலைவராக இருந்திருக்கிறார். அகில இந்திய அளவில் திட்டமிடப் பட்ட ஒரு மாநாட்டில் கலந்து கொள்ள (ஆனால் இவர் அந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை). ஜி.சுப்பிரமணிய ஐயரின் இந்தச் சிறப்புச் சொற்பொழிவு இவர் தலைமையில் நடைபெற்றுள்ளது; இந்த அமைப்பின் முதற் கூட்டமும் ஜி.சுப்பிரமணிய ஐயரின் வீட்டில் நிகழ்ந்தது. வீரேசலிங்கம் பாடுபட்ட விதவை மறுமண இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஜி.சுப்பிரமணிய ஐயர் தமது 12 வயது புதல்விக்கும் விதவை மறுமணம் செய்வித்தார். இவ்வளவிருந்தும் வீரேசலிங்கம் பந்துலுவின் சுய சரிதையிலோ, நாட்குறிப்புகளிலோ, கட்டுரைகளிலோ ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றிய ஒரு சொல் கூட, கூறப்படாதது வியப்பாய் இருக்கிறது. வீரேசலிங்கம் பந்துலு, சென்னை பிரம்ம சமாஜத்தின் தலைவர்களில் ஒருவராவார். தமது சுயசரிதையில் அவருடைய சமூக சீர்திருத்த இயக்கத்திற்கு தமிழ் மக்களிடம் இருந்து ஆதரவில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

"Principles of Social Reform" எனும் சிறப்புச் சொற்பொழிவில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்துகள் வருமாறு:

1. The stage of discussion is not passed.
2. The Policy of leave alone

3. No right to vegetate.
4. Have we then decayed
5. Social efficiency
6. The clue of reform activity
7. Our difficulties are special and more formidable.
8. The penalty should be paid
9. Cast as the basis of the social system must be changed.
10. The power of custom as a standard of conduct should be weakened.
11. Caste should be weakened by equality and customs by reason and sympathy.
12. Elevation of women.
13. The Hindu woman will lose much of her domesticity
14. Hindu woman should be awakened to the wider interests to their country.
15. Women should receive the highest and most liberal education possible.
16. The paramount object is to develop social qualities
17. Patriotism as a phase of social feeling.
18. The momentum must give from the examples.
19. A high average of social feeling helps these Greatmen.
20. Two powerful agencies - the state and the church.

ஜி.சுப்பிரமணிய ஐயரிடம் பத்திரிகைத் துறையில் பயிற்சி பெற்ற திரு.ஒய்.சிந்தாமணி அவர்கள் தொகுத்து

வெளியிட்ட "Indian Social Reform" எனும் நூலில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சிறப்புச் சொற்பொழிவு ஒளி வீசுகின்றது.

## மெட்ராஸ் இந்து சோஷல் ரிபார்ம் அசோசியேசனும் பிராமணர்-பிராமணரல்லாதார் பிரச்னையும்

மெட்ராஸ் இந்து சோஷல் ரிபார்ம் அசோசியேசனின் வெள்ளி விழா டிசம்பர் 15, 1918-ல் சென்னையில் கொண்டாடப்பட்டது. விழாவின் நிகழ்ச்சி முழுவதும் பிராமணரல்லாதார் இயக்கத்தின் பிரசார ஏடான ஜஸ்டிஸ் பத்திரிகையில் வெளி வந்தது குறிப்பிடத் தக்கதாகும். இந்த விழா பற்றிய விமர்சனத்தை எழுதிய இந்தியன் சோஷல் ரிபார்மரும் 'பிராமணர்-பிராமண ரல்லாதார்' பிரச்னையைப் பற்றி பின்வருமாறு எழுதியது:

"In the first place, the founders had plenty enthusiasm and in the next place, there was among them a complete absence of the estrangement between Brahmin and Non-Brahmin which is now such a sad feature of Madras public life. We are sure that if the social reform movement had not been thrust into the back ground in the Madras Presidensy by a combination of Thesophists and orthodox persons the political life of the province would have developed on sounder and more harmoninous lines than it has done. The Non-Brahmins have achieved substantial victories. They have opened the eyes of the Brahmin communities; that was the purpose of the Non-Brahmin movement. The Brahmins have realised they could not do anything unless they carried the Non-Brahmin communities with them". (Page.220-221, Indian Social Reformer, December 22, 1918).

மேலேயுள்ள "இந்தியன் சோஷல் ரிபார்மர்" விமர்சனத்தில் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கது.

"தியோசோபிஸ்டுகளும், வைதிகர்களும், மாகாண அரசியல் வாழக்கையை இணக்கமானச் சூழலை, முன்பிருந்ததைக் காட்டிலும் வளர்த்தெடுக்கலாம். பிராமணர் அல்லாதார் போதிய அளவில்லாத வெற்றிகளைப் பெற்றுவிட்டனர். பிராமணர் சமூகத்தின் கண்களைத் திறந்துவிட்டனர். இதுவே பிராமண ரல்லாதார் இயக்கத்தின் குறிக்கோளும் ஆகும். பிராமணர்கள் பிராமணரல்லாதார் சமூகங்கலை அணைத்துச் செல்லாவிட்டால் அவர்களால் எதையும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து வீட்டார்கள்.

## ஜி.சுப்பிரமணிய ஐயருக்குக் கிடைத்த ஒரு பாராட்டு:

"ஆரியர்-திராவிடர்", "பிராமணர் - பிராமண ரல்லாதார்" எனும் நோக்குடைய ஒரு நூலின் ஆசிரியர் பாராட்டும் ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு அந்த நாளில் கிடைத்தது. "இராமாயண உள்ளுறைப் பொருளும், தென்னிந்திய சாதி வரலாறும்" எனும் நூலில் ராவ்சாஹிப் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பாராட்டி எழுதியதாவது:

"பிராமணருக்குள்ளே சாதி விஷயமாகச் சற்றேறக் குறைய யான் கூறிய கொள்கைகளையுடையார் பலருளர். அத்தகையோருள் முன் 'ஹிந்து' பத்திரிகைக்கும், இப்போது சுதேசமித்திரன் பத்திரிகைக்கும் பத்திரிகை ஆசிரியராகிய ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயரும், ஓர் உயர்ந்த ஆங்கில வித்தியாசாலைப் பிரதம போதகாசிரியராகிய டாக்டர் பந்தர்காரும், காலஞ்சென்ற பாம்பே ஹைகோர்ட்டு நீதிபதி ரானடேயும் சேர்ந்தவர்கள்".

முதலில் வேண்டுவது அரசியல் சீர்திருத்தமா?, சமூக சீர்திருத்தமா?, சமூக சீர்திருத்தத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் அணுகுமுறை; சமூக சீர்திருத்தத்தில் அரசு தலையீடு, ஜி.சுப்பிரமணிய ஐயர் பார்வையில் சமூக அமைப்பும்-சாதி பாகுபாடும்; சாதிக்கொரு நீதியா?;

தீண்டாமைக்கு கடும் எதிர்ப்பு, கிறிஸ்துவ மிஷினரிகள்; விதவை மறுமணம்; இந்துக் கூட்டுக் குடும்ப அமைப்பிற்கு எதிர்ப்பு; முதலான பல தலைப்புகளில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை ஆய்விற்கெடுத்துக் கொள்ளலாம்.

## அரசியல் சீர்திருத்தமா ? சமூக சீர்திருத்தமா ?

1893–ல் ஹ்யூம் சென்னைக்கு வந்த சமயம், மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேஷன் உறுப்பினர்கள் ஜி.சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஹ்யூமை பேட்டி கண்டனர். இந்தப் பேட்டியின் விவரம் 'இந்தியன் சோஷல் ரிபார்மர்" நவம்பர் 1893–ம் இதழில் வெளிவந்துள்ளது.

பேட்டியில் அரசியல் சீர்திருத்தமாயினும், சமூக சீர்திருத்தமாயினும் அதனதன் வழியில் நிகழவேண்டும்.. இரண்டையும் ஒன்றாகக் கலக்கக்கூடாது என்று ஹ்யூம் கூறினார். ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "அரசியல் சீர்திருத்தவாதிகள், சமூக சீர்திருத்தவாதிகளில் போதிய பரிவு காட்டுவதில்லை". எனக் குறிப்பிட்டார். ஹ்யூம் இதற்கு அளித்த பதிலாவது: "அரசியல் சீர்திருத்தத்திற்கு சற்று முன்னிடம் அளித்து, சமூகசீர்திருத்தத்திற்கு வழிவிட வேண்டும் என்பது என் கருத்து. சான்றாக, இங்கிலாந்தில் வாக்குரிமைச் சீர்திருத்தம் பெற்றதன் பயனாக சமூக முன்னேற்றத்தில் வியக்கத்தக்க மாறுதல்கள் நிகழ்ந்தன."

பேட்டியின் முடிவில் ஜி.சுப்பிரமணிய ஐயர் கேட்ட கேள்வியும் ஹ்யூம் அளித்த பதிலும் பின்வருமாறு:

**G.S:** "So, political reformers do help the social reform move ment."

**Hume:** "A great many of them, I know many never take the other line because they believe that political reform,

is the first step. people have to be raised in their own estimation you have now got set of slaves as it were and to work social reform you must put a little pride into them".

1893–ல் நடந்த இந்தச் சந்திப்பிற்குப் பின், 1895–ல் திலகர் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு காட்டிய எதிர்ப்பிற்கு பதிலளித்த பொழுது 'சமூக மாநாடு', காங்கிரஸ் மாநாட்டைவிடச் சிறந்தது எனக் குறிப்பிட்டதையும் நினைவுகூர வேண்டும். இந்தப் பிரச்னை இன்னமும் தீரவில்லை. வெவ்வேறு வடிவங்களில் தோன்றுகின்றன. இவற்றுள் ஒன்று; முதலில் வேண்டுவது "Class Struggle"எனும் வருக்கம் போராட்டமா? அல்லது "Cast Struggle" எனும் சாதி எதிர்ப்புப் போராட்டமா? ஆக, போராட்டம் தொடருகின்றது.

## ஜி.சுப்பிரமணிய ஐயரின் அணுகுமுறை:

சமூக சீர்திருத்தப் பிரசாரத்தில், தேசிய நோக்குடன் பண்டைய பாரத கலை–இலக்கிய–பண்பாட்டில் சிறந்தவற்றின் மீது பரிவு கொள்ள வேண்டும் எனும் ஓர் அணுகுமுறை வற்புறுத்தப்பட்டது. ஆனால், ஜி.சுப்பிரமணிய ஐயருக்கு இதில் ஆர்வம் இல்லை; ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தமது பிரசாரத்தில் ஸ்பினோசா (Spinoza) டி.எச்.க்ரீன் (T.H.Green) முதலான பகுத்தறிவாளர்களை ஆதாரம் காட்டுவார்; இவருடைய மூத்த நண்பர் ரகுநாதராவ் பண்டைய இந்து சமய நூல்களில் சமூக சீர்திருத்தப் பிரசாரத்திற்கு சான்றுகளை எடுப்பார். சமூக சீர்திருத்தத்தின் கோட்பாடுகள்" (Principles of Social Reform) எனும் சிறப்புச் சொற்பொழிவில் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதாவது:

"Ramayana, Mahabharatham and Srimat Bhaghavatam afford excellent training in a way, but they cannot be the mental

nourishment which God and Nature have provided for the human race for all time and under all conditions" (P. 391 Indian Social Reform, Editor C.V. Chintamani)·

*ஜி.ஐப்பிரமணிய ஐயரை பற்றிய பின்வரும் விமர்சனமும், அவருடைய அணுகு முறைப் பற்றி அறிய ஒளி பாய்ச்சுகிறது:*

"G.Subramania Iyer was a product or western education and culture and his whole attitude to Indian life was colcured by the materialist approach and that explained his intense devotion to reform Hindu society. He did not agree that the past exhausted all our greatness" (P. 132-133; A Hundred yeas of the Hindu)

*"பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக சாதிக் கொடுங் கோன்மை உடைத்தெரியப்பட்டது: கொள்கையளவில் பிராமணனுக்கும்–பறையனுக்கும் சம வாய்ப்புகள் தரப் பட்டுள்ளன. எந்த இந்தியனும் அவன் பிறப்பு காரணமாக குறையுள்ளவனாகக் கருதப்படவில்லை". இவ்வாறு ஜி.சுப்பிரமணய ஐயர் சாற்றியுள்ளார்.*

*மேலும் பிறிதொரிடத்தில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் பின்வரும் போர்க்குரலைக் கேட்கிறோம்.*

"The Great principle of Social relation in these qays is a perfect equality of footing to all. The history of the Modern world is mostly the history of the struggle.

## சமூக சீர்திருத்தத்தில் அரசு தலையீடு:

*ஜனவரி 31, 1890–ல் சென்னையில் திவான் பகதூர் ரகுநாதராவ் தலைமையில் நடைபெற்ற மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேஷன் கூட்டத்தில் "சமூக விஷயங்களில் அரசு தலையீடு"* (State Interference in So-

cial matters) எனும் தலைப்பில் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மிக விரிவான ஆய்வுச் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். எடுத்த எடுப்பிலேயே, "I am decidedly of opinion that the state must and should interfere in some precautions." எனக் குறிப்பிட்டார். சொற்பொழிவின் இறுதியில் அரசு தலையீடு கூடாது எனக் கூறும் ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கருத்தை விமர்சனம் செய்து, இந்தியச் சூழலில் அரசு தலையீடு வேண்டும் என வலியுறுத்தினார். ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறுகிறார்: "The prejudices against state interference has been strengthened by the writings of thinkers like Herbert Spencer. His objections, however, have reference to a society vigorous and self-working. But the Hindu Society is like a sick man requiring external stimulants to keep him up".

1892–ல் நாக்பூரில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், சமூக சீத்திருத்தம் திணிக்கப்படக்கூடாது, மக்கள் விழிப்புற்று அவர்களாகவே முன்வந்து சமூக சீர்திருத்தம் காண வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை மறுத்து ஜி.சுப்பிரமணிய ஐயர் இந்து பத்திரிகையில் எழுதிய பொழுது, "அந்த நாள் மிகத்தொலைவில் உள்ளது; அதற்குள் எவ்வளவோ தீமைகள் சமூகத்தைப் பாதிக்கும். நடைமுறைக்குப் பயன்படும் அளவில், மக்களின் சம்மதத்தை எதிர்பார்த்து சட்டமியற்றுவதே பரிகாரமாகும்" என்பதை எடுத்துரைத்தார். 1892–ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறிய கருத்து இன்றைய நிலைமைக்கும் பொருந்துவதேயாகும்.

## சமூக அமைப்பும் சாதி பாகுபாடுகளும்

"சாதிபாகுபாடு, சமூக அமைப்பின் ஆதாரம் என்பது மாற்றப்பட வேண்டும். சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகம் உண்மையிலேயே சமத்துவம் அற்ற

சமூகமாகும். செயற்கையான மதிப்புகளைப் பெற்ற பிறப்பு வழிபட்டவை, பெருந்தடைகளாகும். மனித ஆற்றலை மலரவிடாமல் தடுக்கின்றது" என சமூக சீர்திருத்தத்தின் கோட்பாடுகள் எனும் ஆய்வுரையில் மொழிந்துள்ளார், ஜி.சுப்பிரமணிய ஐயர்.

"The system of caste is an economic inequality as it is observed at present. It has made us paupers and it has brought our people under foreign domination. It is a wonder so few people seem to realise the most irrational and unnatural system". (P. 76; A Hundred years of the Hindu).

மே, 1896–ல் 'இந்து'வில் எழுதிய பொழுதும் பொருளாதார சமத்துவமின்மைக்கும், சாதிக்கும் உள்ள 'தொடர்பை' பின்வருமாறு விளக்கி உள்ளார் ஜி.சுப்பிரமணிய ஐயர்:

"சாதி ஒழிப்பு என்பது இமயமலைய்யைப் புரட்டித் தள்ளுவதற்கு ஒப்பாகும். இதில் சோர்விற்கு இடமில்லை" எனக்கூறி பின்வரும் சூளுரையையும் மேற்கொள்ளத் தூண்டுகின்றார் ஜி.சுபிரமணிய ஐயர்.

"சாதி அசைக்க முடியாத இமாலயமலையைப் போன்றது; வலிமையற்ற முயற்சிகளால் சாதியை ஒழிக்கமுடியாது எப்படியிருந்தாலும், இந்த 'இமயமலை' ஒழிக்கப்பட வேண்டும்".

## சாதிக்கொரு நீதியா ?

'சட்ட நிரூபணத்தில் ஓர் விநோதம்' எனும் தலைப்பில் 11.6.1898–ல் சுதேசமித்திரனில், ஜி.சுப்பிரமணிய ஐயர் ஒரு தலையங்கம் எழுதினார். இதில் சட்டத்தில் சாதிக்கொரு நீதி பேசும் கொடுமை நிறுத்தப்பட வேண்டும் என சென்னை அரசாங்கத்திடம் முறையிட்டார்.

"எவ்விதமான கொடூர கொலை செய்த போதிலும் பிராமணர்களும், ஸ்திரிகளும், சட்டத்தில் மிக்க கொடூர

தண்டனையாகிய தூக்கில் வாங்கும் தண்டனை விதிக்கப்படமாட்டாது" எனும் ஒரு சட்டத்தை திருவாங்கூரில் தாணுப்பிள்ளை என்னும் தலைமைச் செயலாளர் கொண்டு வந்தார். இதை எதிர்த்து, ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதில் ஒரு பகுதி வருமாறு:

கொலை செய்யும் இருவருள் ஒருவன் ஒரு ஜாதியான படியினால் ஒரு வித தண்டனையும், மற்றொருவன் வேறு ஜாதியானபடியினால் வேறு தண்டனையும் விதிப்பது மிகவும் கொடூரம்... இவ்வித கொடூர மூட பக்தியை திருவாங்கூர் கவர்ன்மெண்ட் உடைத்தாயிருந்த போதிலும் இவைகளை எல்லாம் இச்சென்னை கவர்ன்மெண்டார் அவர்களிடத்திலிருந்து நீக்கிவிடுவார்கள் என்று நம்புகிறோம்."

## தீண்டாமைக்கு எதிர்ப்பு

சாதிபாகுபாட்டின் ஆணிவேரான தீண்டாமையை எதிர்த்து சத்தியாவேச முழக்கத்தைச் செய்தவர், ஜி.சுப்பிரமணிய ஐயர்.

13.1.1893–ல் சென்னை "யங்மென் அசோசியேசனில் ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "Is the Social conditions of the Paraish satiscatory?" எனும் தலைப்பில் தீண்டாமையை எதிர்த்து எரிமலையெனப் பேசினார்.

"இன்னல்களும், அவலங்களும் நிறைந்த இரக்கத்தக்க நிலையில் பறையர்களை வைத்திருப்பது, இந்து சமூக அமைப்பின் களங்கமாகும்; இந்து நாகரிகத்தின் துடைத்தெறிய முடியாத அவமானமும் ஆகும். காலந்தோறும் தொடரும் கொடுங்கோன்மை அவர்களது முன்னேற வேண்டும் எனும் பேராவலைக் கொன்று விடுகிறது. அவர்களுக்குப் பரிவு காட்டவோ, துணைபுரியவோ எவரும் இல்லை. இந்தச் சூழ்நிலையில்

அவர்கள் தங்கள் முயற்சிகளால் முன்னேற வேண்டும் எனக் கோருவது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போலாகும். பிராமணர்களுக்குள்ளவாறு அவர்களுக்கும் செயல் திறம், உணர்ச்சிகள், உலகத்தில் உள்ள உத்தியோகங்களும், ஊதியங்களும் பிராமணர்களின் ஏகபோகமல்ல என்பதை ஒப்புக் கொள்ளாத வரையில், சகோதரத்துவம், நல்லிணக்கம் வளராத வரையில், இந்தியாவின் புது வாழ்வு பற்றிய நம்பிக்கைக்கு வழியில்லை."

தீண்டாமை எதிர்ப்பின் பேரில் உள்ள வரலாற்று ஆவணங்களில் பதிவாக வேண்டிய ஜி.சுப்பிரமணிய ஐயரின் இதயக் குமுறல் இது.

இந்து மதத்தில் தீண்டாதார்கள் தொடர்ந்து இருந்தாலும் அவர்கள் முன்னேறுவார்கள் என ஒரு நாளும் நம்ப முடியாது. அவர்களை கிறிஸ்துவ மிஷனரி களிடம் ஒப்படைத்துவிடக் கோரும் பரிந்துரையை வரவேற்றார் ஜி.சுப்பிரமணிய ஐயர். ஆனால் மனக் கொதிப்பு அடங்கிய நிலையில் தீண்டாதார்கள் இந்து சமயத்தில் இருந்து கொண்டே மிஷனரிகளால் தவறாக வழிப்படுத்த இடமளிக்காமல் பொறுமையுடனும், தைரியத்துடனும் சாதி இந்துக்களை (Caste Hindus) எதிர்த்துப் போராட வேண்டும் எனக் கூறினார் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

அண்மைக் காலத்தில் 'மீனாட்சிபுர மத மாற்றம்' பொறுப்பற்று உறக்கத்தில் ஆழ்ந்தோரையெல்லாம் உலுக்கி எழுப்பியுள்ளது. "உள்ளிருந்து கொண்டே போராட வேண்டும்" என 1893-ல் ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதை மீனாட்சிபுரம், இனியும் இயலாது என அறிவித்து விட்டது. மதவாதிகள் எவ்வளவு திரிபு வாதங்களை அடுக்கிக் கொண்டே போனாலும், உண்மை இதுதான். 'தீண்டாதார்' எனப்படுவோர் பலர் சாதிக்

கொடுமைகளைத் தொடர்ந்து தாங்க மறுத்து இந்துமதத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

**பண்டித அயோத்திதாஸ்**

"தீண்டாதார்களுக்கு' இந்து மதத்தில் இடமில்லை" என டாக்டர் அம்பேத்கர் இறுதி முடிவிற்கு வந்தார். இவருக்கு முன்பே தமிழகத்தில் பண்டித சு.அயோத்திதாஸ் தீண்டாதாருக்குப் புகலிடம் 'புத்தமதம்' என்று சாற்றினார். "சென்னை சாக்கைய பௌத்த சங்கஸ்தாபகர்", இவர். "ஒரு பைசா தமிழன்" (1907) எனும் இதழின் ஆசிரியர். 'The first Indian Buddhist Revivalist" எனப் போற்றப் பட்டவர். 'பூர்வத் தமிழொளியாம் புத்தரது ஆதிவேதம்' எனும் நூலை 1912-ல் வெளியிட்டார்.

"ஒரு பைசா தமிழன்" இதழ்களைப் பார்ப்போர், பண்டித க.அயோத்திதாஸ் அவர்களின் அறிவாற்றலைக் கண்டு வியக்காமல் இரார். ஒரு பைசா தமிழனின் முதல் இதழ் ஜூன் 19, 1907 புதன்கிழமையன்று வெளிவந்தது. ஜி.சு. அவர்கள் தமிழ்மொழியில் அனைத்தையும் விளக்க மேற்கொண்ட துன்பங்களையும், அவர்கூட சுதேசமித்திரன் வெள்ளிவிழாவிற்கு ஜூபிலி என்ற பெயரிட்டதை வருத்தமுடன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"... ...நமது சுதேசமித்திரன் பத்திராதிபர் பட்ட கஷ்டங்கள் யாவையும் சுதேச பாஷையில் தெள்ளற விளக்கி அஃதைக் கொண்டாடும் கோஷத்திற்கு சுதேச மொழயிலோர் சிறப்புப் பெயரளிக்காது பொருளற்ற பரதேசிப் பெயரையளித்ததே மோதுங்கவலையாம்". (பக்., ஒரு பைசாத் தமிழன், ஜனவரி 22, 1908) "திராவிடர்களைப் பற்றி மார்லி பிரபு எனும் தலைப்பில் மார்லி பிரபு இந்தியாவில், இந்து, இஸ்லாமியர் எனும்

இரு இனங்களே இருப்பதாகக் கருதி இலட்சக்கணக்கான திராவிடர்களை அலட்சியம் செய்து விட்டார். திராவிடர்கள் இந்துக்களால் ஒடுக்கப்பட்டு, 'பறையர்' என மரியாதை குறைவாக அழைக்கப்படுகின்றனர்" இவ்வாறு பண்டித க.அயோத்திதாஸ் மார்ச் 3, 1908–ஆம் இதழில் எழுதியுள்ளார். (பக். 160)

பண்டித க. அயோத்திதாஸ் 1908–லேயே தீண்டாமை ஒழிப்பிற்கு பௌத்த மத மாற்றமே கருவி எனத் தேர்ந்தார். தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தில் இந்தியாவில், பம்பாய் மாநிலத்தில், இந்து சமூக அமைப்பின் மேல் தட்டு வர்க்கத்தை கடுமையாகச் சாடியதோடல்லாமல், ஆக்க வழியிலும் பாடுபட்டவர், மகாத்மா ஜோதிர்பாபூலே என்பவர். இவரும் இங்கு நினைவு கூரத்தக்கவர். இவரைப்பற்றி மேலும் விவரமறிய பார்க்கவும 'இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சயும் (1973) – பெ.சு.மணி.

## கிறிஸ்துவ மிஷனரிகள் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர்

"சீர்திருத்த விஷயங்களில் கிறிஸ்துவப் பாதிரிகளோடு சேர்ந்திருக்கிறதாக ஜனங்களுக்கு ஒரு அபிப்பிராய மிருக்கிறது போலும். அப்பேர்ப்பட்ட அபிப்பிராயத்திற்கு இடமில்லாமற் செய்யவேண்டியது அச்சங்கத்தார் கடமை" என்னும், "நெய்வேலி நண்பன்" என்பவர் எழுதிய கடிதம் சுதேசமித்திரனில் (9.6.1893) வெளிவந்தது. இந்தக் கடிதத்தில் "சங்கம்" எனக்குறிப்பிடப்பட்டது, "மெட்ராஸ் ஹிந்து சோஷல் ரிபார்ம் அசோசியேசன்" ஆகும். இதற்குப் பதில் அளித்து சுதேசமித்திரன் எழுதியதாவது:

"மதவிஷயத்தில் பாதிரிகள் நமக்கு வைரிகள்தான்; அதனால் நமக்குள் இருக்கப்பட்ட சில கெடுதலான விஷயங்களை நம்மோடு அவர்கள் சேர்ந்து நீக்கமுயல்வது தோஷமா? அது ஒரு பேருதவிதானே!"

மார்ச் 11, 1897-ல் சென்னையில் ஒரு பாதிரியாரின் தலைமையில் பேசியபொழுது, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக கிறிஸ்துவ மிஷனரிகள் பாடு படுவதைக் கண்டு மகிழ்வதாகக் குறிப்பிட்டார்.

## அரசு-மதபீடம்

"சமூக சீர்திருத்தத்தின் கோட்பாடுகள்" எனும் பேருரையின் இறுதியில் ஜி.சுப்பிரமணிய ஐயர், அரசு-மதபீடம் எனும் இரு அமைப்புகள் சமூக சீர்திருத்த இயக்கத்திற்கு வழிகாட்டும் வகையில் இந்தியாவில் இல்லையே என்பதை பின்வருமாறு எடுத்துக்காட்டி வருத்தமுற்றார் ஜி.சுப்பிரமணிய ஐயர்.

"மற்ற நாடுகளில் சமூக முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்த இரு அமைப்புகள் நமது நாட்டில் இல்லை. அரசு (State), மதபீடம் (Church) எனும் அந்த இரு அமைப்புகளில் ஒன்றான ,அரசு, அந்நிய அரசாகவும், இந்து சமூக பிரச்னைகளில் நன்கு தேர்ச்சியற்றும், வழிகாட்டும் சக்தியற்றும் இருக்கிறது. இந்து ராஜதந்திரிகளைப் போல, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து வைதிகர்களின் எதிர்ப்பைக் கண்டு மருள்வதை குறைத்துக் கொண்டால் சமூக சீர்திருத்தச் சக்திகளுக்கு வேண்டும் ஆதரவு சிறுகச் சிறுக வந்தாலும் அதுவே பெரும் பலமாகக் கருதப்படும்".

"மதபீடத்தைப் பொறுத்த வரையில் நாம் உதவியற்ற நிலையில் இருக்கிறோம். கிறிஸ்துவ நாடுகளில், "சர்ச்" என்ற சக்தி வாய்ந்த அமைப்பைப் போன்று நம்மிடையே ஒன்றுமில்லை. நமது முன்னோர்கள், தங்களது மதத்திற்கு ஒருமுகப்படுத்தப் பெற்ற அமைப்பை அளிக்க கவனம் செலுத்தவில்லை. இந்தப் புறக்கணிப்புதான் நமது தற்கால சீரழிவிற்கும், பலஹீனத்திற்கும் உரிய தண்டனையைக்

கொடுத்துள்ளது. நமது மடாதிபதிகளும், புரோகிதர்களும் ஊழல் மிக்கவர்களாய், அறியாமையிலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கியிருக்கிறார்கள். அவர்களிடம் இருப்பதெல்லாம் ஆரோக்கியமான, பகுத்தறிவான சீர்திருத்தத்திற்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டுவது ஒன்றே ஆகும்.”

“ஒரு காலத்தில் ஐரோப்பாவில் ஒரு போப்பாண்டவர் இருக்க, இரண்டாம் போப்பாண்டவரை ஏற்படுத்தியது போல, இங்கும் சுவாமி விவேகானந்தரையோ அல்லது அவரையொத்த ஓர் ஆன்மிக வீரரையோ இரண்டாம் சங்கராச்சாரியர்ராக பிரகடனப்படுத்த இங்குள்ள சீர்திருத்தவாதிகளால் இயலாதா?”

இங்கு ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சங்கராச் சாரியார்–விவேகனந்தரைக் குறிப்பிட்டதின் நுட்பத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். சமய உணர்வும், சமூக உணர்வும் கொண்ட மதத்லைவரே, தற்காலத் தேவை என ஜி.சுப்பிரமணிய ஐயர் உணர்த்தினார்.

## விதவை மறுமணம்

ஜி.சுப்பிரமணி ஐயருக்கு சிவப்பிரியாம்பாள் எனும் ஒரு மகள் இருந்தார். 1888–ல் சிவபிரியாம்பாள் திருமணம் பத்தாம் வயதிலேயே, தாயாரின் விருப்பப்படி நடந்தது. பன்னிரண்டாம் வயதில் விதவையாகி விட்டார். விதவை மறுமணத்தைப் பற்றி மேடைகளில் முழங்கியவருக்கு வீட்டிலேயே ஒரு சோதனை ஏற்பட்டு விட்டது. மனம் கலங்காமல், மிக்கத் துணிச்சலுடன் மனைவி, உற்றார், உறவினர், எதிர்ப்புகளுக்கிடையே பதின்மூன்று வயதுடைய தனது மகளை பத்தொன்பது வயதான ராமசாமி என்பவருக்குத் திருமணம் செய்வித்தார்.

கெய்ன் என்னும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தமது மனநிலையைப் பற்றி பின்வருமாறு ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறினார்.

"I could not face the life-long misery of a daughter whom he loved as his own soul, and preferred the risk of ex-communication".

31.121889-ல் பம்பாய் காங்கிரஸ் ஐந்தாம் ஆண்டு மாநாட்டை ஒட்டி நடைபெற்றது. இந்தப் புரட்சித் திருமணம் பம்பாய் சமூக சீர்திருத்த இயக்கத் தலைவர்களான திலங், ரானடே ஆகியோரும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும், நாத்திக இயக்கத்தின் தலைவருமான சார்லஸ் பிராட்லா, காங்கிரஸ் ஆதரவாளர்கள் வில்லியம் வெட்டர்பர்ன் ஆகியோர் முன்னிலையில் பலர் கண்டு மகிழ நடந்தது இந்தத் திருமணம்.

சென்னை திரும்பிய மணமக்கள் ரயில் நிலயத்தில் இருந்து திருவல்லிக்கணேியில் இருந்த ஜி.சுப்பிரமணிய ஐயரின் இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். 'ஆந்திரபிரகாசிகா' எனும் பத்திரிகை தனது அலுவலகத்தில் "மணமக்கள் நெடிது வாழ்க", 'சமூக சீர்திருத்தம் வெல்க" என ஆங்கிலத்தில் அமைந்த வாசகங்கள் வரவேற்புக் கூறின. பத்தரிகைகள் பாராட்டி எழுதின.

"சந்திரிகையின் கதை"யில் பாரதியார் இந்தப் புரட்சி' திருமணத்தை பெருமைப்படுத்தும் வகையில் ஜி.சுப்பிரமணிய ஐயரையே ஒரு கதாபாத்திரமாகப் படைத்தார்.

சொல்வீரர், செயல்வீரராக மலர்ந்தார். இந்தப் புரட்சித் திருமணத்தால், கோகலே, ரானடே இருவரும் சீர்திருத்தம்

பேசியதோடு சரி, செயலில் காட்ட சந்தர்ப்பம் வந்த பொழுது சக்தியற்றவர்களாகி விட்டார்கள். கோகலே முதல் மனைவி இருக்கும் பொழுதே, இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். ரானடே முதல் மனைவி இறந்ததும் ஒரு விதவையை மணக்காமல், இளவயதுப் பெண்ணையே மணந்தார். சொல் வேறு, செயல் வேறு என வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதிகளைப் பற்றியும் ஜி.சு.வருத்தத்துடன் பின்வருமாறு குறப்பிட்டுள்ளார்.

*"... ...இவ்விஷயமாய் வெகு நாளாக நம்மவர்கள் பேசி வருகிறார்கள் பேசி வந்தும் சொன்னபடி செய்வாரை மட்டும் காணோம். .....ஆசாரத் திருத்தக்கார்களில் ஒருவர் தமது மகளுக்கு சமீபத்தில் விவாகம் செய்ய வேண்டிவந்தபோது அவளை எட்டு வயதில் விவாகம் செய்து கொடுத்தாரென்று பத்திரிகைகளில் சொல்லப் படுகிறதென்றும் இவ்விதமே ஒரு ஆசாரத் திருத்தக்காரர் தாம் வெகுநாளாய்ச் சொல்லி வந்த அபிப்ராயப்படி செய்யக் கூடிய சமயம் நேரிட்டபோது தன்மகளுக்கு சிறுவயதிலேயே விவாகம் செய்ததாகவும் சொல்லப் படுகிறது. இப்படி அநேக திருஷ்டாந்தாங்கள் சொல்லலாம். வெளியில் ஐரோப்பியர்களுக்கு இஷ்டமாய் ஆசாரத்திருத்தக் காரரென்று பேர் வரும்படியாகப் பேசி விடுகிறார்கள். வீட்டில் வந்தால் ஸ்திரீகளுடைய பேச்சுக்கு இரண்டு சொல்ல முடியாமல் தாங்கள் வெளியில் கண்டித்த அனுஷ்டானங்களுக்கு உட்பட்டு விடுகிறார்கள். ஜாதிக் கட்டுப்பாடும் இதற்குக் காரணமாகச் சொல்ல வேண்டும்" (பக்: 181; சக்ரவர்த்தினி மாத இதழ்–ஜனவரி 11, 1911; சென்னை. 'சுதேசமித்திரன்' தலையங்கம்–மறு வெளியீடு)*

## இந்து கூட்டுக் குடும்ப அமைப்பிற்கு எதிர்ப்பு

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பெண்ணுரிமை இயக்கத்திற்கு அருந் தொண்டாற்றியவர். பெண்களுக்கு

நவீன கல்வியை அளிக்க வேண்டுமென வலியுறுத்தியவர். திருமண வயது சட்ட மசோதா நாடெங்கும் விவாதிக்கப்பட்ட பொழுது, (1891-ல் பெண்ணின் திருமண வயது 10-ல் இருந்து 12-க்கு உயர்த்தப்பட்டது) இதை கடுமையாக எதிர்த்தார் திலகர். சென்னையில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் 'இந்து' போர்க்களமாகவே மாறியது ஆதரவும் எதிர்ப்பும் ஒலித்தன. ஜி.சுப்பிரமணிய ஐயர் திருமண வயது சட்ட மசோதாவை ஆதரித்து எதிர்த்தோரை கடுமையாகச் சாடினார்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கூட்டுக்குடும்ப அமைப்பை (Joint Family System) எதிர்த்ததும் கூட, பெண்கள் முன்னேற்றம் கருதியே யாகும். கூட்டுக்குடும்ப மைப்பைப் பற்றி ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியதாவது:

"Our joint family system is not favourable to that undisputed soveriegnity which she has a right to wield in the home, and even the freedom which is hers theoretically is considerably curtailed".

"Th Hindu women will lost much of her domesticity" என்பதற்கு வலுவான சான்றாக, கூட்டுக் குடும்ப அமைப்பில் பெண்ணுக்கேற்படும் அவலத்தை பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்.

"Imagine what influence the joint family system has on the position of woman. It is the feelings and ties that this system generates that procure to the women some male guardian in all her conditions and stages of life".

"சாதி என்பதை மூலவராகக் கொண்டால், கூட்டுக் குடும்பம் என்பது உற்சவ மூர்த்தி; இது அழிவு வேலையை மிகத் திறமையாகச் செய்கிறது. இது தனி நபர் சுதந்திரத்தை அழுத்துகின்றது; பெண்களை

அவமானப்படுத்துகிறது; புதிய நாகரிகத்திற்கு ஒவ்வாதவனவற்றையும் சுயநலத்தையும் வளர்க்கின்றது." இவ்வாறு கூட்டுக்குடும்ப அமைப்பை தாக்கினார் ஜி.சுப்பிரமணிய ஐயர். (பக். 133, Indian Social Reform Part I).

ஜி.சுப்பிரமணிய ஐயரின் நண்பர் வில்லியம் டிக்பி, ஜி.சுப்பிரமணி ஐயரின் இந்து கூட்டுக் குடும்ப அமைப்பைப் பற்றி படித்த பிறகு திரு.சி.ஒய். சிந்தாமணிக்கு பின்வருமாறு எழுதினார்.

"The Hindu joint family system, is something which surprised me greatly."

டிக்பிக்கு மட்டுமல்ல, நமக்கும் தான் வியப்பு ஏற்படுகிறது.

தமிழக சமூக சீர்திருத்த வரலாறு நடுநிலைமையுடன் பொய்யா விளக்கு ஒன்றையே கொண்டு எழுதப்பட்டால் அங்கு ஜி. சுப்பிரமணிய ஐயரின் மகத்தானப் பங்கு பளிச்செனச் தெரியும்.

பிற்சேர்க்கை-I

# ஜி.சுப்பிரமணிய ஐயரைப் பற்றிய ஒரு மதிப்பீடு

இந்தியாவின் சென்ற நூற்றாண்டில் தேசபக்தர்களென வெளிவந்து பல கோடி இந்தியருடைய அன்பிற்கும் பக்திக்கும் பூசனைக்கும் இலக்காய்ப் பிரகாசிக்கும் தேசபக்தர்களும், ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி முதலிய மகான்கள் தேசபக்தி என்பதை வேறு எந்த தேசபக்தர்களிடமிருந்தும் பயிலாமல் தாமே தமது கல்வியறிவினாலும் கருப்பத்திற்றானே தங்களோடு கலந்து நின்ற ஜீவகாருண்யம், பரோபகாரம், நீதியுணர்ச்சி முதலிய மகோன்னத குணங்களால் ஆக்கப்பட்ட தெய்வீக ஸ்பாவத்தினாலும் நமது தாய் நாட்டின் க்ஷேமத்தின் பொருட்டு உழைக்கவேண்டுமென்ற பரிசுத்த கடமையாகிய தேச பக்தியைத் தமக்குத் தாமே உபதேசித்தார்கள்.

ஆனால் கோபாலகிருஷ்ண கோகலே முதலியவர்கள் முறையே மஹாதேவ கோவிந்தரானடே முதலிய வேறு தேசபக்தர்களுடைய சகவாச புண்ணியத்தினாலும் உபதேசத்தினாலும் தேசபக்தி என்பதை உணர்ந்தார்கள்.

இந்த இரு வகுப்பாருள் நமது ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர், நௌரேஜி வகுப்பைச் சேர்ந்தவராவார்.

ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர் சென்னை மாகாணத்தில் திருவையாற்றைப் போன்ற அதிசாதாரணமான நாட்டுப் புறத்தில் பிறந்து வளரும் பொழுதேனும், அவர் சென்னைக்கு வந்து வாழ்க்கை தொடங்கும் பொழுதேனும், அவருக்கு தேசபக்தி உபதேசம் செய்யத்தக்க மகான்கள் ஒருவரும் இருந்திலர்.

இவரே தம்முட் கலந்துநின்ற ஜீவகாருண்ய முதலிய தெய்வீக ஸ்பாவத்தினாலும், அறிவு தேர்ச்சியினாலும், அசாதாரணமான புத்தி நுட்பத்தினாலும் தேசபக்தி என்பதை உணர்ந்து, அந்தப் பக்தியால் தூண்டப்படும் லோகோபகாரமான புண்ணியச் செயல்களிலே இந்த நிமிஷம் வரையும் தமது அரிய வாழ் நாட்களைக் கழித்து வருகின்றார்.

அன்றியும் இப்பொழுது சுதேசியம் முதலிய தேசாபிமானக் கிளர்ச்சிகள் தோன்றியபின் நமது மாகாணத்திற்றானே முளைத்து வளரும் இளந் தேசாபிமானிகட்குத் தேசபக்தி புகட்டியது நமது ஐயரென்றேனும் அல்லால் அவருடைய செயல்க ளென்றேனும் சொல்லுதல் கேவலம் உபசார வசனமாகாது.

ஸ்ரீ நௌரோஜி பாம்பே மாகாணத்துக்கு இருப்பது போல நமது ஐயரும் சென்னை மாகாணத்துக்கு

முதலாவது தேசபக்தராகின்றார் என்னும் உண்மை அவருடைய சரித்திரத்தை ஆராய்ச்சி செய்யும் எல்லோருடைய மனத்திலும் முக்கியமாய்ப் பதிய வேண்டிய உண்மையாகும்.

தேச க்ஷேமத்தின் பொருட்டு இவர் வெளியிட்டு இருக்கும் அநேக அரிய அபிப்பிராயங்களும் மிகவும் புதியனவே யன்றி, வேறு தேசபக்தர்களிடமிருந்து இதற்கு முன் வெளிவந்தன அல்ல. இவ்வுண்மை சித்தூர் கான்பரன்ஸில் இவர் செய்த உபன்யாசமொன்றை வாசிப்பவர்க்கும் கூட இனிது விளங்கும்.

தேசபக்தர்களுக்கு 'லௌகீக அறிவு' அல்லது 'லௌகீக சாமர்த்தியம்' இருக்க வேண்டியது அவசியமென்று சிலரும், அவசியமல்ல வென்று சிலரும் கூறுவர்கள். இதில் நமது ஐயருக்கு இந்த 'லௌகீக அறிவு' இல்லை என்றே கூற வேண்டும்.

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி எல்லாவற்றையும் எளிதில் நம்பும் இயல்புடையவராய் இருந்தமையால் ஒருவன் ஒரு சமயம் அவரிடம் ஐயாயிரம் ரூபாயை மோசம் செய்து விட்டானென்று அவர் சரித்திரத்திற் கூறுப்படுகின்றது.

அது போலவே நமது ஐயரும் யாரையும் எளிதில் நம்பி விடுவார்.

சூரிய மண்டலத்தில் நிகழும் செயல்களையும் அறிந்து சொல்லும் 'தூரதிருஷ்டிக் கண்ணாடி' என்னும் கருவி சமீபத்தில் நிகழும் செயல்களை யறிவிக்க இயலாது போவது போல, கவர்ன்மெண்டாரின் செயல்களையும் அவற்றின் உட்கருத்துகளையும், அவற்றால் விளைவன வற்றையும் முன்னறிந்து சொல்லும் தீர்க்க தரிசியாகிய இவர், தம்முடன் பழகும் சாதாரண மனிதர்களின்

இயல்பையும் செயல்களையும் அர்த்தம் செய்ய வலியற்றவரானார்.

சொற்ப தினங்களுக்கு முன் இவருக்கு வேண்டுமென்று தீங்கிழைத்தவரே இவரிடம் வந்து காரியசித்தி பெறுவார்கள். இவருடைய சன்னிதானத்தில் நிற்பதற்குக் கூட அருகரல்லாத மனிதர் இவருடைய ஸ்நேகத்தை எளிதிற் பெறலாம்.

தம்முடைய பெருமையே இம்மட்டென்பது நமது ஐயருக்குத் தெரியாது. டாம்பீகம், தற்பெருமை, தற்புகழ்ச்சி முதலிய சொற்களின் பொருளை இவர் அறியார்.

கடல் போல் விரிந்த இந்தியா தேசத்தில், வரவு, செலவு கணக்குகளெல்லாம் கற்றுணர்ந்த இவருடைய நுட்ப புத்தியில் தமது சொந்த வரவு செலவு கணக்கின் விவரம் நுழையாது. இக்குறையே இவர் 'இந்து'வை விட்டு விலகினதற்குக் காரணமாகும்.

சென்னையைப் போன்ற மகா நகரத்தில் சென்ற முப்பது வருஷங்களுக்கு மேல் வாழ்ந்தறித்த இவர், ஒரு இரயில்வேப் பிரயாணம் செய்யும்படி நேரிட்டால், டிக்கட்டு வாங்குவதற்கும், ஜனக் கூட்டத்தில் முதலாவது, இரண்டாவது வகுப்பு வண்டிகளில் இனமறிந்து ஏறுவதற்கும் பிறருடைய உதவியையே நாடுவாராயின் இவருடைய லௌகிய ஞானத்தையும், சாமர்த்தியத்தையும் விரித்துக் கூறுதல் அவரைப் பரிஹிசிப்பதில் போலாகும்.

இவருடைய கம்பீரமான தோற்றத்தைக் கண்டும், சப்தத்தைக் கேட்டும் எவரும் அச்சமடைவார்களெனினும் சிறிது நேரம் சம்பாஷணை செய்தவுடன் அவர் வெகு சாமான்யமான நண்பராய் விடுவார்.

மனிதருடைய வாய்ச் பேச்சினாலேயே அவர்களை மதித்துவிடும் ஸ்பாவ குணம் இவரிடம் இருப்பதனால்

இவருக்கு நேர்ந்த கஷ்டங்களும் பல உள. இவர் தமது ஜனத்தலைமை ஸ்தானத்தில் செய்ய வேண்டிய பொதுக் கடமைகளிலும் பொது முயற்சிகளிலும் மேற் கூறிய ஸ்பாவகுணமும் கலந்து விடுகின்றமையால் சில சமயங்களில் இவர் பெருங்காரியங்களிலும் கூட அற்ப மனிதர்களுடைய அற்ப போதனைகளின் உட்கருத்தை யறியாமல், அவற்றின்படியே நடந்தும் விடுவார். இதனால் இவர் அநேக முறைகளில் பொது ஜன கண்டனத்திற்கும் ஆளாயிருப்பார்.

ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர் இங்கிலீஷிலேனும், தமிழிலேனும் பிரசங்கம் செய்யும் சக்தியில் முறையே பானர்ஜி அல்லது ஆறுமுக நாவலர் போன்ற நாவன்மையும் சொல்லழகு முடையவரல்ல வெனினும், நினைத்த கருத்தைக் குறிப்பாயும் கண்டிப்பாயும் வெளியிடும் சக்தி அவரிடம் போதிய மட்டுமிருக்கின்றது. இவருடைய சொற்கள் இதயத்தின் அடிவாரத்தினின் தோன்றும்.

இங்கிலீஷ் எழுதும் திறனில் ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய ஐயர் முதல் வகுப்பைச் சேர்ந்தவரே யாவர்.

பேசும் சக்தியிலும் எழுதும் சக்தி நமது ஐயரிடம் மிகவும் அதிகம். எழுதும் விஷயங்களில் உள்ளது உள்ளவாறே கண்டிப்பாயும், தாக்ஷண்யமும் பயமுமின்றியும் எழுதலே இவருடைய விசேஷ குணம்.

"ஊசி மிளகாயை அறைத்தாற்போல் காரமாய் எழுத வேண்டும்" என்று தமது சீடர்களுக்குப் புத்திமதி கூறுவார். மிளகாயின் காரம் குறையும்படி உப்பையும் புளியையும் சேர்ப்பது போல தாக்ஷண்யமான மொழிகளில் வழவழ வென்று எழுதல் இவர்க்குச் சிறிதும் பிடியாது.

இவர் பிடிவாதமும் தாக்ஷண்யமும் உடையவர் என்று பலர் குறை கூறுவர். ஆனால் இவர் தம் மனச் சாட்சிக்கு ஒவ்வாதவற்றை வேண்டுமென்று கபடமாக எழுதமாட்டார்.

இவர் பெயரளவில் இந்துவே யாயினும் அவருடைய இந்து மதமானது, ஆலய தரிசனம், கருமானுஷ்டான முதலிய மதவேஷங்களுடன் அமைந்த தன்று. ஸர்வசீவ ஸமரசம் என்னும் இந்து மது மூலக் கொள்கையே இவருடைய உண்மை மதம்.

சமைத்த பொழுது உருசியாயிருந்த திண்பண்டங்கள் நாளானபின் ஊசிப் புழுத்து உண்போர்க்குத் தீமை விளைதல் போல, புராதன இந்துக்களால் தழுவப்பட்ட வழக்கங்களுள் இப்பொழுது தீமைக் கேதுவாய் இருப்பனவற்றைக் கழித்துத் தள்ள வேண்டும் என்பது இவர் கருத்து.

மனிதர்கள் எம்மதத்தினராயினும், எக்குலத்தினரெனினும், அவர்கள் இவ்வுலகில் செய்யும் நற்செயல்கள் அனைத்தும் ஒரு பரம் பொருளால் கவனிக்கப்படுகின்றன எனவும், அப்பொருளின் மனத்திருப்தியே மோக்ஷம் எனவும் நமது ஐயர் நம்பியிருக்கின்றார். இதுவே அவருடைய மதம்.

(குருமலை சுந்தரம் பிள்ளை நூலிலிருந்து தொகுக்கப்பெற்றது)

:நன்றி:–குமரிமலர், 1972

## பிற்சேர்க்கை - 2.

### ஆசாரத்திருத்த வியாசங்கள்

சுதேசமித்திரனில் வெளிவந்த பல சமூக சீர்திருத்தத் தலையங்கங்களைத் தொகுத்து 'ஆசாரத்திருத்த வியாசங்கள் எனும் தலைப்பில் 1914இல் சுதேசமித்திரன் அலுவலகம் தனி நூலாக வெளியிட்டது. இப்புத்தகம் பழக்க வழக்கங்களில் தோன்றும் மாறுதல்களைக் குறிக்கும். அப்போதுப் போதைய சம்பவங்களும் அவைகளை அனுசரித்த நம் கருத்துகளும் அடங்கி உள்ளது. சுதேசமித்திரன் பத்திராதிபர் ஜி.சுப்பிரமணிய ஐயரால் இயற்றப்பட்டது. சென்னை, சுதேச மித்திரன் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஆசாரத் திருத்தம் எனும் தொடர் "சோஷல் ரிபார்ம்" எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாக அக்காலத்தில் கொள்ளப் பெற்றது. நூலின் ஆங்கிலத் தலைப்பிலும் 'Essays on Social Reform" என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

*10.4.1941 சுதேச மித்தரனில் பக்கம் 12ல் வெளிவந்த விளம்பரத்தில் நூலின் பக்கங்கள் 250 என்றும் விலை 10 அணா என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது.*

*28.6.1914இல் வெளிவந்து விட்டது எனும் குறிப்பிடல் "ஸ்திரீகளுக்கு அவசியமான புத்தகம்" எனும் குறிப்பும் இடம் பெற்றுள்ளது. "ஸ்தீரிகளைப் பற்றி மாத்திரம் இத்தனை விஷயங்கள் அடங்கியிருக்கின்றன" என்று அறிவித்து மொத்தம் 24 விஷயங்கள் பட்டியலைப் பெற்றுள்ளன.*

**முகவுரை**

*இந்நூலிற்கு சீர்திருத்தச் செம்மல் ஜி.சு. எழுதிய முகவுரை குறிப்பிடத்தக்க ஒரு சமூக சீர்திருத்த ஆவணமாகும். எனவே அது இங்கு முழுமையாக பின்வருமாறு வழங்கப் படுகிறது.*

*"இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள வியாசங்கள் இந்துக்களின் ஆசாரங்களிற் சில மாற்றப்பட்டு, அவைகள் தற்கால நிலைமைகளுக்கு ஒத்தனவாயிருக்க வேண்டுமென்றும், இந்தியராகிய நமக்குள் உத்தம குணங்கள் தோன்றி உயர்ந்த யோக்கியதை உண்டாக வேண்டுமென்றும், நம் ஜனங்களுக்குப் போதிக்க முயலுகின்றன. இவைகள் பெரும்பாலும் சுதேசமித்திரன் பத்திரிகையில் அப்போதப்போது தலையங்கத்தில் தோன்றியவைகள். இவைகளில் சிலவற்றை எடுத்தும் சிலவற்றைச் சேர்த்தும் படிப்பவர்க்கு விளங்குமாறு வரையப்பட்டிருக்கின்றன.*

*இராஜாங்க விஷயங்களைப் பற்றியாவது தொழில்கள் விஷயங்களைப் பற்றியாவது இவைகளில் சொல்லப்பட வில்லை. ஆசாரத் திருத்தங்களைப் போல இவ்விஷயங்களும் தேச நன்மைக்கு அவசியமானவைக*

ளாதலால் இவைகளைப்பறி வேறு எந்த கனவானாவது தனியான வியாசங்கள் எழுதி ஜனங்களுக்கு அறிவூட்ட வேண்டுமென்பது நம் எண்ணம். ஆயினும் எவ்வித அபிவிருத்திக்கும் ஜனங்களுடைய அனுடானங்களும் குணங்களும் அப்போதப்போது காலத்துக்குத் தக்கபடி மாற வேண்டியது அவசியம். மேல் நாடுகளில் சரித்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்தால், அங்குள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் தேசத்து நிலைமைகள் மாறி வருவதற்குத் தக்கபடியும், மற்ற தேசங்களுடைய ஜனங்கள் என்ன நிலைமைகளிலிருக்கிறார்களோ அவைகளுக்குத் தக்கபடியும், மாறிவருவது விளங்கும். ஜப்பான் தேசத்து ஜனங்களும் இப்படியே மாறியிருக்கிறார்கள். இந்தியரைவிட நாகரிகமும் வல்லமையும் அதிகமாய்ப் பெற்று முன் செல்லும் ஜனங்கள் எவ்வித அனுஷ்டானங் களையும் குணங்களையும் பெற்று வாழ்கிறார்களோ, அவர்களைப் போல நாமும் முன்னேற்றத்தைத் தடுக்கும் ஆசாரங்களையும் குணங்களையும் மாற்றி அவர்களைப் போல் ஆசாரங்களும் குணங்களும் கொண்டவர்களாக வேண்டும். இப்படிச் சொல்லுவதால் இந்தியர் ஐரோப்பியரைப் போல உடுப்பதும் உண்பதும் வீட்டுக்குள் அவர்களைப் போல் ஆசாரங்கள் அனுஷ்டிப்பதும் அவசியமென்பது நம் கருத்தல்ல. பழையகாலத்து மனுஷரென்று, நம்மவர்களை, புதுமைகளை யேற்ற சில இந்துக்கள் நிந்தித்தும் அவர்கள் மனதிற்கு வருத்த முண்டாகும்படியான சில ஆசாரங்களை அனுடித்தும் மனதிற்கு வருத்தமுண்டாகும்படியான சில ஆசாரங்களை அனுஷ்டித்தும் வருகிறார்கள். இதனால் சாமான்ய ஜனங்களுக்கு வீண்வருத்தத்தை உண்டு பண்ணாமல் அவர்களை நேசமாயும் சமாதான வீண்வருத்தத்தை உண்டு பண்ணாமல் அவர்களை நேசமாயும் சமாதானமாயும் நடத்திக் கொண்டு செல்லவேண்டும்.

இப்படிச் செய்தால் மட்டும் பழமை அனுஷ்டிக்கும் திருத்தக்காரர்களுக்கும் எப்போதும் போன்ற அன்யோன்னியம் ஸ்திரப்பட்டு, புத்திமான்களான சிலர் புத்தியற்ற பாமர ஜனங்கள் பலரைத் தழுவிச் செல்லுதல் சாத்தியமாகும். நம் இந்தியா தேசம் ஆதி காலத்தில் இருந்தது போல இப்போதும் தனிப்பட்ட தேசமென்று நினைப்பது பேதமை பிரிட்டிஷ்தேசம் நம்மை ஆளும் தேசமாய் விட்டபடியால், அத்துடன் நாம் பலவித சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுப் போனோம். அப்படியே ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களும் இந்தியாவுடன் வியாபார சம்பந்தம் பெற்று, அந்த சம்பந்தம் வரவர நெருங்கி பலவழிகளில் இப்படிப் பெற வேண்டுமானால் அவர்களைப்போல நாமும் அவசியமான போது பழைய ஆசாரங்களை மாற்றிப் புதிய ஆசாரங்களை அனுஷ்டித்து சில உத்தம குணங்களையும் பெற்றவர்களாக வேண்டும். அப்போதுதான் அவர்களோடு நாமும் சரிசமானமான போட்டி செய்த நமக்கு அவசியமான நன்மைகளில் வெற்றிபெறுதல் சாத்தியமாகும். அப்படியில்லாமல் அயல் தேசத்தார் சில வழிகளில் செல்ல, நாம் மட்டும் பழைய வழிகளையே பற்றிப் பின் நிற்போமானால் சிலகாலத்துக்குள் நம் கதி நாசமாய் முடியுமேயன்றி வேறு விதமாய் முடியாது. தற்காலம், இந்தியா தேசத்தில், மகமதியர், கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர் மூன்று வகுப்பினரும், முக்கியமாய் மகமதிய வகுப்பினர், தேசத்தில் செல்வாக்கையும் கவர்ன்மெண்டின் அபிமானத்தையும் பெற விசேஷ முயற்சிகள் செய்து வருகிறார்கள். இப்படிச் செய்வது முற்றிலும் சரியேயன்றி தப்பல்ல. ஆனால், அவர்களைப் போல நாமும் நம்முடைய சுபாவமான மந்தகதியை விட்டு தீவிரகதியைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் இந்துக்களாகிய நாம் பிற்பட்டு ஏமாந்து நிற்காமல் மற்ற

வகுப்பினருடன் சரிசமனமாய்த் தோளோடு தோள் நின்று, இந்திய சமூகம் முழுதும் மற்ற தேசங்களுடைய சமூகங்களோடு போட்டி போட்டு ஜயம் பெறும்படி செய்ய, வல்லவராவோம்.

"இத்தகைய கருத்துக்களால் தூண்டப்பட்டு நமது அனுபோகத்தாலும் நம் சிற்றறிவினாலும் தோன்றும் புத்தி வசனங்களை நம் தேசத்தினர்க்குச் சொல்லவேண்டு மென்று விரும்பி இப்புத்தகத்தைப் பிரசுரஞ் செய்யலானோம். நம்முடைய ஆசாரத் திருத்தங்களில், நம் ஸ்திரீகளின் நிலைமையைத் திருத்தி, அவர்களுக்குக் கல்வியும் சுதந்திரமும் கொடுத்து, கிரககிருத்தியங்களைத் திறமையாயும் சம்சாரத்துக்கு நன்மை உண்டாகும் படியாயும் செய்வது மன்றி, தேச விஷயங்களில் அவர்கள் அக்கறை பாராட்டிப் புருஷருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதும் முக்கியம். புருஷர், ஸ்திரீ, குழந்தைகள், அனைவரும் அவர்களுடைய புத்தியையும் அறிவையும் விரியச் செய்து கொண்டு போவது மன்றி, அவர்கள் சரீரத் திடம் பெற்று, நோவு நொடியில்லாமல் தீர்க்காயுளுள்ள வர்களாய் வாழவேண்டும். தேச நன்மைக்குற்ற தொழில் முதலிய பொது முயற்சிகளில் ஊக்கம், ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, ஆகிய பெருங்குணங்களைப் பெறவேண்டும். அன்னிய தேசங்களுக்கு லக்ஷக்கணக்கான இந்தியர்கள் போய்வரவேண்டும். பிறந்த இடமே உலகமென்று அறியாமையால் மோகித்து மோசம்போகக் கூடாது. இத்தகைய விஷயங்கள் சம்பந்தமாயய் நம் அனுபோகத்துக்கும் புத்திக்கும் எட்டிய மட்டும் நம்முடைய தேசத்தாருக்கு அறிவுறுத்துவதை நோக்கமாகக் கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்வதே எல்லாப் புண்ணிய கைங்கரியங்களிலும் உத்தமமான கைங்கரியமென்று நம்பியிருக்கும் – ஜி.சுப்பிரமணிய அய்யர்."

இந்நூல் பதினொன்று அத்யாயங்களாக பகுக்கப் பட்டுள்ளது. 60 கட்டுரைத் தலைப்புகளில் பெண்கள் முன்னேற்றத்திற்காக 24 தலைப்புகள் உள்ளன. இந்நூல்பற்றிய சு.மி. விளம்பரத்தில் பெண்ணியம் பேணுவதும் இதழின் கோட்பாடுகளில் நன்றாக அமைந்தது. குழந்தைகள் நலம் குறித்த கட்டுரைத் தலைப்புகளில் இவையேயல்லாமல் தலித்திய ஆதரவு, சாதி எதிர்பபு, தேசாபிமானம் மற்றும் பொது அறிவுத் தூண்டும் தலைப்புகளும் குறிப்பிடத்தக்கன.

## பிற்சேர்க்கை - 3.

### விவேகோதயம் – 1916

### –சமாசாரக் கொத்து

காலம்சென்ற ஸ்ரீமத் ஜி.சுப்பிரமணிய ஐயரவர்கள் தமக்கென வாழாமல் பிறர்க்குரியவராயும்;

"சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிவாம்

சொல்லிய வண்ணம் செயல்"

என்ற பொய்யா மொழியை பொய்மொழியாக்கி புகழுற்றோரும் ஹிந்து, சுதேசமித்திரன், நேடிவ் ஸ்டேட்ஸ் அண்ட் யுனைடெட் இண்டியா, மதராஸ் ஸ்டாண்டர்ட், முதலிய பல பத்திரிகைக்ளை நடத்திய பரோபகாரியும்

நமது மாகாணச் செந்தமிழ் சங்காபிமான சீலர்களுள் ஒருவரான கணம் ஸ்ரீமான் ஜி.சுப்பிரமணி ஐயரவர்கள் ஏப்ரல் மாதம் 18ந்தேதி யன்று தமது ஒரே மகனையும் உற்றார் உறவினரையும் பிரிந்து விண்ணுலகெய்திய தறிந்து அத்தியந்த விசன மடைகிறோம். விசன மிகுதியால் இம் மகானைப் பற்றி இப்பொழுது ஏதும் எழுதத் தோன்றவில்லை. ஸ்ரீமான் ஜி.சுப்பிரமணிய ஐயரது பிரிவு மதுரைக்கெட்டிய தக்ஷணமே, மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் ம.கோபாலகிருஷ்ணரவர்களின் அக்ராஸனத்தின் கீழ் ஓர் விசேஷக் கூட்டம் கூட்டினர். ஐயரவர்களின் ஜீவிய சரித்திரம் அக்ராஸநர் கூறியவுடன் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. இன்று சுதேசமித்திரன் ஹிந்து முதலிய பத்திரிகைகளில் ஐயரவர்களின் அருமைக் குமாரர் டி.எஸ்.விசுவநாதையர் அவர்களுக்கும் ஆக்ராஸநர் மூலம் அனுப்ப வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

–பத்திரிகாதிபர்

# புதிய விழிப்பின்முன்னோடி - ஜி.சுப்பிரமணிய ஐயர்
# நூல் வெளியீட்டு விழா



15.4.1988–ல் மேற்கு மாம்பலம் திறனாய்வு வட்டத்தின் சார்பில் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் "புதிய விழிப்பின் முன்னோடி – ஜி.சுப்பிரமணிய ஐயர்" நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஐயா அவர்கள் தலைமையேற்று நூலை வெளியிட, ஜி.சுப்பிரமணிய ஐயரின் மகன்வயிற்றுப் பேரன் வி.சுப்பிரமணிய ஐயர் பெற்றுக் கொள்கிறார்.



15.4.1988–ல் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் "புதிய விழிப்பின் முன்னோடி – ஜி.சுப்பிரமணிய ஐயர்" நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஐயா அவர்கள் தலைமையேற்றார். மூத்த எழுத்தாளர் தமிழறிஞர் கு.ராஜவேலு உரையாற்றினார். மேடையில் வி.சுப்பிரமணிய ஐயர் வீற்றிருக்கிறார்.

## “பூங்கொடி”யின்
## பெ.சு.மணி வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கியத்தில் குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் | : | 230.00 |
| ஜி.ஏ.நடேசன், பதிப்பாளர் – இதழாளர் – தேசபக்தர் | : | 200.00 |
| நீதிக்கட்சியின் திராவிடன் நாளிதழ் ஓர் ஆய்வு | : | 115.00 |
| காங்கிரஸ் வினா–விடை மூலமும் ஆய்வும் | : | 160.00 |
| இந்திய தேசிய காங்கிரசின் தந்தை ஏ.ஓ.ஹியூம் | : | 80.00 |
| நவீன தமிழ் இலக்கியத்தில் தாகூர் கவிதையின் தாக்கம் | : | 90.00 |
| தமிழக விழிப்பின் முன்னோடி ஜி.சுப்பிரமணிய ஐயர் | : | 80.00 |
| கம்பன் புகழ் பரப்பிய வ.வே.சு.ஐயர் | : | 70.00 |
| பெ.சு.மணி ஆய்வுக் கட்டுரைகள் | : | 185.00 |
| திலகரும் தமிழ்நாடும் | : | 170.00 |
| வ.வே.சு.ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள் | : | 120.00 |
| வ.வே.சு.ஐயரின் கட்டுரைக் களஞ்சியம் | : | 125.00 |
| தமிழ் இதழியல் வரலாற்றில் ம.பொ.சி.யின் தமிழ்முரசு | : | 100.00 |
| பெ.சு.மணியின் கட்டுரைக்கொத்து (முதல் பாகம்) | : | 100.00 |
| பெ.சு.மணியின் கட்டுரைக்கொத்து (இரண்டாம் பாகம்) | : | 100.00 |
| பாரதியாரின் ஞானரதம் மூலமும் – ஆய்வும் | : | 50.00 |

| | |
|---|---|
| பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை மூலமும் வரலாற்றுப் பின்னணியும் | : 150.00 |
| வீரமுரசு சுப்பிரமணிய சிவா | : 130.00 |
| நூற்றாண்டு விழாக் கண்ட சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள் | : 120.00 |
| பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம் | : 90.00 |
| பாரதியார் பார்வையில் இராமகிருஷ்ணர் இயக்கம் | : 80.00 |
| பாரதியியல் ஆய்வு கட்டுரைகள் (முதல் பாகம்) | : ......... |
| பாரதியியல் ஆய்வு கட்டுரைகள் (இரண்டாம் பாகம்) | : ......... |
| பக்தி இயக்கங்கள் வழியே சமூக சீர்திருத்தம் ஓர் அறிமுகம் | : 125.00 |
| சமூக சீர்திருத்த வரலாற்றில் பாரதியார் | : ......... |
| தமிழகத்தில் பிரம்மசமாஜம் | : 44.00 |
| எழுத்திடைச் செழித்த செம்மல்–க.சி.வேங்கடரமணி | : 20.00 |
| தடைகளை வென்று தலைமைப்பெற்ற ம.பொ.சி. | : 7.50 |



அன்பர் மணி அவர்கள் இலக்கியப் பணி என்ற பெயரால் தங்கள் பொழுதையோ, மற்றவர்கள் பொழுதையோ போக்குவதற்காக நூல்கள் எழுதாமல் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஊட்டந் தரக் கூடிய நூல்களையே படைக்க வேண்டுமென்பதில் தீவிரவாதியாகத் திகழ்வது எனக்குப் பெரிதும் உவகையூட்டுகிறது

அமரர் **வெ.சாமிநாத சர்மா** (1895 -1978)

திரு. பெ.சு, மணி அவர்கள் தான் படித்துப் பெற்ற அறிவை அடிப்படையாக்கி நூலறிவால் நுண்ணறிவை வளர்த்துக் கொண்டவர். நூலகங்களே இவருடைய வாசஸ்தலங்கள். அறிஞருலகிலேயே சஞ்சாரம் செய்பவர். இந்த பழக்கவழக்கங்களால் என்னுடைய நெடுநாளைய நண்பரான அன்பர் மணி சிறந்த எழுத்தாளராக மலர்ந்துள்ளார்.

அமரர் **சிலம்புச் செல்வர் ம.பொ.சி.**(1906-1995)

"நிதானம், நேர்மை, நுனித்து நோக்கும் திட்பம், நெஞ்சுறுதி ஆகிய சிறப்பியல்புகளிலே ஒருமைப்பாடுடையவராய் இருக்கின்றனர்" எனும் திறனாய்வாளர் பெயர்ப்பட்டியலில் இந்நூலாசிரியர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார்.

அமரர் **பேராசிரியர் க. கைலாசபதி** (1933-1982)
( இலக்கியமும் திறனாய்வும் 1990-ப.165ல் பார்க்க )

நண்பர் பெ.சு.மணி தன் சீவிய காலத்திலேயே தான் விதைத்தவற்றுக்கான அறுவடையைப் பெற்றுக்கொண்டவர். அதனினும் பார்க்க அந்த அறுவடையின் சிறப்புக்கான பாராட்டுக்களையும் பெற்றுள்ளவர் ஆவார். இப்படியான புலமை, திருப்தி, எல்லோர்க்கும் கிட்டுவதில்லை. அந்தப் பெருமைக்காக நண்பர் பெ.சு. மணி அவர்களை மனம் நிறைய வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் **கார்த்திகேசு சிவத்தம்பி** (1932-2011)

பூங்கொடி பதிப்பகம்